கல்கி

KALKI 25.12.88 ரூ. 2.





ஈழத் தமிழரைக் காக்கப்போவது யார்?



"ஜனங்களைக் கூட்டி 'ஷோ' காட்டுகிறார்கள்!"

—சௌகார் ஜானகி சொல்கிறார்...

நடிகை சௌகார் ஜானகி சராசரியிலிருந்து கொஞ்சம் வித்தியாசமானவர். வருவது வரட்டும் என்று மனத்தில் பட்டதைப் பேசக் கூடியவர்.

"நான் சிவாஜி கட்சியில் இருக்கேன்னு யார் உங்களுக்குச் சொன்னது? ஜானகி அரசைக் காங்கிரஸ் காலை வாரி விட்ட போது, சிவாஜி எடுத்த நிலை மிகவும் பாராட்டத்தக்கது. அதனால் நேரிடையாகச் சென்று சிவாஜியைப் பாராட்டினேன். இது தான் விஷயமே தவிர, நான் அவர் கட்சியில் சாதாரண உறுப்பினர் கூட இல்லை.

"நீங்கள் காங்கிரஸில் சேரப் போகிறீர்களா?" என்று சிலர் கேட்கிறார்கள். எந்தக் காங்கிரஸ்? 1984—இல் காங்கிரஸ் கட்சியை ஆதரித்து நான் பேசிய தெலுங்கு கேஸட் லட்சக்கணக்கில் ஆந்திர மாநிலப் பட்டி தொட்டிகளிலெல்லாம் போடப்பட்டது. இன்று நான் எந்தக் கட்சியிலும் இல்லாவிட்டாலும், பரம்பரையாக எங்கள் குடும்பம் காங்கிரஸ் ஆதரவுக் குடும்பம்தான். துர்க்காபாய் தேஷ்முக் அவர்களின் கீழ் நான் சமூக சேவைகளில் ஈடுபட்டிருக்கிறேன். காந்தி, இந்தி பிரசார சபாவில் வந்து தங்கியிருந்த போது இரண்டு நாட்கள் அவருக்குப் பணிவிடை செய்யும் பாக்கியத்தைப் பெற்றவள். நான் இப்போதிருக்கும் சூழ்நிலையில் காங்கிரஸில் சேர்ந்தால் 'என்னம்மா, இன்கம்டாக்ஸ் ப்ராப்ளமா?' என்று கேட்பார்கள்!

"இன்று ஜனங்களைக் கூட்டி show காட்டுவது என்பது அரசியலில் அவசியமாகி விட்டது. நாட்டைப் பற்றிக் கவலைப்படும் அரசியல்வாதிகளின் எண்ணிக்கை மிகவும் குறைவு.

"எனக்கு, ஜெயலலிதாவை ஆறு வயதிலிருந்தே தெரியும். அவர் அம்மா எவ்வளவு கஷ்டப்பட்டு அவரை வளர்த்தாங்கன்னும் எனக்குத் தெரியும். ஜெயலலிதாவின் மனப்போக்கு அரசியலுக்குச் சிறிதும் ஏற்றதல்ல. எந்த அரசியல்வாதியும், ஜெயலலிதா அளவுக்குத் தாக்குதலுக்குள்ளாகி இருப்பாங்களான்னு சந்தேகம். இதன் விளைவாக அவர் தம் குணங்களைத் திருத்திக் கொண்டால் சரிதான்!

"'அது இலவசம், இது இலவசம்' என்று கூட்டங்களில் வாக்குறுதி கொடுக்கிறார் ஜெயலலிதா. யாரை ஏமாற்றுகிறார் அவர்? தண்ணீர் கூடக் காசு கொடுத்து வாங்கும் இந்தக் காலத்தில் எல்லாம் இலவசமாம்! காது குத்துகிறார்! என்னைக் கேட்டால் எதையும் இலவசமாகக் கொடுக்கக் கூடாது. உழைத்துச் சம்பாதித்துத்தான் பிழைக்க வேண்டும். அரசு, தரமான கல்வியை மக்களுக்கு அளித்தால் போதும்.

"எம்.ஜி.ஆருக்கு வாரிசு என்று இரு பெண்மணிகள் பொது மக்கள் முன்பு நிற்கிறார்கள். யாருமே எம்.ஜி.ஆருக்கு வாரிசு கிடையாது. சொத்துக்கு வேணுமானால் வாரிசு உரிமை கொண்டாடலாம். ஆனால் ஆட்சிக்கு வாரிசு என்று கூறுவது ஜனநாயகத்தில் அபத்தமானது.

"தேர்தலில் போட்டி காங்கிரஸுக்கும் தி.மு.க.வுக்கும்தான் இருக்க வேண்டும். காங்கிரஸ் தனித்து நின்று தோற்றாலும் பரவாயில்லை. குறைந்தபட்சம் மரியாதையாவது மிஞ்சும்.

"இப்போதிருக்கும் தமிழக அரசியல் சூழ்நிலையில், சிதைவு படாத ஒரே கட்சி தி.மு.க.தான். அவர்களின் வோட்டு வங்கி கட்டுக்கோப்பாக அப்படியே இருக்கிறது.

"இந்த நாட்டில் பெரும்பாலான மேல்தட்டு மக்கள் வோட்டுப் போடச் செல்வதில்லை. இது மிகவும் மோசமான போக்கு. ஒவ்வொருவரும் வோட்டுச் சாவடிக்குச் சென்று தம் கடமையைச் செய்ய வேண்டும்."

சந்திப்பு: **கௌசல்யா**

படம்: **ஜார்ஜ் பிரான்ஸிஸ்.**



"அணுமின் நிலையம் ஆபத்தானதே..."

—டாக்டர் தெய்வநாயகம் அடித்துச் சொல்லுகிறார்

சென்னையில் மருத்துவராகப் பணியாற்றும் டாக்டர் சி. என். தெய்வநாயகம், அணு ஆயுதமற்ற உலகத்துக்கான மக்கள் அமைப்பு என்பதன் அமைப்பாளர்களில் ஒருவர். அவர் கூறும் வாதங்கள்தாம் இவை......

இயற்கையாகவே எல்லா இடங்களிலும் கதிரியக்கம் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் இது மிக மிகக் குறைவாக இருப்பதால் யாருக்கும் பாதிப்பு ஏற்படுவதில்லை. ஆனால் ஓரிடத்தில் அணுமின் நிலையம் ஏற்படுத்தப்படும் போது அதிலுள்ள அணு உலையிலிருந்து வெளியேறும் கழிவுப் பொருள்களிலிருந்து ஏராளமான அளவுக்குக் கதிரியக்கம் பரவுகின்றது. இது மனிதர்கள் உட்பட எல்லா உயிரினங்களையும்

அணுக் கதிரியக்கம் என்றாலே எல்லோருக்கும் செர்னோபில்தான் நினைவுக்கு வருகிறது! அணுமின் நிலையங்களிலிருந்துதான் கதிர்வீச்சு ஏற்படும் என்பதில்லை. எக்ஸ்—ரே எடுக்கும் போது கூட ஏராளமான கதிரியக்கம் நம் உடலைப் பாதிக்கிறது. கதிரியக்கத்தை வெளியிடும் யுரேனியம், ரேடியம், பொட்டாசியம், தோரியம் போன்றவை இயறகையாகவே பல இடங்களிலும் இருப்பதால், இயல்பாகவே நமது அண்ட வெளியில் கதிரியக்கம் இருக்கத்தான் செய்கிறது: கடல் நீரிலுள்ள பொட்டாசியத்தின் மொத்தக் கதிரியக்கத்தின் அளவு அணு உலையில் இருக்கும் கதிரியக்கத்தை விட ஐந்நூறு மடங்கு அதிகம்!

சாதாரணமாகக் கேரள மாநிலத்திலும் கன்னியாகுமரியிலும் மற்ற இடங்களிலுள்ள சராசரிக் கதிரியக்கத்தின் அளவை விட ஆறு மடங்கு அதிகமாக உள்ளது. அங்குள்ள மக்களில் யாரும் அந்தக் கதிரியக்கத்தால் பாதிக்கப்பட்டதாகச் செய்தியில்லை.

கல்பாக்கம் அணுமின் நிலையத்தைச் சுற்றியுள்ள பத்து கிராமங்களிலும் கதிரியக்க அளவுகள் கணக்கிடப்பட்டுள்ளன. அவை பாதுகாப்பு எல்லைகளுக்கு உட்பட்டுத்தான் இருக்கிறது. அடிக்கடி இச்சோதனை நடத்தப்பட்டுக் கதிரியக்கத்தின் அளவு கட்டுப்பாட்டுக்குள் இருக்குமாறும் பார்த்துக் கொள்ளப்படுகிறது.



டாக்டர். சி. வி. சுந்தரம்.

கல்பாக்கம் அணுமின் நிலையத்தின் இயக்குனர் டாக்டர் சி. வி. சுந்தரம், மற்றும் டாக்டர் எல். வி. கிருஷ்ணன் ஆகியோரின் வாதங்கள் இவை......

கதிரியக்கத்தால் பாதிக்கப்படும் போது உடல் குறையுள்ள குழந்தைகள் பிறக்க வாய்ப்புண்டு என்பது உண்மைதான். ஆனால் எந்த அளவுக்கான கதிரியக்கத்தால் என்பதைக் கவனிக்க வேண்டும். இயற்கை

பாதிக்க ஆரம்பித்து விடுகிறது.

உதாரணத்திற்குக் கல்பாக்கம் அணுமின் நிலையத்தை எடுத்துக் கொள்வோம். அங்குள்ள அணு உலையினால் ஆண்டொன்றுக்கு நூறிலிருந்து இருநூறு மில்லி ரெம் (மில்லி கிராம் போன்று கதிரியக்கத்தை மில்லி ரெம் என்று கணக்கிடுகிறார்கள்) வரை கதிரியக்கம் வெளிப்படுவதாகச் சொல்லப்படுகிறது. சுற்றுப்புறச் சூழல் ஆய்வாளர்களின் கணக்குப்படி கல்பாக்கத்தில் ஏற்படும் கதிரியக்கம் ஆண்டுக்கு இரண்டு மில்லி ரெம் வீதம் அதிகரித்தும் வருகிறது. ஆயினும் இதைவிட அதிக அளவு இருக்குமென்பதே எங்களைப் போன்றோரின் நம்பிக்கை.

பன்னாட்டுக் கதிரியக்கத் தடுப்புக் குழுமத்தின் பரிந்துரைப்படி ஒரு நபருக்கு அவரது வாழ்நாள் முழுவதும் ஐம்பதாயிரம் மில்லி ரெம்முக்கும் அதிகமாகக் கதிரியக்கம் தாக்கக் கூடாது. அப்படித் தாக்கினால் அது உயிருக்கே ஆபத்தாய் முடியும். இந்நிலையில் கல்பாக்கம் அணுமின் உலையில் வேலை செய்யும் சில அதிகாரிகளைச் சில ஆண்டுகளுக்குள்ளாகவே முப்பதாயிரம் மில்லி ரெம்முக்கும் அதிகமான கதிரியக்கம் தாக்கியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இது உண்மையானால் எத்தனை பெரிய அதிர்ச்சியான விஷயம்!

கல்பாக்கத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் கடந்த பதினெட்டு ஆண்டுகளில் பிறந்த 3794 குழந்தைகளில் பத்துக் குழந்தைகள் உடல் ஊனத்தோடு பிறந்துள்ளன. 247 இறப்புகளில் 27 பேர் புற்று நோயால் மாண்டவர்கள். பதினைந்து பேர் ரத்தப் புற்று நோயால் இறந்தவர்கள். நூற்றுப் பதினைந்து தம்பதிகளுக்குக் குழந்தை பிறக்காது என்ற நிலை. இந்தப் புள்ளி விவரங்களெல்லாம் தேசிய அளவிலான சராசரியோடு ஒப்பிட்டால் மிகவும் குறைவானதுதான் என்று விஞ்ஞானிகள் சொல்கிறார்கள். ஆனால் இவையெல்லாம் கதிரியக்கம் காரணமாக ஏற்பட்டதல்ல என்று அந்த விஞ்ஞானிகளால் அடித்துச் சொல்ல முடியுமா?

அணுமின் நிலையத்தின் மிக முக்கிய



• அணுமின் நிலையத்திற்கு எதிராகப் பிரசாரம்...

"ஆபத்தைத் தடுக்கப் பாதுகாப்புகள் ஏராளம்..."

— விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்

யாகவே உள்ள கதிரியக்கம் காரணமாகப் பத்தாயிரத்தில் ஒரு குழந்தை அப்படிப் பிறக்கிறது. மிதமான கதிர் வீச்சில் ஆயிரத்தில் ஒன்றும் மிகுந்த அளவு கதிர்வீச்சு ஏற்பட்டால் நூற்றில் ஒன்றும் அப்படிப் பிறப்பது உண்மையே. செர்னோபில் விபத்தினால் அங்கு பத்தாயிரத்தில் ஒருவருக்குப் புற்று நோய் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றும் சொல்லப்படுகிறது. ஆனால், வளர்ச்சியடைந்த நாடுகளில் ஐவரில் ஒருவர் வேறு பல காரணங்களால் புற்று நோய்க்கு ஆளாகிறார்கள் என்பதோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் கதிரியக்கம் காரணமாக ஏற்படும் பாதிப்பு மிக மிகக் குறைவே.

மேலும் அணுக் கழிவுப் பொருள்களால் மிகுந்த ஆபத்துண்டாகும் என்றும் சொல்லப்படுகிறது. மின் சக்திக்குப் பயன்பட்டது போக மீதியிருக்கும் கழிவுகளெல்லாம் மிகுந்த பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு, அவற்றின் கதிரியக்கத் தன்மை இழக்கச் செய்யப்பட்ட பிறகே வெளியேற்றப்படுகின்றன. திடக் கழிவுகள் பூமிக்கடியில் கான்கிரீட் அறைகள் அமைக்கப்பட்டுப் பத்திரமாகப் புதைக்கப்படுகின்றன.

ஏதோ அணுமின் நிலையங்கள் என்றாலே கதிரியக்கப் பாதிப்பு இருக்கும் — உயிருக்கு ஆபத்து ஏற்பட்டு விடும் என்று கண்களை மூடிக் கொண்டு பிரசாரம் செய்யப்படுகிறது. ஆனால் நாங்கள் எடுத்துக் கொள்ளும் பாதுகாப்பு முறைகள் வேறு எங்குமே இல்லை என்று சொல்லலாம். அந்த அளவுக்கு மூன்று பாதுகாப்புத் தடுப்

மூலப் பொருள்களில் ஒன்றான யுரேனியம் பீஹாரில் வெட்டியெடுக்கப்படுகிறது. அப்படி வெட்டியெடுக்கும் தொழிலாளர்களில் ஏராளமான பேருக்குப் புற்று நோயும், நுரையீரல் தொடர்பான நோய்களும் வந்திருக்கின்றன. 1978—ஆம் ஆண்டுக்கு முன்பே அமெரிக்காவின் பொதுச் சுகாதாரக் குழு நடத்திய ஆய்வுகளின் படி யுரேனியச் சுரங்கங்களில் வேலை செய்யும் ஆறாயிரம் தொழிலாளர்களுக்கு அறுநூறிலிருந்து ஆயிரத்து நூறு வரையிலான தொழிலாளர்கள் நுரையீரல் புற்று நோயால் இறக்கிறார்கள்!

இப்படி மனிதர்களுக்குத்தான் அணு உலைகளால் ஆபத்து என்பதில்லை. அணு உலைகளைக் குளிரூட்டுவதற்காகக் கடல் நீர் பயன்படுத்தப்படுகிறது. அணு உலைக்குக் கொண்டு வரப் படுவதற்கு முன்பு கடல் நீரின் சராசரி வெப்பம் 29.5 டிகிரி செல்ஷியஸ். அணு உலை குளிரூட்டப்பட்டு மீண்டும் அந்த நீர் கடலுக்குத் திருப்பி அனுப்பப்படும் போது அதன் வெப்பம் 38 டிகிரி செல்ஷியஸ்! கடல் நீரின் சராசரி வெப்பமான 29.5 டிகிரியிலிருந்து ஒரு டிகிரி செல்ஷியஸ் அளவுக்கு உயர்ந்தாலே கடல் வாழ் உயிரினங்களின் உயிருக்கு ஆபத்து வரும் என்று ஆராய்ச்சியாளர்கள் சொல்லுகிற போது, 38 டிகிரி வெப்ப நிலையில் அந்த உயிரினங்களின் கதி எப்படி நல்லபடியாக இருக்க முடியும்?

சாதாரணக் காலங்களிலேயே அணுமின் நிலையங்களால் இத்தனை ஆபத்து என்கிற போது விபத்துக் காலங்களில் சொல்லவே தேவையில்லை. அண்மையில் நடந்த செர்னோபில் அணுமின் நிலைய விபத்து பற்றி அனைவருக்கும் தெரியும். அங்கே விபத்து நடந்த போது ஏற்பட்ட ஏராளமான கதிர்வீச்சில் பாதிக்கப்பட்டு இறந்து போனவர்களின் எண்ணிக்கை முப்பத்தேழுதான் என்றாலும் பாதிப்புகள் ஏராளம். கிட்டத்தட்ட ஒன்றரை லட்சம் பேரின் உடல் நலம் என்பது இன்னமும் கண்காணிக்கப்பட வேண்டிய நிலையில்தான் இருக்கிறது. சுமார் ஆயிரம் சதுர கி.மீ. பரப்பளவு நிலம் எதற்குமே தகுதியில்லாத அளவுக்குக் கதிர் வீச்சால் பாதிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கொடுமையான விபத்து காரணமாக இனி புதிதாக எந்த அணுமின் நிலையத்தையும் உருவாக்கப் போவதில்லை என்று ரஷ்யாவே முடிவு செய்திருக்கிறது. * ரஷ்யாவுக்கு முன்னதாகவே பிரான்ஸ், ஜப்பான், ஸ்வீடன் போன்ற நாடுகள் அணுமின் நிலையம் அமைப்பதில்லை என்னும் முடிவுக்கு வந்து விட்டன. அமெரிக்காவும் அப்படியே.


இந்த நிலையில்தான் இந்தியா அணுமின் நிலையம் அமைக்க இருக்கிறது என்பது வம்பை விலைக்கு வாங்குவது போல் ஆகாதா? அணுமின் நிலையம் இயங்கினாலும், இயங்காது போனாலும் ஏன் அதை மூடி விட்டாலும் கூட பற்பல ஆண்டுகளுக்கு அப் பகுதியில் கதிர்வீச்சு இருந்து கொண்டே இருக்கும் என்னும் நிலையில் நாம் எப்படி அவற்றை வரவேற்க முடியும்?

* சமீபத்திய செய்திப்படி பூகம்பம் ஏற்பட்ட பகுதியில் எரவான் அணுமின் நிலையம் சிறிதும் பாதிக்கப்படவில்லை — சேதமடையவில்லை யெனினும் அதையும் மூடி விட ரஷ்ய அரசு தீர்மானித்துள்ளது.

புக்களை ஏற்படுத்திக் கதிரியக்கம் வெளியில் வந்து சுற்றுப்புறச் சூழலில் கலந்து விடாமல் பார்த்துக் கொள்கிறோம்.

மேலும் கல்பாக்கம் அணுமின் நிலையத்திலிருந்து வெளியேற்றப்படும் நீரினால்

• • அணுமின் நிலையம்...



கடல்வாழ் உயிரினங்கள் எந்தவிதமான கதிர் வீச்சுக்கும் ஆளாகவில்லை என்று நாங்கள் நடத்திக் கொண்டிருக்கும் பரிசோதனைகள் சொல்லுகின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக இங்கே வேலை செய்யும் நாங்கள் ஆபத்தற்ற தன்மையை முழுமையாக உணர்ந்துதான் வேலை செய்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் நம் நாட்டில் புனல் மின்சாரத்திற்கான புதுப்புது வாய்ப்புக்கள் இல்லாத போது — அனல் மின்சாரத்திற்கான நிலக்கரியும் இந்தியாவில் இன்னும் ஐம்பதாண்டுகளுக்கே கிடைக்கும் என்கிற நிலையில் அணு மின்சாரத்தை அணுகித்தான் ஆக வேண்டும். ஆறாயிரம் டன் நிலக்கரியைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை இருநூற்றைம்பது கிலோ எடையுள்ள யுரேனியத்தைக் கொண்டு அணுமின் நிலையத்தில் உருவாக்கி விட முடியும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.


தொகுப்பு: ப்ரியன்
படங்கள்: எட்வர்ட்


உங்கள் குடும்ப ஆரோக்கியத்திற்கான டின்
1கிலோ சாக்கலேட் காம்ப்ளான்
Complan®
COMPLETE PLANNED FOOD
CHOCOLATE FLAVOUR
No need to add milk
FREE!
Collect a ceramic mug with this pack.
இலவசம்!
Complan
இரண்டு 500 கிராம் டின்களுக்குப் பதில், வாங்குங்கள் 1 கிலோ சாக்கலேட் காம்ப்ளான் டின், மிச்சமாக்கிடுங்கள் 4 ரூபாய்.
அத்துடன் ஒரு பிங்கான் குவளை இலவசம். உங்கள் குடும்பத்தினருக்கு அன்றாடம் தேவைப்படும் மூலாதார சத்துணவுகள் கொண்டதாகும். காம்ப்ளான்.
வாங்குங்கள் இன்றே.
23
மூலாதார சத்துணவுகள் திட்டமிட்ட விகிதங்களில்
காம்ப்ளான்®

GX/58/213 TML

10 கணக்குகள் போட வேண்டும்.
ஆங்கில பாடத்தில் வீட்டு வேலை.
பூகோளப் பரீட்சைக்குப்படிக்க வேண்டும்.
மேலும், நாளைக்கு அவனுக்கு கிரிக்கெட் மேட்ச் வேறு இருக்கிறது.

“அம்மா, இந்த கொசுத்தொல்லைக்கு ஏதாவது செய்யேன்!”





BANISH

மாலை, இரவு நேரங்களில் கொசுவுடன் விடாது போராட வேண்டியிருந்தால், பள்ளிப்பாடத்தில் மட்டுமல்ல, விளையாட்டிலும் சாம்பியனாக இருப்பது அவ்வளவு எளிதல்ல.


ஆகவே இன்றே பேனிஷ் வாங்குங்கள்.

அது மிகவும் பாதுகாப்பானது. (உங்கள் குழந்தை அதைக் கையாளலாம்.) அத்துடன், அது கொசுக்களை விரைவாக ஒழிக்கும் மிக நவீனமான சாதனம்.

அதில் உள்ள விசேஷ எலக்ட்ரானிக் சிப், தொடர்ந்து ஒரே சீராக



சூடாவதற்கு உறுதி செய்கிறது. மிகவும் செறிவாக மருந்து பூசப்பட்ட வில்லைகள், எந்த வில்லைகளையும் விட அதிக சக்தியுடன் செயலாற்றுகின்றன. பேனிஷ் இருந்தால் கொசுத்தொல்லையே இருக்காது.



HTA 7003

மிகவும் சக்தி வாய்ந்த எலக்ட்ரானிக் கொசு விரட்டி.

காளிச்சரண்



மன்னிக்க வேண்டும் — காவல் துறையினரின் சூடு சொரணையைச் சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. கொடுமையடா சாமி. வில்லன் பெரிய்யதொரை ஜெய் கணேஷ் காக்கிச் சட்டை கமிஷனர் டில்லி கணேஷை நாயை விரட்டுகிற மாதிரியல்லவா விரட்டுகிறார்! அவரும் வாலைக் குழைத்துக் கொண்டு வளைய வருவது அருவருப்பான அசிங்கம். இறுக்கத்தைக் கார்த்திக் — கௌதமி காதல் விவகாரம் சற்றே தளர்த்துகிறது. நன்றி.

அது சரி, இந்தக் கார்த்திக் என்ன பெரிய ராபின்ஹூட் என்று நினைப்பா? ஊர் சொத்தைக் கொள்ளையடித்து — கொள்ளையென்றால் பெரும் புள்ளிகளின் அநியாயச் சம்பாத்தியத்தை அல்ல — அவருடைய தோழர்கள் பிக்பாக்கெட் அடித்து, பிளாக்கில் சினிமா டிக்கெட் விற்று இப்படி சில் லுண்டித்தனமாய்ச் சேர்த்த காசுகளைக் கொண்டு வந்து நீட்ட, அதை வைத்து ஏதோ அனாதை ஆசிரமத்துக்குச் சாக்லெட், அபலைப் பெண்களுக்கு மளிகை என்கிற மாதிரி அற்ப சேவா மண்டலி நடத்துகிறாராம். நல்லது. செய்யட்டும். அந்தப் பணத்தில் ஒரு பங்கு கோஷ்டியுடன் அவர் தண்ணியடிக்க ஒதுக்கப்படுகிறதே. இது என்ன சேவை?

இன்ஸ்பெக்டர் சரண்ராஜ் அவரை மடக்கி, 'படித்தவன், பட்டதாரி. நீ ஏன் இப்படி மாறினாய்?' என்று கேட்கிறாரே அப்போது அவர் கேட்கிறார்: ''உனக்குக் கிளார்க் வேலை வேணுமா? இருபதினாயிரம் கொடு. அக்கௌண்டண்ட் போஸ்ட் வேணுமா? ஐம்பதினாயிரம் கொண்டா. நல்லாக் கேளுங்க. தப்பில்லை. பட், இதுக்கு இன்னின்ன ரேட்னு பப்ளிக்கா போர்டு எழுதி வச்சிட்டுக் கேளுங்க.'' உயிர்த் துடிப்போடு பேசும் அந்தப் பேச்சு, வேலையில்லாப் பட்டதாரிகளின் நெஞ்சத்துப் பிரதிபலிப்பு.

'சூரியனே, சூரியனே' என்று பூபாளத்தில் ஆரம்பித்து, கவிதை வாசனையோடு வாலியின் பாடலைக் கேட்டபோது கண்ணதாசன் நினைவு வருகிறது. சந்திரபோஸின் இசை படுதோது.

கௌதமியின் தகப்பனாரை படா காந்தி பக்தர் என்று காட்டி அவரிடம் புலாபாய் தேசாய் என்று பேர் வைத்துக் கார்த்திக் நுழைந்து கவரப் பார்ப்பது காலத்துக்குப் பொருந்தாது என்பது ஒருபுறமிருக்கட்டும்; காந்தியத்தைக் கேலிக் கூத்தாக்கியிருப்பது மனசுக்குள் ரணம் உண்டாக்குகிறது.

தன்னைக் காதலிக்காவிட்டால் தூக்குப் போட்டுக் கொள்வதாய்ப் பொது மேடையில் கார்த்திக் நாடகமாடுவது தங்கவேலு காலத்ததாய் இருந்தாலும், கௌதமி சாவகாசமாய்த் தலையிட்டு, 'யோவ், நீ ஒரு வாட்டியாவது அந்தப் பொண்ணண்ட நீ என்னைக் காதலிக்கிறியா?'ன்னு ஒரு வார்த்தை கேட்டதுண்டாய்யா?' என்று பூடகச் சிரிப்போடு கேட்கும் போது புல்லரிக்கவில்லையோ?

டைட்டிலுக்கு முன்னாலேயே காக்கியுடைக் கணவனைப் பறிகொடுத்த ஸ்ரீப்ரியா, கூடியிருந்த வில்லன் குழுவினரை வெறித்த உக்கிரத்தைப் பார்த்தபோது, அவர்தான் கதாநாயகியாய் வந்து கிழிக்கப் போகிறார் என்று பார்த்தால், பைத்தியக்காரக் காக்கிக் கிழிசலுக்குள் புகுந்து கொண்டு, நடுநடுவே தலைநீட்டுகிறார். அதுவும் சும்மா வேஷமாம். அவர் செய்த காரியங்களைச் சாதிக்க அவர் அசல் பைத்தியமாகவே இருந்திருக்கலாம்!

அடித்து நொறுக்கித் தூள் கிளப்பும் ஆர்ப்பாட்டக்காரராகவே பார்த்துப் பழக்கப் பட்டுப் போன சரண்ராஜைக் குழந்தை, மனைவி பாசம் கொண்ட குடும்பத் தலைவனாயும் பார்க்கச் சற்று இதமாய் இருக்கிறது.

எஸ். எஸ். என்று அடிக்கடி தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளும் சந்திரன், காதுக்குக் கட்டை விரலைக் கொடுத்து இறக்கை அடிப்பதைப் போல் கையாட்டிக் 'காமிக்'கிறாரே, எரிச்சல்.

கதையோடு ஒட்டாவிட்டாலும் உசிலைமணியின் உபயத்தால் கொஞ்சல் போல் சிரிக்க முடிகிறது. கறிவேப்பிலை.

குளுகுளு பசுமைச் செழிப்பு காமெராவில் கொள்ளை போகிறது.

— பி. எஸ். எஸ்.

இந்த இதழ் கல்கி, வாசகர்களின் கரங்களை அலங்கரிக்கும் போது, இலங்கைத் தேர்தல் முடிந்து புதிய ஜனாதிபதி யார் என்பது தீர்மானமாகியிருக்கும் என எதிர்பார்க்கலாம். யார் பதவிக்கு வந்தாலும் நமது கவலையெல்லாம் அவர் ஈழத்தமிழரின் நலனைக் காப்பாரா? என்பதுதான். இதில் விசனத்துக்குரிய விஷயம் என்னவெனில் இலங்கைத் தமிழர்களுக்குள்ளேயே தங்கள் நலனைக் காக்கக் கூடியவர் யார் என்பது பற்றி ஒருமித்த கருத்து இல்லை என்பதுதான். 'பிரேமதாசா தான் நமக்கு நல்லது செய்வார். அவரை ஆதரிக்க வேண்டியது இலங்கைத் தமிழனின் கடமை என்று தொண்டைமான் கூறுகிறார். அடுத்த வேட்பாளரான சிறிமாவோவுக்குச் சிங்களப் பயங்கரவாதிகளான ஜே. வி. பி. இயக்கத்தினரின் ஆதரவு உண்டு.

அமிர்தலிங்கமோ மூன்றாவது வேட்பாளரான அபயகுணசேகர தான் தமிழர்களுக்கு நல்லது செய்யக் கூடியவர் என்றும் அவரை ஆதரிக்குமாறும் அறிக்கை விட்டிருக்கிறார். அபயகுணசேகர, ஜே. வி. பி. இயக்கத்தைத் துணிந்து பகிரங்கமாகக் கண்டிக்கிறவர்.

சிறிமாவோ, 'இந்திய அமைதிப்படையை வாபஸ் பெறச் செய்வேன்' என்றும், 'இந்தியா — இலங்கை ஒப்பந்தத்தை நீடிக்கச் செய்வேன்' என்றும் ஒன்றுக்கொன்று முரண்பாடாகப் பேசி இருக்கிறார். பிரேமதாசா, தாம் ஒப்பந்தத்துக்கு எதிரி என வெளிப்படையாகவே கூறியுள்ளார். ஆக மொத்தம் நமது சகோதரர்களான இலங்கைத் தமிழர்களுக்கு நிம்மதியான சகஜ வாழ்வு யாராலும் உறுதி செய்யப்படவில்லை என்பது மட்டும் தெளிவு!

பிரதான வேட்பாளர்களான சிறிமாவோ, பிரேமதாசா ஆகியோரின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் சிலவற்றை இங்கு தருகிறோம். அவர்களது குண இயல்புகளைக் கணிக்க வாசகர்களுக்கு இது உதவும்.

ஈழத் தமிழரைக் காக்கப்போவது யார்?

ரணசிங்கே பிரேமதாசா:

அப்பாவைப் பார்க்க வந்திருந்தவரிடம் பையன் கேட்டான்: ''நீங்கள் யார்?''

''ராஜாமணி.''

''என்ன செய்கிறீர்கள்?''

''அரசாங்கத்தின் வருமான வரி இலாக்காவில் வேலை பார்க்கிறேன்.''

''அங்கே என்ன செய்வீர்கள்?''

''வருமான வரி கணக்கு வழக்குகளைப் பார்ப்பேன்.''

''உங்களுக்கு அரசாங்கம் என்ன கொடுக்கும்?''

''சம்பளம்.''

''எதற்காக அப்பாவைப் பார்க்க வேண்டும்?''

''அவருடைய வருமான வரிக் கணக்குகளைப் பார்த்துத் தர.''

''அப்பா என்ன தருவார்?''

''சம்பளம்.''

''அரசாங்கம்தான் சம்பளம் தருகிறதே! மறுபடி எதற்கு அப்பாவிடமும் சம்பளம் வாங்குகிறீர்கள்?''

வாயடைத்துப் போய் விட்டார் வருமான வரித் துறை அதிகாரி.

அந்தச் சிறுவன்தான் பிரேமதாசா. இலங்கை ஜனாதிபதி தேர்தலில் யூ. என். பி. என்கிற ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர். வயது 64. அப்பா பெயர் ரிச்சர்டு ரணசிங்கே.

சிறுவன் பிரேமதாசா அரிச்சுவடி கற்றுக்கொள்ள 'பூர்வ ரமா' என்கிற புத்தமத ஆலயத்துக்கு 'தன்னந்தா' என்கிற குருவிடம் அனுப்பப்பட்டான். பெரியவனாகி அரசியலில் நுழைந்து, கொழும்பு முனிசி

* பிரேமதாசா





* ஹேமா

பல் கார்ப்பரேஷன் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற போதும் பின்னர் மந்திரியான போதும் செய்த முதல் காரியம் தான் அரிச்சுவடி கற்றுக் கொண்ட ஆலயத்துக்குச் சென்று வழிபட்டதுதான். அதே போல, பிரதமர் பொறுப்பேற்ற பின்னும் செய்த முதல் காரியம் அதே ஆலய விஜயம் தான்.

பள்ளியிறுதித் தேர்வு எழுத, சைக்கிளில் போய்க் கொண்டிருந்தான் இளைஞன் பிரேம தாசா. பஸ்ஸில் போய்க் கொண்டிருந்த ஒருவர், ஜன்னல் வழியே, 'புளிச்' சென்று துப்ப, சைக்கிளில் போய்க் கொண்டிருந்த பிரேம தாசாவின் சட்டையில் வெற்றிலை பாக்குக் கறை. திகைத்துப் போன பிரேமதாசா, பரீட்சை எழுதாமல் வீட்டுக்குத் திரும்பி விட முடிவு செய்து, சைக்கிளைத் திருப்பினான். அப்போது சாலையோரத்தில் உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருந்த ஒரு முதியவர், பிரேம தாசாவை அழைத்து, சட்டையைக் கழற்றச் சொல்லி, அலசிக் கொடுத்து, "முன் வைத்த காலைப் பின் வைக்காதே, போ! காரியம் வெற்றி" என்று வாழ்த்தி அனுப்பினார். பரீட்சை முடிந்து, ரிசல்ட் வந்தது. முதல் மார்க் பெற்றிருந்தான் பிரேம தாசா!

புகழ்பெற்ற செயின்ட் ஜோசப் கல்லூரியில் தம் மகன் படித்துப் பட்டம் வாங்க வேண்டும் என்று ரணசிங்கேவுக்கு ஆசை. ஆனால் அந்தக் கல்லூரியில் கத்தோலிக்க மாணவர்களுக்கு மட்டும்தான் அட்மிஷன். அவரது தூரத்து உறவினர் ஒருவர், கத்தோலிக்கப் பெண்மணி ஒருவரை மணம் செய்து கொண்டிருந்தார். அந்தப் பெண்மணியுடன் மகனை அனுப்பி வைத்தார், கல்லூரி முதல்வரைச் சந்திக்க. முதல்வர் பிரேம தாசாவைப் பார்த்தார்.

"என்ன மதம்?"

"புத்த மதம்."

"மதம் தொடர்பான பாடங்கள் படிக்க உனக்கு ஆர்வமுண்டா?"

"நிறைய."

"புத்த மதத்தின் மேல் அத்தனை ஈடுபாடா?"

"அபாரமான ஈடுபாடு."

"எதற்காக ஈடுபாடு?"

"அது அன்பைப் போதிக்கிறது. எதிரிகளிடமும் கருணை காட்டச் சொல்கிறது."

"அப்புறம் ஏன் இந்தக் கத்தோலிக்கக் கல்லூரிக்கு வந்தாய்?"

"இங்கே நன்றாய்க் கல்வி கற்பிக்கப் படுகிறது. நான் இதை மேற்படிப்புக்கு ஏற்றதாய்க் கருதுகிறேன்."

முதல்வர் புன்னகை செய்தார். சீட் கிடைத்தது. கத்தோலிக்கப் பெண்மணியை உடன் அழைத்து வந்ததற்காக அல்ல; பிரேம தாசாவின் ஒளிவு மறைவு இல்லாத பதில்கள்தான் அதனைப் பெற்றுத் தந்தது.

பிரேம தாசாவுக்குச் சமூக சேவையில் அதிக ஆர்வம் உண்டு. மாணவப் பருவத்திலேயே ஒரு சமூக சேவை அமைப்பை உருவாக்கி, ஏழைக் குழந்தைகளுக்கும், படிப்பைத் தொடராது விட்ட சிறுவர்களுக்கும் இரவுப் பள்ளிக்கூடம் நடத்தினார். இதைப் பார்த்து விட்டுப் பலரும் வேறு பல ஊர்களில் இரவுப் பள்ளிக் கூடங்கள் ஆரம்பித்தனர்.

1940—இல் இவருடைய சமூக சேவை அமைப்பின் கூட்டம் ஒன்றுக்குப் பிரதம விருந்தினராய் வந்திருந்தவர்கள் பண்டார நாயகா தம்பதி. இன்று பிரேம தாசாவுக்கும் திருமதி பண்டார நாயகாவுக்கும்



* அபயகுணசேகர

ஜனாதிபதி பதவிக்குப் போட்டி! (கட்டுரை வெளியாகும் போது முடிவு தெரிந்திருக்கும்.)

ஸ்ரீமாவோ பண்டாரநாயகே:

ரத்னபுரா நகரத்திலிருந்து சுமார் முப்பது மைல் தூரத்தில் உள்ளது பலன் கொடா என்கிற சிறிய ஊர். இங்கு மகா வாலட்டரு மிகப் பிரபலமானவர். அவர் வீட்டில் அன்று, அதாவது 1916 ஏப்ரல் 17—ஆம் தேதி, ஒரே குதூகலம். காரணம் அவருக்குப் பேத்தி பிறந்திருந்தது தான். குழந்தைக்கு ஸ்ரீமாவோ என்று பெயர் சூட்டினார்கள். ஸ்ரீமாவோவுக்கு முன்னால் பிறந்த இரண்டு குழந்தைகளும் தவறி விட்டதால், இந்தக் குழந்தையின் பிறப்பை இரட்டிப்பு மகிழ்ச்சியுடன் கொண்டாடினார்கள். பல கோவில்களுக்கும் தாராளமாய்த் தானம் வழங்கப்பட்டது. சிங்கள முறைப்படி பலவிதச் சடங்குகள் நடத்தப் பட்டன. கோவில்களில் குழந்தையின் வளமான வாழ்க்கைக்காகப் பிரத்தியேகப் பிரார்த்தனைகள் நடத்தப்பட்டன. ஸ்பெஷல் ஜோதிடர்கள் வரவழைக்கப்பட்டு, ஜாதகம் கணிக்கப்பட்டது. ஜோதிடர்கள் குழந்தை எதிர்காலத்தில் மிகப் பிரபலமாவாள் என்றார்களாம்!

குழந்தை ஸ்ரீமாவோ, மிகவும் தைரியமாய் இருப்பாள். வழக்கமாகச் சிறு குழந்தைகளைப் பயமுறுத்தும் இருட்டு, பூச்சாண்டி போன்ற விஷயங்களுக்குத் துளியும் பயப்பட மாட்டாள். குழந்தையை ஐந்தாவது வயதில் நல்ல நேரம் பார்த்து, மழலையர் பள்ளியில் சேர்த்தார்கள். ஒரே வருடத்தில், வயசுக்கு மீறிப் படித்து விட, அடுத்து, அத்தைப் பாட்டியின் ஊரான ரத்னபுராவுக்கு அழைத்துப் போய்ப் பள்ளிக் கூடத்தில் சேர்த்தார்கள்.

தினமும் ஆயாவுடன் மாட்டு வண்டியில் பள்ளிக்குச் செல்வார் ஸ்ரீமாவோ. பிரமுகர் வீட்டுக் குழந்தை என்பதால், வழியில் பலரும் சிறுமி ஸ்ரீமாவோவுக்கு 'சல்யூட்' அடிப்பார்கள். ஸ்ரீமாவோவுக்குப் பெருமையாய் இருக்கும். ஒருநாள் மாட்டு வண்டியில் போய்க் கொண்டிருந்த போது, வண்டியின் அச்சு முறிந்து போய், ஆயா அலறிக் கொண்டிருக்க சிறுமி ஸ்ரீமாவோ, உடையிலிருந்து மண்ணைத் தட்டிக் கொண்டே எழுந்து நின்று சிரித்தாள். ஆயாவுக்குத் தைரியம் சொன்னாள். வீட்டில் பல வண்டி மாடுகள் இருந்தாலும், அவளுக்குப் பிடித்த காளை ராது. அதை வண்டியில் பூட்டினால் தான் பள்ளிக்குக் கிளம்புவாள்!

ஸ்ரீமாவோவின் தாயார் ஓர் ஆயுர்வேத வைத்தியர். அவரிடம் வைத்தியம் பார்த்துக் கொள்ளத் தினமும் நிறைய நோயாளிகள் வருவார்கள். நோயாளிகளின் காயங்களைக் கழுவிச் சுத்தம் செய்வது, பிளாஸ்திரி போடுவது, மருந்து வைத்துக் கட்டுக் கட்டுவது, மருந்துகளை அரைப்பது, நோயாளிகளுக்குத் தண்ணீர், உணவு கொடுப்பது போன்ற பலவிதமான பணிகளையும் ஆர்வமுடனும், பொறுமையுடனும் செய்வாள் சிறுமி ஸ்ரீமாவோ. சில நோயாளிகளை வீடு தேடிப் போய்ப் பார்த்து அம்மா கொடுத்தனுப்பிய மருந்துகளைத் தந்து ஆறுதல் சொல்வதும், இவருக்குப் பிடித்தமான விஷயம். ஒரு சமயத்தில் ஸ்ரீலங்காவின் பல பகுதிகளிலும் மலேரியா கடுமையாய்த் தாக்கின போது இவரது குடும்பத்தினர் ஆற்றின பணிகள் மகத்தானவை.

ஒரு தடவை, அம்மாவும் அப்பாவும் வெளியூர் போயிருந்த சமயத்தில், வீட்டின் அவுட் ஹவுஸில் தீப்பற்றிக் கொண்டது. பணியாட்கள் அலறுவது தவிர வேறு ஏதும் செய்வதறியாது திகைக்க, சிறுமி ஸ்ரீமாவோ கிடுகிடுவென இயங்கினாள். ஒரு வேலைக்காரரைக் கூப்பிட்டு, மற்ற குழந்தைகளைப் பத்திரமான இடத்துக்குக் கொண்டு போகச் சொல்லி உத்தரவு போட்டு விட்டுக் கையில் தண்ணீர் வாளியுடன் நெருப்பை அணைக்கப் போனார். அவர் முன்னுதாரணத்தை இதர பணியாட்கள் பின்பற்ற, நெருப்பு சீக்கிரமே அணைந்தது. ஊர் திரும்பிய பெற்றோர், விஷயம் தெரிந்ததும், மகளைப் பாராட்டி உச்சி முகர்ந்தனர்.

உயர்நிலைப் பள்ளிப் படிப்பின் போது ஹாஸ்டலில் தங்கியிருந்தார் ஸ்ரீமாவோ. பள்ளி நிர்வாகிகளிடமும், ஆசிரியர்களிடமும் மிக்க நல்ல பெயர் வாங்கினார். பள்ளிக் கூடத்தில் ஒருநாள் இசை நிகழ்ச்சி நடந்த போது பார்வையாளர்கள் அமர்ந்து நிகழ்ச்சியை ரசிக்க, தனி ஒருத்தியாகவே ஐந்நூறு நாற்காலிகளை வரிசையாகப் போட்டு இதர ஏற்பாடுகளையும் செய்த போது ஆசிரியர்கள் ஸ்ரீமாவோவை வெகுவாய்ப் பாராட்டினார்கள்.

பள்ளிக் கூடத்தில் படிப்பில் மட்டுமின்றிப் பாட்டு, நடனம், இசை என்று அனைத்திலும் நெம்பர் ஒன் ஸ்ரீமாவோ தான்!

அபய குணசேகரா:

ஜனாதிபதி தேர்தலில் மூன்றாவது வேட்பாளராய்க் களம் புகுந்தவர் ஒஸி அபயகுணசேகரா. தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட நடிகர் விஜய குமாரணதுங்காவுக்குத் துணை நின்ற அபயகுணசேகரா, அவர் மறைவுக்குப் பின் அவரால் தோற்றுவிக்கப்பட்ட ஸ்ரீலங்கா மகாஜனக் கட்சிக்கு முக்கிய பொறுப்பேற்றார். நல்ல ஆஜானுபாகுவான தோற்றம். இவர் ஜனாதிபதியாக வாய்ப்புகள் அநேகமாக இல்லை என்றே கூறி விடலாம். எனினும் ஜெயிக்கிறவர் தமது அமைச்சரவையில் இவரைச் சேர்த்துக் கொண்டால் நன்றாயிருக்கும் என்று பரவலாக ஒரு கருத்து ஸ்ரீலங்காவில் நிலவுகிறது.

தொகுப்பு: **எஸ். சந்திரமௌலி.**

"லஞ்சத்தைச் சமாளிக்க லஞ்சம் கொடு!"

— டாக்டர் எம். எஸ். உதயமூர்த்தி



ஊர்ப் பணத்தைக் கொள்ளையடிப்பவனை யாரும் நம் நாட்டில் கேட்பதில்லை. "ஆற்றிலே தண்ணீர் போகிறது. அப்பா குடி! அம்மா குடி!" என்பதைப் போல் வேண்டிய அளவு எதையும் செய்யலாம் என்கிற நிலைமை நம் நாட்டில் நிலவுகிறது. நீதிமன்றத்தில் விஷயம் வருகிறதென்றால் அங்கே வழக்கை இழுக்கடித்துச் சமாளித்துக் கொள்ளலாம்; காவல் துறையினர் துப்புத் துலக்குகிறார்கள் என்றால் அவர்களுக்கு வாய்ப்பூட்டும் கைவிலங்கும் போட்டு விடலாம்; ஊழல்களை ஆராய்ச்சி செய்யத் துப்பறியும் துறையினர் வருகிறார்கள் என்றால் 'சம்திங்' கொடுத்துவிடலாம்; என்கிற ரீதியில் நாடு போகிறது. "லஞ்சத்தைச் சமாளிக்க லஞ்சம் கொடு!" என்கிற நிலை நிலவுகிறது.

அதனால்தான் தொழிலதிபர்கள் வீட்டிலும், சினிமாக்காரர்கள் வீட்டிலும் 'ரெய்டு'கள் நடத்தும் அரசாங்கம், அரசியல்வாதிகள் வீட்டில் ரெய்டுகள் நடத்துவதில்லை.

வெளிநாடுகளில் எப்படி?

அமெரிக்க நாட்டில் ஜனாதிபதி நிக்சன், பொய் சொன்னதற்காகப் பதவியிலிருந்து இறங்கினார். அவரது எல்லா சகாக்களும் ஒட்டு மொத்தமாக ஜெயிலுக்கு அனுப்பப்பட்டார்கள் — உடந்தையாயிருந்த குற்றத்திற்காக.

பிலிப்பைன்ஸ் நாட்டை ஆண்ட மார்க்கோஸ் இரவோடிரவாக வெளிநாடு சென்றாலும், அவரது சுவிஸ் வங்கிப் பணம் பிலிப்பைன்ஸ் அரசாங்கத்தால் முடக்கப்பட்டிருக்கிறது. ஊழல் லஞ்சக் குற்றச்சாட்டுக்களுக்காக அவரும் அவர் மனைவியும் கோர்ட் படிகளை ஏறிக் கொண்டிருக்கிறார்கள்.

தென்கொரியாவில் இன்னும் விசேஷம்! சன் டூ வான் என்ற மனிதர் சதித்திட்டம் போட்டுப் பல படுகொலைகளைச் செய்து 1980 — இல் ஆட்சியைக் கைப்பற்றினார். ஜனாதிபதியாக ஏழாண்டுகள் ஆண்டார். லஞ்சமும், ஊழலும், அதிகார துஷ்பிரயோகமும் ஏராளம். இன்று அங்கே மக்கள் போராட்டம் — இளைஞர் போராட்டம் — எழுந்து, ஜனநாயக அமைப்பின் கீழ் ரோ டா வூ என்ற புதிய தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

நாட்டைக் கொள்ளையடித்த சன் டூ வான் மீது இன்றைய அரசாங்கம் வழக்குக்கு மேல் வழக்குத் தொடர்ந்திருக்கிறது.

நமது ஊரில் முன்னாள் முதல்வர்கள் மீதும், முன்னாள் அமைச்சர்கள் மீதும், வாரியத் தலைவர்கள் மீதும், திடீர்ப் பணக்காரர்களான அதிகாரிகள் மீதும் லஞ்ச ஊழல் வழக்குகளைத் தொடுத்து ஒரு நாலு பேரை வரிசையாகச் சிறைக்கு அனுப்பி இருந்தார்களானால் புதிதாகப் பதவிக்கு வருபவர்களுக்கு பயம் ஏற்பட்டிருக்கும். "நீ திருடன்! அவன் திருடன்!" என்று இவ்வளவு பொது மேடைகளில் அரசியல்வாதிகள் ஒருவரையொருவர் குற்றஞ் சாட்டிக் கொண்டிருந்த போதிலும், — இவர்கள் பொதுப் பணத்தைச் சூறையாடியவர்கள் என்ற பலத்த சந்தேகம் எல்லோருக்கும் இருந்த போதிலும் ஏதாவது வழக்குகள் அவர்கள் மீது தொடுக்கப்பட்டனவா? இல்லை.

தென்கொரியாவில் தலைவர் மீது மட்டுமல்ல வழக்கு. அவரைச் சேர்ந்த ஒன்பது சகாக்களும் பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுக்களுக்கு ஆளாகி இருக்கின்றனர். சன் டூ வான் என்ற அந்த முன்னாள் தலைவர் இப்போது என்ன சொல்கிறார்? "நான் செய்ததெல்லாம் தவறு. நான் வாங்கிய அரசியல் பணத்தில் மீதமுள்ள இருபத்து நான்கு கோடி ரூபாயை அரசாங்கம் எடுத்துக் கொள்ளட்டும். என் தவறை மன்னியுங்கள்!" என்கிறார். இதற்கு நேர்மாறாக இங்கே நடப்பதைக் கவனியுங்கள். "நாங்கள் புறங்கையைத்தானே நக்கினோம்?" என்று கூறுகிறார்கள்! "பத்து சதம் கமிஷன் வாங்குவதில் தவறென்ன?" என்று கேட்கிறார்கள்!

தென்கொரியாவிலோ, நடந்ததெல்லாம் அம்பலமாக்கப்பட வேண்டும்; பழைய தலைவனது அதிகார துஷ்பிரயோகங்கள் மக்கள் முன் வைக்கப்பட வேண்டும். சிறைக்குப் போக வேண்டியவர்கள் சிறைக்கும், தூக்குத் தண்டனை பெற வேண்டியவர்கள் தூக்கு மேடைக்கும் போக வேண்டும்!' என்பதில் புதிய தலைவர் ரோ டா வூ தீவிரமாக இருக்கிறார். மக்கள் இதை மகிழ்வுடன், பூரண அங்கீகாரத்துடன் வரவேற்கிறார்கள்.

'தமிழ் நாட்டிலோ, கடந்த ஆட்சிக் காலத்தில் நடந்த அலங்கோலங்களையோ ஊழலையோ நான் கண்டுகொள்ளப் போவ


தில்லை!' என்று பொது மேடையில் பகிரங்கமாக ஒரு கட்சித் தலைவர் சொல்லி இருக்கிறார்!

ஏன் சொல்லி இருக்கிறார் தெரியுமா? எதிர்க் கட்சிக்காரர்கள் இவர் மீது உள்ள கமிஷன் விசாரணைகளை மீண்டும் வெளியே எடுத்து விடுவார்களோ என்ற பயம்தான்!

வாட்டர் கேட் ஊழல்கள் வெளிவந்ததனால் — நிக்சன் பதவியில் இருந்து இறங்கியதால் — அவருடைய சகாக்கள் எல்லோரும் சிறைக்கு அனுப்பப்பட்டதால் — அமெரிக்க நாட்டில், சிறு தவறுகளைக் கூட மக்களும் பத்திரிகைகளும் பூதக் கண்ணாடி வைத்துக் கொண்டு பார்க்க ஆரம்பித்து விட்டார்கள். அரசியல்வாதிகளும் அரசாங்கமும் தவறு செய்ய அஞ்சுகிறார்கள். இதன் விளைவாக நாடெங்கிலும் பெருமளவு தூய்மை நிலவுகிறது. அதே போல, இங்கும் போஃபர்ஸ், ஃபேர் பாக்ஸ் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டுத் தண்டனை பெற வேண்டும். உள்ளூரில் நிலவும் லஞ்ச ஊழலும் அம்பலத்துக்கு வர வேண்டும்.

இப்போதுள்ள சில தமிழ்ப் பத்திரிகைகள், அந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் சொம்பு திருடினார் என்றும் இந்த அரசாங்க அதிகாரி லஞ்சம் வாங்கினார், அக்கிரமம் செய்தார் என்றும் எழுதி வருகின்றன. இது தேவைதான். ஆனால் இதற்கு மேலே — பெரிய இடத்தில், — பெரிய கொள்ளைகள் சர்வ சகஜமாகக் கொஞ்சமும் அச்சமின்றி நடந்து வருகின்றனவே அதை நிச்சயமாக நமது பத்திரிகைகள் தொட வேண்டும். தொடத்தான் போகின்றன.

பொது வாழ்வில் தவறு செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்; கண்டிக்கப்பட வேண்டும். "இது வெட்கம்! அவமானம்!" என்ற உணர்வுகள் மேலிடத் தவறு செய்தவர்கள் தெருவில் நடக்கக் கூச்சப்பட வேண்டும். அப்போதுதான் பொது வாழ்க்கை நெறிகள் நாட்டிலே உயரும்.



எம்.ஜி.ஆர். நினைவாலயம் எப்படி அமையும்?

"**நா**ங்கள் கட்டடக் கலை மற்றும் சுற்றுப்புறச் சூழல் கலை நிபுணர்கள். இதற்காகப் படித்துப் பட்டம் பெற்றவர்கள். எம். ஜி. ஆர். சமாதி, மற்றும் அண்ணா சமாதிக்குச் சென்று ஐம்பது மணி நேரத்திற்கும் அதிகமாகச் செலவிட்டு டிசைனை உருவாக்கினோம்.

"நாங்கள் முக்கியமாக மனத்தில் கொண்டது 'சுற்றுப்புறச் சூழல்' பற்றித்தான். நினைவாலயத்தில் நுழைந்து உள்ளே செல்பவர்களுக்குப் போக்குவரத்து சப்தம் கேட்காத வண்ணம் நுழைவு வாயில் அமைத்திருக்கிறோம். அதே போல் பின்புறம் உதய சூரியன் வெளிச்சம் சமாதியின் மேல் விழும்படி அமைத்திருக்கிறோம். தமிழகத்துக் கோயில்களின் அமைப்பை மனத்தில் கொண்டோம். சமாதி இருக்கும் இடத்தைக் கர்ப்பக்கிரஹம் என்று வைத்துக் கொண்டால் அதற்கேற்றவாறு நுழைவாயிலில் இருந்து செல்லும் போது, கோயிலுக்குள் செல்வது போன்ற மனநிலை உண்டாக வேண்டும் என்ற எண்ணத்தில் டிசைன் உருவாக்கப்பட்டது. நினைவாலயத்திற்குள் செல்லும்போது, ஒவ்வொரு நிலையிலும் உயரத்தை அதிகமாக்கினோம். சமாதி இருக்கும் இடம் பதினைந்து அடி உயரத்தில் இருக்கும். நினைவாலயத்துக்குள் செல்பவர்கள் செருப்பைக் கழற்றிவிட்டுத்தான் செல்ல வேண்டும். வெயில் காலத்தில் மக்கள் கஷ்டப்பட வேண்டாம் என்ற எண்ணத்தில் வழியெங்கிலும் நிழல் தரும் மரங்களை வைக்கத் தீர்மானித்தோம். மேலும் அண்ணா சமாதி அருகில் இருப்பதால், எம். ஜி. ஆர். நினைவாலயத்தின் இதயப் பகுதியை அண்ணா சமாதியின் நேர் கோணத்தில் அமைத்திருக்கிறோம். மரங்கள் முழு அளவில் வளர்ந்த பிறகு தூரத்திலிருந்து பார்த்தால் தூண்களைப் போல் நிற்கும்.


"சமாதியைச் சுற்றி மிகப் பரந்த அளவில் புல்வெளி இருக்கும். எந்த இடத்திலும் ஐந்தடிக்கு மேற்பட்ட சுவர்கள் கிடையாது. மரங்கள், மலர்ச் செடிகள், இவையே முக்கிய பங்கு வகிக்கும்.

"இப்போது நுழைவாயிலுக்கு ஒரு பக்கத்தில் உழைப்பாளர் சிலை இருக்கிறது. அதே போல் இன்னொரு பக்கமும் சிலை வைத்தால் 'பேலன்ஸ்' ஆகும் என்ற நினைப்பில் கல்வியின் மேன்மையை உணர்த்தும் சிலையை **(Triumph of Education)** வைக்க டிசைனில் இடம் கொடுத்திருக்கிறோம்."


டிசைனை உருவாக்கிய இருவரில் ஒருவரான ரகுராமன்தான் அண்ணா அறிவாலயத்தின் சுற்றுப்புறச் சூழலை உருவாக்கியவர்! "எங்களுக்கு எந்த அரசியல் தலைவர்களுடனோ அல்லது கட்சிகளுடனோ தொடர்பு கிடையாது" என்கிறார்கள் டேனியலும் ரகுராமனும்.

பேட்டி: **ப்ரியன்**


படம்: **எட்வர்ட்**



பத்திரிகை பதிவுச் சட்டம்
பத்திரிகைகள்



ஜில்ஃபுருட் கொடுத்து ஏமாத்தப் பாக்காரீங்களா? உங்க பாச்சா எங்கிட்ட செல்லாது!
வன்முறை
வன்னியர் கோரிக்கை-



பதவி
தனித்துப் போட்டி!



கல்கி

1988 டிசம்பர் 25
மலர் 47 இதழ் 21
விபவ மார்கழி 10



ஜெயலலிதாவுக்கு நன்றி!

ஜெயலலிதாவுக்கு ஒரு ஜே போட்டுவிட வேண்டியதுதான்! அவர் மட்டும் பிடிவாதமாகத் தமக்குத்தான் முதல்வர் பதவி, தமது கட்சிக்குத்தான் அதிக இட ஒதுக்கீடு என்று உறுதியாக இல்லாமலிருந்திருந்தால் — கொஞ்சமே கொஞ்சம் விட்டுக் கொடுத்திருந்தால் — காங்கிரஸுக்கு அவருடன் கூட்டுச் சேரும் துராசையை விட்டொழித்திருக்க முடியாது. அவருடைய புடைவைத் தலைப்பைப் பிடித்துக் கொண்டு தமிழ் நாடெங்கும் வளைய வந்திருக்கும். வெற்றி பெற்று முதல்வராக மூப்பனாரோ அல்லது வேறு ஒரு காங்கிரஸ்காரரோ பதவியில் அமர்ந்திருந்தால்கூட, 'ஜெயலலிதா தயவால் ஆள்கிறார்' என்ற அபகீர்த்தியை அவர்களால் துடைத்தெறிந்திருக்கவே முடியாது. எனவே காங்கிரஸ் தனித்துப் போட்டியிடுவது என்ற நல்ல முடிவுக்கு — சரியான முடிவுக்கு — வர உதவியமைக்காக ஜெயலலிதாவுக்கு வந்தனம்.

காங்கிரஸை வளைத்துப் போட ஜெயலலிதா நடத்திய ஒரு நாடகமும் நல்ல வேளை, வெற்றி பெறவில்லை. அதாவது ஜானகி அணியும் ஜெயலலிதா அணியும் இணைவதற்காகப் பேச்சு வார்த்தை நடத்துவது போல் பாவலா காட்டினார்களே, அந்தச் சூழ்ச்சியும்' பிசுபிசுத்துப் போனது காங்கிரஸின் நல்லதிர்ஷ்டம்தான். இந்தச் சூழ்ச்சிக்குப் பலியாகி காங்கிரஸ் அவசரம் அவசரமாக ஜெயுடன் ஒரு கூட்டணிக்குத் தன்னைத் தயார் செய்து கொண்டிருந்தால் அதன் கௌரவம் அதளபாதாளத்துக்குப் போயிருக்கும். நல்லவேளை, தப்பிப் பிழைத்தார்கள்!

இப்போது மக்களுக்குக் குழப்பம் இல்லை. யாருக்குத் தங்கள் வோட்டு என்று அவரவர் விருப்பப்படி மக்கள் எளிதாகத் தீர்மானம் செய்யலாம். காங்கிரஸ் வோட்டு காங்கிரஸுக்கு, தி. மு. க. வோட்டு தி. மு. க. வுக்கு, எம். ஜி. ஆர். வோட்டு இரு சக்களத்திகளில் ஒருவருக்கு என்று நேரடியாகப் போய் விழும். இதனால் யாருக்குமே பெரும்பான்மை கிடைக்காமல் போய்விடுமோ என்று சிலர் சந்தேகம் எழுப்புவார்கள். தமிழக மக்கள் இன்று வரை அத்தகைய தவறு செய்ததில்லை. இப்போதும் செய்ய மாட்டார்கள் என்று ஏன் நாம் நம்பக் கூடாது? யார் ஆட்சியில் அமர வேண்டும் என்ற தங்கள் விருப்பத்தை வலுவான முறையில் தெரிவிப்பார்கள் என்றும் நிலையான ஆட்சி அமையுமாறு கவனித்துக் கொள்வார்கள் என்றும் எதிர்பார்ப்போம்.

என்னதான் ஜெயலலிதா வீராப்பாகப் பேசினாலும், பேட்டி தந்தாலும், ராஜீவை நேரடியாகவே தாக்கவும் அவர் ஆரம்பித்து விட்டாலும், ராஜீவ் விஜயங்களால் காங்கிரஸ் பலப்பட்டிருப்பதும், சக்களத்திச் சண்டை காரணமாக அ. தி. மு. க. பலவீனமடைந்திருப்பதும் கண்கூடு. அருவருப்பு காரணமாகவே அ. தி. மு. க. வோட்டுக்களில் ஒரு கணிசமான பகுதி தி. மு. க. வுக்குப் போய்விடக் கூடும்! எனவே, உண்மையான மோதல் என்பது தி. மு. க. வுக்கும் காங்கிரஸுக்கும் இடையில்தான் இருக்கும் என்று கருதலாம்.

ஆட்சிக்கு யார் வந்தாலும் சரி, அடக்கத்துடன் ஆள வேண்டும். மறுதரப்பினர், ஜனநாயகத்தில் ஆட்சியில் அமர்வதை விடவும் முக்கியமானது எதிர்க்கட்சியின் பணி என்பதை உணர்ந்து பொறுப்புடன் செயலாற்ற வேண்டும்.

ஜனநாயகத்துக்குக் குழி பறிக்கும் தேவையற்ற சில செயல்களால் தேர்தல் ஒத்திப் போடப்பட்டாலொழிய, இத்தேர்தல் தமிழக சரித்திரத்திலேயே மிக முக்கியமான ஒன்றாக, சுவாரஸ்யமானதாக, திருப்பு முனையாக அமையப் போவது நிச்சயம்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

ஆளுநருக்கு நன்றி!

* 'காங்கிரஸ் பேரணி நிரூபித்தது என்ன?' தலையங்கத்தில் மக்களின் உள்ளப் பிரதிபலிப்பைக் காண முடிந்தது. விடுமுறை நாளிலாவது ஊர்வலத்தை வைத்து இருந்தால் மக்களின் இன்னல்களை ஓரளவாவது தவிர்த்திருக்கலாம். நூறாண்டு காலக் கட்சி என்று பெருமை அடித்துக் கொள்ளுபவர்கள் இதுபோன்ற போட்டி ஊர்வலங்களை நடத்தி மக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்துவதும் எங்களுக்கும் காசு கொடுத்து ஆள் பிடிக்கத் தெரியும் என்று காங்கிரஸ் நிரூபித்திருப்பதும் வேதனையாக உள்ளது.

சென்னை — 80, எஸ். சங்கர நாராயணன்.

* இன்றைய இளைய தலைமுறைகள் அவசியம் பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டிய நிகழ்ச்சி 'ஏழு தலைமுறை எழுச்சி'. இந்தத் தொடரை மொத்தமாக எல்லாப் பள்ளிகளிலும் போட்டுக் காண்பித்தால் மாணவ மாணவியருக்குப் பயனுள்ளதாய் இருக்கும்.

வடுவூர், எஸ். கண்ணன்.

* 'லஞ்ச அரக்கனை வீழ்த்த முடியுமா' எனும் கலந்துரையாடல் படித்தேன். பயனுள்ள கலந்துரையாடல். அரசு அலுவலகங்களில் லஞ்சம் கொடுக்காமல் காரியம் சாதித்துக் கொள்வது தங்களின் அடிப்படை உரிமை என்பதைப் பொது மக்கள் உணர்ந்து விட்டால் லஞ்ச அரக்கனைச் சுலபமாக வீழ்த்தி விடலாம். அதற்கு முதலில் பொது மக்களின் மனப்பான்மை மாற வேண்டும்.

பல்லாவரம், வி. பி. தருமராஜ்.

* 'நேற்றைய ராஜாக்கள்' சிறுகதை அருமை. நேற்றைய மாணவர், இன்றைய பட்டதாரியான பிறகு எதிர்கொள்ளும் உண்மை நிலையைப் படம் பிடித்துக் காட்டியது சிறுகதை. இறந்த காலத்தோடு நிகழ் காலத்தையும் கலந்து கலந்து விஜய் மனம் படும் பாடு என்பது இன்று எத்தனையோ இளைஞர்கள் அனுபவிக்கும் கொடுமையல்லவா!

உச்சிப்புளி, கலை ப்ரியன்.

* பாரதிராஜா மசாலாப் படம் எடுக்கக் கூடாதென்று சட்டம் எதுவும் இல்லைதான். அதற்காக, நம்ப முடியாத சண்டைக் காட்சிகளையும், 'தேவையற்ற வேறு 'சில' காட்சிகளையும் திணித்து ரசிகர்களை இப்படி அவர் ஏமாற்றலாமா என்ன?

தஞ்சை, காழி. க. இளங்கோ.

* சார்லி சாப்ளினைப் போல் நடிக்க வேண்டும் என்ற போட்டியில் கலந்து கொண்ட அவருக்கு மூன்றாவது இடமே கிடைத்தது என்பது குறித்து மூக்கில் விரல் வைக்க வேண்டியதில்லை! ஏன் தெரியுமா? ஒரு பாடல் போட்டிக்குச் 'செந்தமிழ் நாடெனும் போதினிலே....' என்ற அட்சரலட்சம் பெறும் பாடலை எழுதியனுப்பிய மகாகவி பாரதியாருக்குக் கிடைத்த பரிசே மூன்றாவது பரிசுதான்!

சென்னை — 75, வி. ச. வாசுதேவன்.

* மாணவர்களை ட்ரெக்கிங் கிளப்பில் சேர ஆர்வத்தைத் தூண்டும் வகையில் மலையேற்றத்தை ஒரு பயிற்சியாக மட்டும் கொள்ளாமல், இயற்கையின் உண்மைகளைப் புரிந்து கொள்ள அவர்களுக்கு ஒரு நல் வாய்ப்பாக ஆக்கித் தரும் ஈரோடு சிக்கையா நாய்க்கர் கல்லூரிக்கு என் பாராட்டுக்கள்.

லால்குடி, எம். இராஜேந்திரன்.

* அரசியல் தலைவர்களின் பேட்டி, மற்றும் சினிமா நட்சத்திரங்களின் பேட்டி என்றே படித்துச் சலித்துப் போன எங்களுக்கு, ஒரு நிருபரை அதுவும் பெண் நிருபரைப் பேட்டி கண்டது வித்தியாசமாயும் சுவையுடனும் இருந்தது! இக் கால அரசியல்வாதிகளிடம் புகுந்து புறப்பட்டு வரும் சீமா முஸ்தாஃபா உண்மையிலேயே துணிச்சல்காரர்தான்!

மயிலாடுதுறை, கிருட்டின. எழில்.

* அன்னம் எழுதிய 'விடையில்லாமல் ஒரு கேள்வி'யைக் கதை என்றே சொல்ல முடியாது. அழுத்தமான கதாபாத்திரங்களைப் பயன்படுத்தி, முற்போக்கான கருத்துக்களைச் சொல்லி நல்லதொரு முடிவையும் தந்திருக்கின்றார். பாராட்டுக்கள்.

மதுரை — 7, மதுரை எஸ். செல்வன்.

* சி. பன்னீர் செல்வம் அவர்கள் எழுதிய 'பாலம்' என்ற சிறுகதை என் மனத்தை நெகிழச் செய்து விட்டது. கதையில் ஓர் இடத்தில், 'இந்த வெறும் காட்டாற்றுக்கு இரண்டே கரைகள் மட்டும்தான். ஆனால் சமூகம் என்கிற காட்டாற்றுக்கு எத்தனை எத்தனை கரைகள்! அந்தக் கரைகள் என்கிற வரம்பைக் கடப்பதற்குள் எத்தனை வெள்ளங்கள்!' என்று என்னைச் சிந்திக்க வைத்தன. கதையின் முடிவு மனத்துக்கு நிறைவு தந்தது.

ஈரோடு, கனகவல்லி இருமூர்த்தி.


* பாரிமுனையில் ராஜாஜி சிலை பராமரிப்பு சம்பந்தமாகத் தாங்கள் 5.10.88 — இல் ஆளுநருக்கு எழுதிய கடிதம் தொடர்பாகப் பின்வரும் விஷயங்களைத் தங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

பொதுப் பணித்துறை, சிலையின் சுற்றுப்புறத்தில் குப்பைகளை அகற்றிச் சுத்தப்படுத்தியிருக்கிறது. சூழ்நிலை தற்போது நேர்த்தியாக உள்ளது. மேலும் பொதுப் பணித்துறையிடமிருந்து சிலையையும் அதன் சுற்றுப்புறத்தையும் பராமரிக்கும் பொறுப்பை பின்னி நிறுவனம் ஏற்றுக் கொண்டுள்ளது. சிலையைச் சுற்றி அழகிய பூங்கா அமைக்கப்படும்.

வி. என். கிருஷ்ணபாரதி,
இயக்குனர்,
செய்தி, மக்கள் தொடர்புத்துறை,
தமிழக அரசு தலைமைச் செயலகம், சென்னை — 9.



பிரபஞ்சன்
எழுதும்
சுக
போகத்
தீவுகள்
மானுடம் என்று
வெல்லும் என
வினா எழுப்பும்
பரபரப்பான
தொடர்கதை
கல்கி
15-1-89
பொங்கல்
சிறப்பிதழில்
ஆரம்பம்



காலம் கடந்த கடும் மழைகள், ...லைகளில் எதிர்பாராத வெள்ளங்கள், ...ச்சரிவுகள், பல காத தூரம் குண்டு குழிகள் — ஆம், இந்தியச் சாலைகளில் எதிர்பாராத-...ந்தை எதிர்பார்க்கலாம். இத்தகைய ...திர்பாராத சவால்களை நேரிடுவதற்கென்றே, ...யிரக்கணக்கான கிலோ மீட்டர்களை டன் ...க்கான சுமை ஏற்றிய டிரக்கில் எளிதாகக் ...டப்பதற்கென்றே பிரத்தியேகமாக ...ருவாக்கப்பட்டுள்ள டயர் விக்ராந்த். ...ந்தியச் சாலைகளில் ஓட்டுவதற்காகவே ...வீன தொழில் நுட்பத்தால் வலுப் ...டுத்தப்பட்டு வரும் நம்பகமான டயர்.

...லகின் முதன்மையான வேக ஓட்ட ...யரின் தொழில் நுட்பம்

ஒவ்வொரு விக்ராந்த் டயரின் பின்னிலும் ...ங்கிலாந்தின் ஏவான் நிறுவனத்தின் ...ம்பட்ட தொழில் நுட்பம் உள்ளது. ...ந்நிறுவனம் மோட்டார் வண்டிகளின் ...ஜாகவான, உலகின் முதன்மையான ஓட்டப் ...ந்தய டயர்கள் பொருத்தப்பட்ட ரோல்ஸ்-...ய்ஸின் தேவைகளைச் சந்திக்கும் பெரிய ...றுவனமாகும். விக்ராந்தின் ஆராய்ச்சி ...ற்றும் அபிவிருத்தி இலாகா ஏவான் ...தொழில் நுட்பத்தைப் பின்பற்றி இந்தியச் சாலைகளுக்கு ஏற்றபடி செயல்திறன் வாய்ந்ததாக டயர்களைத் தயாரிக்கிறது.

இந்தியாவின் முதல் டிரக் ரேடியலைத் தயாரித்த தொழில் நுட்பம்

விக்ராந்தின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி இலாகா டிரக் ரேடியல்களைப் பற்றி ஆய்ந்ததின் விளைவு இங்கிலாந்தின் மார்க்கெட்டின் வென்ற மிகமிக வலிமை வாய்ந்த ஒரு டயராகும். இதன் காரணமாக இங்கிலாந்துக்கு டிரக் ரேடியல்களை ஏற்றுமதி செய்த முதல் கம்பெனி விக்ராந்த் எனப் பெயர் பெற்றது.

விக்ராந்த் — புதிய வண்டியில் பொருத்தப்படும் ஒரிஜினல் பாகம்

விக்ராந்தின் செயல்திறன் நாடு முழுதும் போக்குவரத்துத் துறையில் நம்பகரமானதாக நிரூபிக்கப்பட்டுள்ளது. முன்னணி நிறுவனங்களான டெல்கோ, மற்றும் அசோக் லேலண்டு வண்டிகளில் இது ஒரிஜினல் பாகமாக பொருத்தப்படுகிறது. பெரும்பான்மையான மாநில போக்குவரத்து நிர்வாகங்களின் பஸ்களில் பல்லாயிரக்கணக்கான மக்களை நாடு முழுவதும் ஏற்றிச் செல்கிறது.

எனவே, செயல்திறன் நிரூபிக்கப்பட்டு, நவீன தொழில் நுட்பத்தைப் பின்பற்றி அமைக்கப்பட்டு, எதிர்பாராத சவால்களை நேரிட வரும்போது நீங்கள் நம்பக் கூடியதாக இருக்க வேண்டிய டயர் உங்களுக்கு வேண்டும் எனின், எந்த டயரைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதை இப்போது அறிவீர்கள்!

VIKRANT

நம்பகமான டயர்
பொறுப்பான கம்பெனி

அந்த முரடனும், சில டீச்சர்களும்...

அந்த நடுநிலைப் பள்ளியின் 'ஹெட் மாஸ்டர்' தமது அறையில் அபரிமிதமான கலவரத்துடன் காணப்பட்டார். அவருக்கு எதிரே அமர்ந்திருந்த ஆசிரியர்கள் ஒவ்வொருவர் முகத்திலும் 'அடுத்து என்ன நடக்குமோ...' என்ற அச்சம். அதிலும் குறிப்பாகச் சாந்தி டீச்சரின் முகம், பார்க்கவே பரிதாபமாக இருந்தது.

அங்கு நிலவிய நிசப்தத்தைக் கலைக்கும் விதமாக 'ஹெச்.எம்.', ''என்னம்மா சாந்தி, நீ நம்ம ஸ்கூல்ல ஜாயின் பண்ணி இன்னும் முழுசா மூணு மாதம் கூட முடியலை. அதற்குள்ளே இப்படியொரு வம்பைச் சம்பாதிச்சுட்டு வந்து நிற்கறியே! ம்... இங்கே இருக்கிற டீச்சர்ஸ்லேயே நீதான் ரொம்ப 'டேலண்ட்டட்'ன்னு நினைச்சுட்டிருந்தேன்.....!'' என்று குரலில் மிருதுத் தன்மையைத் தேக்கி வைத்துக் கொண்டு பேசியவர், பாதியில் நிறுத்தி விட்டு அவளையே சிறிது நேரம் அமைதியாகப் பார்த்தார்.

மிக மெதுவாக அவள் நிமிர்ந்தாள். அறிவுச் சுடர்விடும் அவள் கண்கள் சிவந்து போய்க் காணப்பட்டன.

அள்ளித் தெளித்த மல்லிகைப் பூக்கள் போல வெள்ளைச் சீருடை தரித்து, அதுவரை மைதானத்தில் திரிந்த மாணவ–மாணவிகள் ஒவ்வொருவராக அங்கு வந்து, குவியலாகி, ஹெச்.எம்.மின் அறையை எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டிருக்கும் அவர்களை விரட்டியடிக்க வகை தோணாத பியூன் பரமசிவம், 'பள்ளி துவங்குவதற்கான ஆரம்ப மணியை அடிக்கலாமா, வேண்டாமா...?' என்ற யோசனையில் மூழ்கிப் போய், ஹெச்.எம்.மின் தலைக்கு மேலாக மாட்டப்பட்டிருந்த சுவர்க் கடிகாரத்தைப் பார்ப்பதும், ஆசிரியர்களைக் கவனிப்பதுமாக நேரத்தைக் கடத்திக் கொண்டிருந்தான்.

சாந்தி எல்லோரையும் ஒருமுறை பார்த்தாள். பின்பு—

''என்ன சார் நீங்க... திரும்பத் திரும்ப நான் செய்ததையே தப்புன்னு சுட்டிக் காட்டறீங்க? நான் அப்படி என்ன சார் தப்புச் செய்திட்டேன்? வகுப்பறையில் பாடத்தைக் கவனிக்காம, 'கேர்ள்ஸ்' சைடுல 'ஏரோ' செஞ்சு விட்டுட்டிருந்தான். அதுக்காக அவனைக் கண்டிச்சது தப்பா? பதிலுக்கு அவன் என்னை என்ன வார்த்தை கேட்டுட்டான்.....! கெட்ட வார்த்தையில் திட்டிட்டு நான் அடிக்க எடுத்த ஸ்கேலையே பிடுங்கி உடைச்சுட்

கா.சு.வேலாயுதன்



டான். என்ன திமிர் அவனுக்கு? என்னோட இடத்துல வேறொரு டீச்சர் இருந்திருந்தாக் கூட இதைத்தான் செய்திருப்பாங்க...!'' — ஆவேசமாய்க் கூறியவள் மூச்சு வாங்க நிறுத்திக் கொண்டாள்.

''நீங்க சொல்வதை நாங்களும் ஒத்துக் கறோம் மேடம். அந்த இடத்துல நாங்க இருந்திருந்தாக் கூட அதுதான் நடந்திருக் கும். ஆனா அந்தப் பையன் பாலுவோட இடத்துல வேறொரு பையன் இருந்திருக் கணுமே....!'' — 'மேத்ஸ்' மாஸ்டர் பலரா மன் கிண்டலாகச் சொல்ல மற்ற ஆசிரியர் கள் அதை ஆமோதிப்பது போல் பேசினர்.

''ஆமாம் டீச்சர்... நீங்க அடிச்சு வெளியே துரத்தின பையனோட அப்பா பக்கா ரவுடி. எதுக்கெடுத்தாலும் கொடுவாளைத் தூக் கற ரகம். 'காளி'ன்ற அவன் பேரைக் கேட் டாலே ஊரே வீட்டுக்குள்ளே போய் ஒளிஞ் சுடும். போதாக்குறைக்கு அவன் ஏதோ பெரிய அரசியல் கட்சியில் வேற இருக்கான். இருந்திருந்து அவன் மகன் பேரை 'ரிஜிஸ் தர்'லேயிருந்து நீக்கியிருக்கீங்களே...! இனி என்ன நடக்குமோ....?'' — உள்ளூர்வாசி யான 'சயன்ஸ்' டீச்சர் கிரேஸி நெஞ்சில் கை வைக்காத குறையாகச் சொன்னாள்.

''அதற்காக முளைச்சு இன்னும் மூணு இலை விடாத ஓர் ஆறாம் வகுப்புப் பையன், பாடம் சொல்லிக் கொடுக்கிற டீச்சரை 'போடி, வாடி'ன்னு கேட்டு விட்டுக் கெட்ட வார்த்தையில் திட்டினா பொறுத்திட்டுப்



பூப் போடச் சொல்றீங்களா...?''

''பூப் போட்ட வேண்டாம் மிஸ்! பொறுத்துப் போக மட்டும்தான் சொல்றோம். அவனோ ஏடாகூடமான ஆளு. அவன் மகனைக் கையாள ஒரு தனி பக்குவம் வேணும். போன வருஷம் இதே பையன் என்னை என்ன செய்தான் தெரியுமா? தனக்கு முன்னால் உட்கார்ந்திருந்த ஒரு பொண்ணோட ஜடையைப் பிடிச்சு இழுத்துட்டான். அதுக்கு நானும் அவனைக் கண்டிச்சேன். அதுவும் வெறும் வாய் வார்த்தையால்தான். அப்புறம் வகுப்பு முடிஞ்சு நான் வெளியே போகும் போது, ஓர் உடைந்த செங்கல்லை எடுத்து வீசி என் மண்டையையே உடைச்சுட்டான். அதுக்காக அவனை நான் என்ன செய்ய முடியும்? ஒண்ணுமே செய்யலே. பல்லைக் கடிச்சுட்டுப் பொறுத்திட்டேன். அன்னைக்கு மட்டும் நான் அப்படி பொறுத்திடாம உன்னை மாதிரி செய்திருந்தா இப்படித்தான் மாட்டிக்கிட்டு அவஸ்தைப்பட்டிருக்கணும்...!'' என்று ஹிஸ்டரி மாஸ்டர் தம் புத்தி சாதுர்யத்தை அவர்கள் முன் வைக்க, மாத்ஸ் மாஸ்டர் அவர் புத்திசாலித்தனத்தை மெச்சுவது போல்,

''ஆமாம்மா... அதுதான் சரி. நீயும் அப்படியே நடந்துட்டுப் போக வேண்டியது தானே. நம்ம ஹிஸ்டரி மாஸ்டருக்கு நடந்ததை விடவா உனக்குப் பெருத்த அவமானம் ஏற்பட்டுப் போச்சு? நீ அவசரப்பட்டுட்டதுனால நாங்களும் உன் கூட சேர்ந்து அவஸ்தைப்படறோம் பாரு...!'' என்று அலுத்துக் கொண்டார்.

''என்ன சார் இது அக்கிரமமா இருக்கு...! ஒரு காலிப்பயல் ரௌடித்தனம் பண்ணிக்கிட்டு இருக்கான்... அவன் கொட்டத்தை அடக்க ஏதாவது வழி செய்யாம ஆளாளுக்குப் பேசிட்டே போறீங்களே... நீங்களெல்லாம் எதற்கு வாத்தியார் வேலைக்கு வந்தீங்க? போலீஸ் எதுக்கு இருக்கு? ஆபத்துக்குக் கூப்பிட வேண்டியதுதானே?'' — இது வரை அமைதியாய் ஓர் ஓரத்தில் உட்கார்ந்திருந்த தமிழாசிரியர் உணர்ச்சி மேலிட முழங்கினார்.

ஆசிரியர்கள் ஒருவருக்கொருவர் பார்வையைப் பகிர்ந்து கொண்டு அவருக்குப் புரியாத பாஷையில் சிரித்தனர். சாந்தி டீச்சருக்கோ சற்றே மனம் குளிர்ந்தது. இந்த பயந்தாங்கொள்ளிக் கூட்டத்திலும் துணிச்சலாகக் குரல் கொடுக்க இப்படி ஒருவர் இருக்கிறாரே என்ற தைரியம் வந்தது.

''யாரு பேசறது, தமிழாசிரியரா? என்ன ஓய்... இது என்ன இலக்கிய மன்றம்னு நினைச்சீரா, குரல் கணீர்னு கேட்கிறது? நீர் வந்து ஒன்பது மாதம் முடிஞ்சுதோ இல்லையோ, ட்ரான்ஸ்பர் வாங்கிட்டுப் போக ஆசை வந்துடுச்சோ?'' — விளையாட்டு வாத்தியார் விளையாட்டாகக் கேட்க, தமிழாசிரியர் அவரை முறைத்துக் கொண்டே. அவர் சொன்ன விஷயத்தின் உள்ளர்த்தத்தைப் புரிந்து கொள்ள முடியாது விழித்தார். அவருக்கு விளங்க வைக்கும் விதமாக ஹெச்.எம். பேசினார்:

''நீங்க நினைக்கிற மாதிரிதான் நானும் நினைச்சேன் மிஸ்டர் பரஞ்ஜோதி. காலையில பியூன் வந்து என்கிட்டே இந்த விஷயத்தைச்சொன்னதும்நம்மஊர்எஸ்.ஐ.—யை போன்ல காண்டாக்ட் பண்ணினேன். விஷயத்தைச் சொல்லிப் பாதுகாப்புக் கேட்டதுக்கு அவர் என்ன சொன்னார் தெரியுமா...? 'யாரு, காளியா... அவன்கிட்டே ஏன் சார் வம்பு வச்சுக்கறீங்க? ஏற்கெனவே மினிஸ்டரோட 'பாடிகார்டா' இருந்தவன். அவன் பேர்ல முதல்லேயே இங்கே ஏகப்பட்ட ரிப்போர்ட் இருக்கு. இருந்து என்ன செய்யறது... அந்த ரிப்போர்ட் எழுதின அதிகாரியையெல்லாம் இருந்த இடம் தெரியாம செய்துட்டான். அதனால அவன் கால்ல விழுந்தாவது சமாதானமாப் போங்க.. அது தான் உங்களுக்கும், உங்க உத்தியோகத்துக்கும் நல்லது'ன்னு அவனோட செல்வாக்கைப் பத்திப் பொட்டில அறைஞ்ச மாதிரி ஒரே போடாப் போட்டுட்டார். நானே அசந்து போயிட்டேன்....!''

தமிழாசிரியர் வாய் மூடி மௌனியானார். சாந்தியின் மனத்தில் இருந்த அரை குறை நம்பிக்கையும் சிதைந்து போக, அவள் நிஜமாகவே பயப்பட்டாள். அவர்களை மறுத்து மேலே எதும் பேச முடியவில்லை. 'வகை தெரியாமல் போய் மாட்டிக் கொண்டோமே...!' என்று உள் மனம் புழுங்கியது. தொண்டையில் ஏதோ வந்து அடைத்து விட்டாற் போன்ற உணர்வு.

''அதுக்காக இனி நான் என்ன செய்யட்டும் சார்? வேணும்னா ராஜிநாமாக் கடிதம் எழுதிக் கொடுத்துட்டுப் போயிடறேன்....!"

ஆறு மாதம் முன்பு ஐயாயிரம் ரூபாய் செலவு செய்து வாங்கின இந்த வேலை...' என்று நினைத்த போதே அவள் கண்களில் நீர் இமையை நிரப்பிக் கொண்டு வெளியேறி விடும் போல் இருந்தது.

ஹெட்மாஸ்டர் அவளையே பார்த்தார்.

''உணர்ச்சி வசப்படாதேம்மா... நடந்தது நடந்து போச்சு. அதுக்காக நாம இனி எடுக்கிற எந்த முடிவும் அவசரப்பட்டு எடுத்ததா ஆகி விடக் கூடாது. நேற்று ஏதோ ஒரு பையன் ஏடாகூட்மா நடக்கிறான்னு நீ என்கிட்டே வந்து ரிஜிஸ்தர்லேர்ந்துபேரை எடுத்திட அனுமதி கேட்டே. நானும் அவசரத்துல சரின்னு சொல்லிட்டேன். அதனால நீ செய்த காரியத்துல சரி பங்கு என்னோடதுந்தானே...?''

அவரின் பேச்சு அவளின் வறண்ட நெஞ்சத்திற்கு இதமாய் இருந்தது. சொல்லி விட்டுச் சிறிது நேரம் எதையோ யோசித்த ஹெச்.எம். வாசலில் நின்ற பியூனை அழைத்தார்.

''பரமசிவம்... அந்தப் பையனோட அப்பா நம்ம ஸ்கூலுக்கு வருவான்னு உனக்கு உறுதியாத் தெரியுமா...?'' — அவர் கேட்க, ஏதோ தேவையில்லாத கேள்வியை அவர் கேட்டு விட்டது போல் ஒரு நமுட்டுச்

சிரிப்புச் சிரித்து விட்டு, "என்ன சார் நீங்க, திரும்பவும் அதையே கேட்டுக்கிட்டு? நிச்சயமா அவன் வருவான் சார். நேத்து ராத்திரியே, பையனைப் பள்ளிக்கூட ரிஜிஸ்தர்லேர்ந்து பெயரை எடுத்துட்டாங்கன்னு அவன் பெண்டாட்டி சொல்லியிருப்பா போல. ஃபுல்லாக் குடிச்சுட்டு வந்தவன் குப்பம் முழுக்க ஆடினான். நான் வேறே அவன் வீட்டுக்குப் பக்கத்துல குடியிருக்கிறேனா... ராத்திரி முழுக்கத் தூங்க முடியாம அவனோட ஒரே ரோதனை.

"டேய் சோமாரி, வெளியே வாடா... என் பையனை ஸ்கூலை விட்டு 'எவடா' நிறுத்தினதுன்னு' வாசல்ல நின்னு கூச்சல் போட்டுப் பெரிய ஆர்ப்பாட்டமே நடத்திட்டான். நான் பயத்துல வீட்டை விட்டு வெளியே வரவேயில்லை. என் வீட்டுக்காரிதான் அவன்கிட்டே நான் ஊருக்குப் போயிட்டதாப் பொய் சொல்லிச் சமாளிச்சா. காலையில கூட நான் நேர் வழியில வரப் பயந்துக்கிட்டுப் பின்புற வழியாத்தான் வந்தேன்னா பார்த்துக்குங்களேன்... எனக்கே இந்த நிலைமைன்னா, அவன் மகனை அடிச்சு விரட்டின இந்த மச்சரை நினைச்சாத்தான் பாவமா இருக்கு...!" — பரமசிவம் தனக்கே உரிய பாணியில் நீட்டி முழுக்கித் தலையைச் சொறிந்து கொண்டே பதில் கூறினான்.

ஹெச்.எம். ஒரு பெருமூச்சுடன் நிமிர்ந்தார்.

"சரி சார்... நீங்க எல்லோரும் அவங்க வங்க வகுப்புக்குப் போய்ப் பாடம் எடுங்க. வேறு வழியே எனக்குத் தோணலை. வர்றது எதுவானாலும் சந்திச்சாகணும். சாந்தி நீயும் தைரியமாப் போய் வகுப்பை நடத்து. அந்த ரவுடிப் பயல் வந்தா நானே பேசிச் சமாளிச்சுப் பார்க்கிறேன்...!"

சலசலத்துக் கொண்டிருந்த மாணவர்கள் சாந்தி உள்ளே நுழைந்ததைக் கண்டதும் நாவடக்கி அமைதியாயினர். தனது இருக்கையில் அமர்ந்து மேஜையில் கைகளை ஊன்றித் தலையைப் பிடித்துக் கொண்டாள்.

அவள் மனக்கண் முன்னால், நேற்று அவனால் அடித்து விரட்டப்பட்ட பாலு, அழுத முகத்துடனும், முகந்தெரியாத அவனின் முரட்டு அப்பா கோணல் மாணலான உருவத்தில் கையில் கொடுவாளுடனும் வந்து நின்று பூதாகரமாய்க் காட்சியளித்தனர்.

தீன் முறுக்கேறிய கரங்களால் தன் மகன் பாலுவை இழுத்தபடி, நிசப்தம் நிலவிய பள்ளி மைதானத்தின் நடுவில் வந்து நின்றான் அவன்.

மனிதர்களுக்கும் மோப்ப சக்தி உண்டு என்பதை நிரூபிக்கும் வகையில் அனைத்து வகுப்பறைக் கதவுகளின் வழியேயும் சக ஆசிரியர்கள் எட்டிப் பார்த்து விட்டுத் தலையை உள்ளிழுத்துக் கொண்டனர்.

பார்ப்பவரை அச்சமூட்டும் வகையில் கறுத்து ஆறரை அடிக்கு மேலாக நீண்ட



புதிய முதல்வருக்கு உங்கள் யோசனை!

ஜனவரியில் தேர்தல் நடந்து முடிவுகள் வெளியானதும் தமிழகத்தின் புதிய முதலமைச்சராகப் பதவியேற்கப் போகிறவர் யாராயிருந்தாலும் சரி... அவர் கையில் தான் தமிழ்நாட்டின் எதிர்காலம் இருக்கிறது.

புதிய முதல்வருக்கு மூன்றே மூன்று ஆக்கபூர்வமான ஆலோசனைகளைச் சுருக்கமாகத் தெரிவித்து எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள். நீங்கள் எழுதியனுப்பும் ஆலோசனைகள் தமிழ்நாட்டின் மேம்பாட்டுக்கு உதவக் கூடியனவாக இருக்க வேண்டும். 15.1.89 பொங்கல் சிறப்பிதழ் தொடங்கி கல்கியில் அவை பிரசுரமாகும்.

பிரசுரமாகும் கடிதங்களுக்குச் சன்மானம் உண்டு. தபால் கார்டு அல்லது உறையின் மீது "புதிய முதல்வருக்கு யோசனை" என்று மறவாமல் குறிப்பிடவும்.

கடிதங்கள் வந்துசேரக் கடைசித் தேதி: 28.12.88.

அவனது உடல், வியர்வையால் வழிந்து, கண்ணாடி ஜன்னலாய் வியாபித்திருந்த அரைக்கை பனியனை அழுக்காக்கிக் காட்டியது. பட்டையாய் இடுப்பில் சுருண்டிருந்த பச்சை நிற பெல்ட்டில் தொங்கிய பேனாக் கத்தி அவன் அசைவிற்கேற்ப ஆடிக் கொண்டிருந்தது.

நடு மைதானத்தில் நின்றவன் மகனிடம் ஏதோ அதட்டலாய்க் கேட்டான். அதைத் தொடர்ந்து அவன் சாந்தி டீச்சர் இருந்த வகுப்பறையை நோக்கி வேகமாக நடந்து வரப் பின்னாலேயே ஹெச்.எம். ஓடி வந்தார். அவன் நடந்த வேகத்திற்கு அவரால் ஓடி வரக் கூட முடியவில்லை. சாந்தி திக்பிரமை பிடித்தவளாக நின்று விட்டாள்.

"யாருடா உன்னைத் தூக்கியடிச்ச டீச்சரு...?"

அந்த முரடனின் குரல் மிக நெருக்கத்தில் ஒலித்தது. பையன் அவனை நோக்கி ஒரு கையை உயர்த்திக் கொண்டு மறு கையால் தனது கன்னத்தைத் துடைத்தான்.

"சார்... சார்... நீங்க எது பேசறதுனாலும் பரவால்லே. இங்கே வேண்டாம். ஆபீஸுக்கு வாங்க சார்... பேசிக்கலாம்...!" —வியர்க்க விறுவிறுக்க ஓடி வந்த ஹெச்.எம். அவன் முன் வந்து நின்று, சற்று பயமாய், அதே சமயம் நயமாய்ச் சொன்னார்.

முரடன் தனக்கே உரித்தான முரட்டுப் பார்வையை அனைவர் மேலும் உருள விட்டான்.

"யாரய்யா என் பையனைப் பள்ளிக்கூடத்தை விட்டு நிறுத்தினது? ஏன் நிறுத்தினீங்க? இதுக்குச் சரியான காரணத்தைச் சொல்லலை, அப்புறம் நடக்கிறதே வேறே...!"

அவன் பார்வையைப் போலவே குரலும் கர்ஜனையுடன் ஒலிக்க, சாந்தி அச்சத்துடன் பின்வாங்கினாள். ஒன்றிரண்டு ஆசிரியர்கள் அங்கிருந்து மெல்ல நழுவினர். ஹெச்.எம்.தான் திரும்பவும் அச்சத்தை ஒதுக்கி விட்டு அவனுக்கு விளக்க முன் வந்தார்.

"நாங்க செஞ்சது தப்போ, ரைட்டோ... அதுக்காகக் கோபப்படாதீங்க சார்...! நேற்று மத்தியானம் இந்த டீச்சர் பாடம் நடத்திட்டிருந்தப்ப, உங்க பையன் பாலு, பொண்ணுக உட்கார்ந்திருந்த பக்கம் 'ஏரோ' செஞ்சு விட்டிட்டிருந்திருக்கான்... அதை டீச்சர் கண்டிக்கப் போக, இவன் டீச்சரையே 'போடி, வாடி'ன்னு சொல்லி கெட்ட வார்த்தையிலும் திட்டியிருக்கான்... அதுக்காக டீச்சர் அடிக்கப் போக, இவன் முரட்டுத்தனமா டீச்சரை அடிக்கத் துணிஞ்சுட்டான்....!"

அவர் சொல்லி நிறுத்த முரடன் உக்கிரமானான். ஆசிரியர்கள் யாரும் எதிர்பார்க்காத வகையில் கையில் பிடித்திருந்த பையனை இழுத்துத் தரையில் எறிந்தான்.

"ஏண்டா தறுதலைப் பயலே... என் கிட்டே, 'ரௌடிப் பய மவன்'னு டீச்சர் திட்டினதாப் பொய்யாடா சொன்னே? படவா ராஸ்கல்...!"

கத்திக் கொண்டே ஆவேசம் வந்தவனாகக் கைகளால் மாறி மாறிப் புழுதி மண்ணில் கிடந்தவனைப் புரட்டி எடுத்தான். பையன் புரண்டபடியே அடி தாங்க முடியாமல் கதறினான். ஹெட் மாஸ்டர் குறுக்கிட்டுத் தடுத்திரா விட்டால் அவன் பையனைக் கொன்றே போட்டிருப்பான். அடிப்பதை நிறுத்தி விட்டாலும் ஆவேசம் அடங்காமல் அவன் கத்தினான்....

"முளைச்சு மூணு இலை விடலே... அதுக்குள்ளே ரௌடித்தனம் பண்றியா டோய்... ஏலே...., உன் அப்பன்தான் படிக்க வேண்டிய வயசுல வாத்தியார் பேச்சைக் கேட்காம, ஒழுக்கங் கெட்டு, தெருத் தெருவா சுத்திப் பொறுக்கிப் பயலாயிட்டேன்...! ம்... நீயாவது ஒழுக்கமாப் படிச்சுப் பெரிய டாக்டராவோ, கலெக்டராவோ வருவேன்னு நான் பூராக் கனவு கண்டுட்டிருக்கேன்... நீ இப்படி இருக்கியேடா படவா....? இனி ஏதாவது இப்படித் 'தப்புத் தண்டா' பண்ணினே தொலைச்சுப்புடுவேன் ராஸ்கல்..."

இன்னும் ஏதேதோ அவன் கத்த, ஆசிரியர்கள் அனைவரும் ஸ்தம்பித்துப் போயினர். பையன் தேம்பிக் கொண்டேயிருக்க, காளி ஆசிரியர்களைப் பார்த்துக் கை கூப்பினான். அவன் கண்கள் திடீரென ஏனோ கலங்கின.


"ஐயா... இவன் பேச்சைக் கேட்டுட்டு உங்களையெல்லாம் கொஞ்சம் அதிகமாப் பேசிட்டேன்.. என்னை மன்னிச்சுடுங்க. இவன் செஞ்ச தப்புக்காகவும் உங்ககிட்டே நான் மன்னிப்புக் கேட்டுக்கறேன்...! ஐயா, நான் முரடன்தான்... அதுக்காக என் மகனும் தறுதலையாகணும்னு நினைப்பேனா...? எந்த ஒரு அப்பனும் அப்படி நினைக்க மாட்டான். குடிகாரனானாலும், கொள்ளைக்காரனானாலும் தன் பையன் தன்னைப் போலில்லாம படிச்சுப் பெரிய மனுஷனா வரணும்னுதான் விரும்புவான். அதனால, இவன்கிட்டே தப்புக் கண்டா அடிங்க, உதையுங்க. என்னைப் போலில்லாம நல்லவனா ஆக்குங்க. ஆனா ஸ்கூலை விட்டு மட்டும் நிறுத்திடாதீங்க... உங்களைக் கையெடுத்துக் கும்பிடறேன்..." என்று சொல்லி விட்டு நடந்தான் அவன்.

"என்ன புத்தகம் போட்டால் நல்ல இலாபம் கிடைக்கும்...?"

"'நன்கொடைப் புத்தகம்' போடுங்க; நஷ்டமே வராது...!"

— கரடிகுளம் ஜெயா பாரதிப்பிரியா.




PARRY'S PAGE
அருமை நண்பர்களே!
GUESS WHAT
FIG. 2
OPEN
நல்ல நண்பர்களாக இருக்க விருப்பமா?
FIG. 1
Write to:
PARRY'S THE KING OF SWEETS
P.O. BOX 2040
MADRAS 600 001.
Parry's
THE KING OF SWEETS

ராயல் பூடான் அரசு

500-வது பம்பர்

வென்றிடுவீர்!

1வது பரிசு நா/ரூ.

20 லட்சம்


2வது பரிசு

நா/ரூ. 1 லட்சம் X (500)

முதன் முறையாக மிகச் சிறந்த
பரிசுகளைப் பெறுங்கள்.


500வது
குலுக்கல்
15.1.89

3வது பரிசு : 500
இலவச பயணம்



டிக்கட் விலை
நா/ரூ. **50/-**

நேரில் டிக்கட் பெற விரும்புவோர், ஆர்கனைசர்ஸ்/மொத்த விற்பனையாளர்/
சென்னை விற்பனை நிலையத்திற்கு மணிஆர்டர் அல்லது டிமாண்ட் டிராப்ட் அனுப்பி
டிக்கட்டுகள் பெறலாம். தபால் செலவு இலவசம்.




ஸபாரி பிக்னிக் செட்

இலவச பரிசு
ஒவ்வொரு
5 கூப்பன்களுக்கும்.

- பரிசுத் தொகையை உடனுக்குடன் அளிக்கிறது.
- குலுக்கல் தேதிகளில் மாற்றம் கிடையாது.
- வருமானவரி பிடித்தம் கிடையாது.
- பரிசுத் தொகைக்கு ராயல் பூடான் அரசு உத்தரவாதமளிக்கிறது.


இலவச பரிசு
ஒவ்வொரு
20 கூப்பன்களுக்கும்



வெள்ளி தட்டு

ஜிதேந்திரா லாட்டரி ஏஜென்ஸி,
98/1, அவ்வை சண்முகம் சாலை,
சென்னை-600 014. போன் : 470444
டெலக்ஸ் : 6014 Code : 041 LUCK-IN

துணைச் செயலாளர், ராயல் பூடான்-
அரசு லாட்டரீஸ், பண்ட்ஷோலிங், பூடான்.



இந்திய ரோபோ

ஜி.நடராஜன்

மானேஜிங் டைரக்டர் அய்யாசாமி, குழுமியிருந்த கம்பெனி உறுப்பினர்களைப் பார்த்துப் புன்சிரிப்புடன் பேசினார்.

"நண்பர்களே, நான் ஜெர்மனிக்குச் சென்று வர ஏன் இத்தனை தாமதமானது, அங்கேயும் ஒரு சின்ன வீடு 'செட்—அப்' பண்ணி விட்டாரோ ஆசாமி என்றெல்லாம் நீங்கள் கிசுகிசுத்திருப்பீர்கள். உண்மையான காரணம் இதுதான்..." என்றவாறே கையில் இருந்த 'ரிமோட் கண்ட்ரோலை' அமுக்கினார்.

பின்புறம் மூடியிருந்த இரு கதவுகள் திறந்தன. 'டக்,டக்' என்று கம்பீரமாக நடந்தபடி அவர்கள் முன் வந்து நின்றது — இயந்திர மனிதன்.

"நான்தான் ரோபோ கிளார்க்..." என்றது அது.

"பார்த்தீங்களா, இதைத்தான் நான் ஜெர்மனியிலிருந்து கொண்டு வந்திருக்கேன்..." என்று அறிவித்த அய்யாசாமி, "ரோபோ கிளார்க், உன் வேலை என்ன?" என்றார்.

"டெண்டர் கொட்டேஷன்களைப் பரிசீலிப்பது, உடனுக்குடன் பைசல் செய்வது, பெண்டிங் வைக்காமல் வேலை செய்வது, கம்பெனிக்காக உழைப்பது."

"பார்த்தீங்களா? கோடிக்கணக்கில் பணம் புரளும் நம்ம ஆபீசில் இது போல் பத்து ரோபோக்கள் இருந்தால் எவ்வளவு ஜல்தியாக நிர்வாகம் நடத்தலாம்!" என்று மிடுக்காக அறிவித்த அய்யாசாமி, "கவலைப்படாதீர்கள் யாருக்கும் சீட்டுக் கிழியாது.." என்று உறுதியளித்தார்.

இரண்டு வாரங்கள் கழித்து —

அய்யாசாமியின் போன் அலறியது.

"எம்.டி. சார்... உடனே நம்ம ஆபீசுக்கு வாங்க... ஒரே தகராறு..."

"காரணம்?"

"எல்லாம் உங்க ரோபோதான்..."

"உடனே வர்றேன்."

ஆபீசுக்குள் நுழைந்த அய்யாசாமியைத் தடுத்து நிறுத்தியது ரோபோ.

"உனக்கு என்ன வேணும்? நீ யார்?"

"சரியாப் போச்சு, உன்னைக் கொண்டு வந்ததே நான். எங்கிட்டயே... எங்கிட்டயே. கேள்வியா? நான்தான் எம்.டி."

"அனாவசியமாக ஆபீசில் நிற்கக் கூடாது. அஞ்சு நிமிஷம்தான் அனுமதி."

ஹெட்கிளார்க் பரமசிவம் படபடத்தார். "சார்.. நேத்து வரை ஒழுங்காகத்தான் இருந்தது. இன்னிக்குத்தான் தகராறு..."

"என்ன உளர்றீங்க?"

"இன்னிக்கு அந்த எட்டுக் கோடி ரூபாய் ரோடு காண்ட்ராக்ட் ஃபைலை கிளியர் பண்ணி வாங்கிட்டுப் போக வந்த பார்ட்டியிடம் என்ன பதில் சொல்லியிருக்கு தெரியுமா?"

"என்னது?"

"பார்மாலிட்டீஸ் இன்கம்ப்ளீட்."

"அப்படின்னா?"

"தெரியலியே!"

ஒரு நிமிஷம் யோசித்தார் அய்யாசாமி.

"ஹாங்! இது தெரியலியா? இந்த ரோபோ 'திங்க்' பண்ண ஆரம்பிச்சுட்டுதுங்காணும்..." என்று ரோபோவின் அருகில் சென்றார்.

"அந்த எல்.சி. எக்ஸ் ஃபைல் தயாரா?"

"தயார். ஆனால் பார்மாலிட்டீஸ்?"

ரோபோ கண் சிமிட்டியது.

"கொஞ்சம் இங்கே வா..." — அதன் கையைப் பிடித்துப் பக்கத்து மேஜை அருகே அழைத்துச் சென்றார் அய்யாசாமி. ஒரு புறம் அவர் உட்கார, மறுபுறம் ரோபோ.

சட்டைப் பையிலிருந்து ஒரு கற்றை நோட்டை உருவி மேஜைக்குக் கீழ் காட்டினார் அய்யாசாமி.

ரோபோ சிக்கென்று அவர் கையிலிருந்து அதைப் பெற்றுக் கொண்டு, குறிப்பிட்ட ஃபைலைக் கக்கியது!

"மடையர்களா? இது 'திங்க்' பண்ண ஆரம்பிச்சுட்டுது. இந்தியன் கண்டிஷன்படி செயல்பட ஆரம்பித்து விட்டது. சம்திங் தள்ளுங்க. காரியம் நடக்கும்... இது கூடத் தெரியலியா?" வெற்றிகரமாக நடந்தார் அய்யாசாமி...!



சாதாரண ஜனங்களுக்கு உதவ பற்பல திட்டங்களை வகுப்பதில் எப்போதும் முன்னணியில் இருந்து வரும் ஸ்டேட் பாங்க இப்போது ஒரு புதிய திட்டத்தை உருவாக்கியுள்ளார்கள். இத் திட்டம் சொந்தமாக வீடு பெற உங்களுக்கு உதவும்.

உங்களுக்கு அருகாமையிலுள்ள ஸ்டேட் பாங்க் கிளைக்குச் சென்று இத் திட்டத்தின் கீழ் ஒரு ரெக்கரிங் டெபாசிட் அக்கௌண்டை துவங்கி 36 மாத காலத்துக்கு டெபாசிட் தொகையை தவணை தவறாமல் செலுத்தி வாருங்கள், அவ்வளவுதான்.

அக்கௌண்டின் கால அளவு முடியும் போது உங்கள் அக்கௌண்டிலுள்ள தொகைக்கு சமானமான தொகை பாங்க் உங்களுக்கு கடனாகத் தரும். கடனின் மேல் வரம்பு 1 லக்ஷ ரூபாய்தான்.

இரு தொகைகளையும் சேர்த்து சொந்தமாக வீடு பெற்று சுகமாக வாழ்வீர்.

'உங்களுக்கு சொந்த வீடு' திட்டம்

ஸ்டேட் பாங்க்
இந்தியாவிலேயே
பெரிய வங்கி

CHAITRA-B SBI 1591 TAM



அத்தியாயம் 9

நாய் குரைத்தது

மணிமேகலை வந்தியத் தேவனுடைய முகத்தைப் பார்த்த வண்ணம் நின்றாள்.

வந்தியத் தேவனும் புன்னகை புரிந்த வண்ணம் நின்றான். இந்தப் பெண்ணிடம் என்ன சொல்லிவிட்டு, எப்படித் தப்பிச் செல்வது என்று அவன் மனம் சிந்தித்துக் கொண்டிருந்தது.

இச்சமயம் எங்கேயோ தூரத்திலிருந்து ஒரு குரல், ''அம்மா! என்னை அழைத்தீர்களா?'' என்று கேட்டது.

''இல்லையடி, உன் வேலையைப் பார்!'' என்றாள் மணிமேகலை. உடனே அவளுடைய திகைப்பு நீங்கியது.

சற்றுமுன் வந்தியத்தேவன் புகுந்து வந்த துவாரத்தின் அருகில் சென்று உட்பக்கத்துத் தாளையிட்டாள். பின்னர், வந்தியத்தேவனுக்குச் சமிக்ஞை காட்டி அந்த அறையிலேயே சற்றுத் தூரமாக அழைத்துச் சென்றாள். சட்டென்று திரும்பி நின்று ''ஐயா! உண்மையைச் சொல்லும்! சந்திரமதி உம்மை அழைத்ததாகக் கூறினீரே? அது நிஜமா?'' என்று கேட்டாள்.

''ஆம், அம்மணி!''

''எப்போது எங்கே பார்த்து உம்மை அழைத்தாள்?''

''சற்று முன்னால்தான்! அடுத்த அறையில் நான் குரங்கின் பின்னால் மறைந்து நின்ற போது நீங்கள் இருவரும் வந்து பார்த்து விட்டுத் திரும்பினீர்கள். நீங்கள் திரும்பிய பிறகு அவள் என்னைப் பார்த்து, 'குரங்கே? நீ என்னுடைய அறைக்கு வந்து இருக்கிறாயா? வேண்டாத சமயத்தில் வருகிறவர்களைப் பயமுறுத்தி அனுப்பச் சௌகரியமாயிருக்கும்!' என்றாள். அது தங்கள் காதில் விழவில்லை போலிருக்கிறது!''

மணிமேகலை இளநகை புரிந்த வண்ணமாக ''காதில் விழுந்திருந்தால் அவளைச் சும்மா விட்டிருப்பேனா?'' என்றாள்.

''இளவரசி! தங்கள் தோழி பேரில் கோபிப்பதில் என்ன பயன்? என் முகமும் வாலில்லாக் குரங்கின் முகமும் ஒன்று போலிருந்தால் அதற்குச் சந்திரமதி என்ன செய்வாள்?''

''உமது முகத்துக்கும் வாலில்லாக் குரங்கின் முகத்துக்கும் வெகு தூரம்!''

''குரங்கின் முகத்துக்கும் அதற்கு மேலே தொங்கிய ஆந்தையின் முகத்

அமரர் கல்கி

துக்கும் உள்ள தூரம் போலிருக்கிறது.''

''உமது முகம் குரங்கு முகமும் அல்ல; ஆந்தை முகமும் அல்ல. ஆனால், குரங்கின் சேஷ்டையெல்லாம் உம்மிடம் இருக்கிறது. சில சமயம் ஆந்தையைப் போலவும் விழிக்கிறீர். சற்று முன்னால் இதோ இந்தக் கண்ணாடியில் எட்டிப் பார்த்து விழித்தது நீர்தானே?''

''ஆம், இளவரசி. நான்தான்!''

''எதற்காக உடனே பின் வாங்கிக் கதவைச் சாத்திக் கொண்டீர்?''

''இந்தக் கண்ணாடியில் என் முகத்துக்கு அருகில் ஒரு தேவ கன்னிகையின் முகம் போலத் தெரிந்தது. அந்த தேவ கன்னிகை என் முகத்தைப் பார்த்துப் பயந்து கொள்ளப் போகிறாளே என்று நான் பிடித்திருந்த யானைத் தந்தத்திலிருந்து கையை எடுத்தேன். கதவு தானாகச் சாத்திக் கொண்டது.''

''அந்தத் தேவகன்னிகை யார் என்பது உங்களுக்குத் தெரியுமா?''

''அந்த க்ஷணம் எனக்குத் தெரியவில்லை. பிறகு நினைத்துப் பார்த்துத் தெரிந்து கொண்டேன்.''

''என்ன தெரிந்து கொண்டீர்?''

''நான் பார்த்தது தேவ கன்னிகை அல்ல; தேவ கன்னிகைகள் ஓடி வந்து அடி பணிவதற்குரிய மணிமேகலா தேவி; கடம்பூர் சம்புவரையரின் செல்வக் குமாரி என்று தெரிந்து கொண்டேன். என்னுடைய ஆருயிர் நண்பன் கந்தமாறனுடைய அருமைத் தங்கை என்பதும் நினைவுக்கு வந்தது.''

மணிமேகலையின் புருவங்கள் நெறிந்தன. ஏளனமும் கோபமும் கலந்த புன்சிரிப்புடன், ''அப்படியா? என் தமையன் கந்தமாறன் தங்களுடைய ஆருயிர் நண்பனா?'' என்றாள்.

''அதில் என்ன சந்தேகம், இளவரசி! நாலு மாதங்களுக்கு முன்னால் நான் இங்கு ஒருநாள் வந்திருந்தது நினைவில்லையா? அந்தப்புரத்துக்குக் கூட வந்து தாய்மார்களுக்கு வணக்கம் செலுத்தினேனே? அது ஞாபகம் இல்லையா?''

''நன்றாய் ஞாபகம் இருக்கிறது. அதற்குள் மறந்து விடுமா? அந்த வல்லவரையர் வந்தியத்தேவர் என்னும் வாணர்குலத்து இளவரசர் தாங்கள் தானா?''

''ஆம், இளவரசி! தங்குவதற்கு அரண்மனையும் ஆளுவதற்கு இராஜ்யமும் இல்லாமல் 'அரையன்' என்ற குலப் பெயரை மட்டும் தாங்கிக் கொண்டிருக்கும் அந்த ஏழை நான்தான்! ஒரு காலத்தில் தங்கள் தமையன் என்னிடம் தங்களைப் பற்றி எவ்வளவோ சொல்லியதுண்டு. ஒரு காலத்தில் நானும் கந்தமாறனும் வடபெண்ணை நதிக்கரையில் காவல் செய்து கொண்டிருந்த போது, தங்களைப் பற்றி அடிக்கடி சொல்லுவான். நானும் ஏதேதோ கனவு கண்டு கொண்டிருந்தேன். பிறகு அந்த எண்ணத்தை மறந்து விட்டேன்.''

மணிமேகலையின் உள்ளத்தில் ஓர் அதிசயமான எண்ணம் தோன்றியது. இவன் தன்னைக் குத்திக் கொல்ல முயன்றதாகக் கந்தமாறன் கூறினான். அது எதற்காக இருக்கும்? ஒருவேளை தன்னைப் பற்றியதாகவே இருக்குமோ? தன்னை இவனுக்கு மணம் செய்து கொடுக்கப் போவதில்லை என்று சொன்னதற்காகக் கந்தமாறனுடன் சண்டையிட்டிருப்பானோ? — இந்த எண்ணம் அவள் உள்ளத்தில் இன்பப் புயலை உண்டாக்கியது.

அதை அவள் கோபப் புயலாக மாற்றிக் கொண்டாள்.

''ஐயா! அந்தப் பழைய கதையெல்லாம் இப்போது வேண்டாம். இந்த அரண்மனையில் நீர் கள்ளத்தனமாகப் புகுந்ததின் காரணத்தைச் சொல்லும்! இல்லாவிடில் உடனே என் தோழியை அழைத்துத் தந்தைக்குச் சொல்லி அனுப்ப வேணும்'' என்றாள்.

''இளவரசி! நான் இங்கு வந்த காரணத்தை முன்னமே சொன்னேனே? சில கொலைகாரர்கள் என்னைக் கொல்லுவதற்காகத் துரத்திக் கொண்டு வந்தார்கள். அவர்களிட

மிருந்து தப்பி ஓடி வந்த போது பூமியில் ஒரு துவாரம் தெரிந்தது. அது ஏதோ இரகசியப் பாதை என்று அறிந்து கொண்டேன். அதன் வழியாக ஓடித் தப்பிக்கலாம் என்று வந்த போது, அந்த வழி இங்கே கொண்டு வந்து சேர்த்தது!''

''ஐயா! சுத்த வீரர் என்றால் உமக்கே தகும். நானும் எத்தனையோ அஸகாய சூரர்களைப் பற்றிக் கேட்டிருக்கிறேன். ஆனால் உம்மைப்போல் ஓட்டத்தில் சூரனைப் பற்றிக் கேட்டதில்லை. உத்தர குமாரன் உம்மிடம் பிச்சை வாங்க வேண்டியதுதான்!''

வந்தியத் தேவன் மனத்தில் சுரீர் என்றது. தான் அசட்டுப் பெண் என்று நினைத்த மணிமேகலை இப்படித் தன்னைக் குத்திக் காட்டும்படி ஆகிவிட்டதல்லவா?

''தேவி! அவர்கள் ஏழெட்டுப் பேர்! நான் ஒருவன். அவர்கள் ஆயுத பாணிகள். என்னிடம் ஆயுதமே இல்லை. என்னுடைய அருமை வேல் கொள்ளிடத்து வெள்ளத்தில் போய் விட்டது....''

''ரொம்ப நல்லது! அந்தப் படுபாதக வேல், சிநேகிதனைப் பின்னாலிருந்து குத்திக் கொல்லும் வேல். ஆற்றோடு போனதே நல்லது!''

வந்தியத்தேவனுக்குத்தூக்கிவாரிப் போட்டது. அவன் பதில் சொல்ல வாயெடுப்பதற்குள் மணிமேகலை ''உண்மையைக் கூறி விடும். கொலைகாரர்களிடம் தப்பிப்பதற்காக ஓடி வந்தீரா! கொலை செய்வதற்காக இங்கு வந்தீரா?'' என்று கேட்டாள்.

வந்தியத் தேவன் தீயில் காலைவைத்தவனைப் போல் துடித்து, 'சிவ சிவா! நாராயணா! நான் யாரைக் கொலை செய்வதற்காக இங்கே வர வேணும்? என் ஆருயிர் சிநேகிதரின் அருமைத் தங்கையையா? எதற்காக?'' என்றான்.

''நான் என்ன கண்டேன்! 'அருமை சிநேகிதன்' என்று வாய் கூசாமல் பொய் சொல்லுகிறீரே? அப்பேர்ப்பட்ட அருமை சிநேகிதன் பின்னாலிருந்து முதுகிலே குத்திக் கொல்லுவதற்கு நீர் முயலவில்லையா? அது எதற்காகவோ, அதே காரணத்துக்காக, இங்கே யாரையேனும் கொலை செய்வதற்கு நீர் வந்திருக்கலாம்.''

''கடவுளே! இது என்ன வீண் பழி? நானா கந்தமாறனின் முதுகில் குத்தினேன்? அப்படிப்பட்ட காரியத்தைச் செய்வதற்கு முன்னால் என் கையை வெட்டிக் கொண்டிருப்பேனே? இளவரசி! இத்தகைய படுபாதகமான பொய்யைத் தங்களிடம் யார் கூறினார்கள்?''

''என் அண்ணனே கூறினான். வேறு யாராவது கூறியிருந்தால் நான் நம்பியே இருக்க மாட்டேன்.''

''கந்தமாறனா இப்படிக் கூறினான்? அப்படியானால் நான் உண்மையில் துர்ப்பாக்கியசாலிதான்! யாரோ அவனை முதுகிலே குத்தித் தஞ்சாவூர் மதில் சுவருக்கு அருகில் போட்டிருந்தார்கள். மூர்ச்சையாகிக் கிடந்த அவனை நான் தூக்கிக் கொண்டு போய்ச் சேந்தன் அமுதன் குடிசையில் சேர்த்துக் காப்பாற்றினேன். அதற்கு எனக்குக் கிடைத்த வெகுமதியா இது? இளவரசி! எதற்காக அவனை நான் கொல்ல முயன்றேனாம்? ஏதாவது காரணம் சொன்னானா?''

''சொன்னான், சொன்னான்! நீர் என் அழகைப் பழித்து, அவலட்சணம் பிடித்தவள் என்று இகழ்ந்தீராம். தஞ்சாவூர்ப் பெண்கள் என்னை விட அழகிகள் என்று சொன்னீராம். அதனால் கந்தமாறன் கோபங் கொண்டு உம்மை நன்றாய்ப் புடைத்தானாம். நேருக்கு நேர் சண்டையிடக் கையினாலாகாமல் பின்னாலிருந்து அவனைக் குத்தி விட்டீராம்! இதெல்லாம் உண்மையா, இல்லையா?''

''பொய்! பொய்! பயங்கரமான பொய். தங்களை அவலட்சணம் என்று சொல்வதற்கு முன்னால், என் நாக்கையே துண்டித்துக் கொண்டிருப்பேனே? கந்தமாறன் அல்லவா அவனுடைய சகோதரியை நான் மறந்து விட வேண்டும் என்று வற்



புறுத்தினான்?''

''எதற்காக?''

''இராஜ்யம் ஆளும் பேரரசர்கள் தங்களை மணந்து கொள்ளக் காத்திருப்பதால் தங்களை நான் மறந்து விட வேண்டுமென்று வற்புறுத்தினான்.''

''நீரும் அடியோடு என்னை மறந்து விட்டீர் ஆக்கும்!''

''என்னால் அடியோடு மறக்க முடியவில்லை. ஆனால் அது முதல் தங்களை என் அருமைச் சகோதரியாகக் கருதத் தொடங்கினேன். இளவரசி! உடனே கந்தமாறனிடம் என்னை அழைத்துப் போங்கள்! அல்லது அவனை இங்கே அழையுங்கள். ஏன் இத்தகைய பெரும் பொய்யை அவன் சொன்னான் என்றாவது தெரிந்து கொள்கிறேன். அல்லது உண்மையிலேயே அவன் அப்படி எண்ணிக்கொண்டிருந்தால், அந்தத் தப்பெண்ணத்தைப் போக்குகிறேன்....''

''தஞ்சாவூரில் ஆரம்பித்த காரியத்தை இங்கே பூர்த்தி செய்து விடலாம் என்று வந்தீராக்கும்....''

''அப்படி என்றால்...''

''அங்கே அவனைக் கொல்ல முயன்றீர்; அந்த முயற்சி பலிக்கவில்லை.....''

''கடவுளே! கந்தமாறனைக் கொல்லுவதற்கு அவனுடைய அரண்மனையைத் தேடியா வருவேன்!''

''இரகசிய வழியாக வந்தது வேறு எதற்காக?''

''அதோ, உற்றுக் கேளுங்கள்! என்னைக் கொல்ல வந்தவர்கள் அடுத்த அறையில் இன்னும் இருக்கிறார்கள். அவர்கள் நடமாடும் சத்தமும் பேசும் குரல்களும் கேட்கவில்லையா?''

''அவர்கள் எதற்காக உம்மைக் கொல்ல வரவேணும்?''

''அவர்களைப் பார்த்தால் மந்திரவாதிகள் போலிருக்கிறது. ஒருவேளை நரபலி கொடுக்கும் கூட்டமாயிருக்கலாம்.....''

''சகல இலட்சணங்களும் பொருந்திய இராஜகுமாரனாகிய உம்மை அதற்காகப் பிடித்தார்கள் போலிருக்கிறது....'' என்று கூறி மணிமேகலை சிரித்தாள்.

''அதுதான் எனக்கும் அதிசயமாயிருக்கிறது. இந்த ஆந்தை விழி விழிக்கும் குரங்கு மூஞ்சிக்காரனை அவர்கள் எதற்காகப் பிடிக்க வந்தார்கள் என்று தெரியவில்லை. உங்கள் பேச்சைக் கேட்ட பிறகு ஒரு சந்தேகம் உதிக்கிறது. ஒருவேளை என் நண்பன் கந்தமாறனே இப்படிப்பட்ட ஏற்பாடு செய்திருப்பானோ என்று. அவனிடம் என்னை உடனே அழைத்துச் செல்லுங்கள்! ஒன்று, அவனுடைய தப்பபிப்பிராயத்தைப் போக்கிக் கொள்ளட்டும்; இல்லாவிட்டால் என்னை அவன் கையினாலேயே கொன்று விடட்டும். கொலைகாரர்களை எதற்காக ஏவ வேண்டும்? அம்மணி! உடனே கந்தமாறனை அழைத்து விடுங்கள்!''

''ஐயா! அவ்வளவு அவசரப்பட வேண்டாம். கந்தமாறன் ஊரில் இல்லை.''

''எங்கே போயிருக்கிறான்?''

''காஞ்சிக்குக் கரிகாலரை அழைத்து வரப் போயிருக்கிறான். நாளை இரவு எல்லாரும் இங்கு வந்து விடுவார்கள். அதுவரையில் நீர்....''

''அதுவரையில் என்னை இங்கேயே இருக்கச் சொல்கிறீர்களா? அது நியாயமல்ல!''

''இங்கே இருக்கச் சொல்லவில்லை. இன்னும் சற்று நேரத்துக்கெல்லாம் இங்கே பழுவூர் இளையராணி வந்துவிடுவாள். பிறகு ஈ காக்காய் இங்கே வர முடியாது. பழுவேட்டரையர் எப்பேர்ப்பட்டவர் என்பது உமக்குத் தெரிந்திருக்கும். அவர் உம்மை இங்கே கண்டால் உடனே கண்டதுண்டமாய் வெட்டிப் போட்டுவிடச் சொல்வார்! ஆ! அக்கிழவருக்குத்தான் பெண்டாட்டியின் பேரில் எவ்வளவு ஆசை!'' என்று சொல்லி மணிமேகலை சிரித்தாள்.

வந்தியத்தேவன் முன் தடவை பழுவேட்டரையர் வந்தபோது நடந்ததையெல்லாம் நினைத்துக் கொண்டான்.

''அப்படியா? பழுவேட்டரையருக்குப் பழுவூர் இளையராணி பேரில் ரொம்ப ரொம்ப ஆசையா?'' என்று கேட்டான்.

''அது நாடு நகரம் எல்லாம் தெரிந்த விஷயம் ஆயிற்றே! போன தடவை, எட்டு மாதங்களுக்கு முன்னால் இங்கே ஒரு தடவை அவர்கள் வந்திருந்தார்கள். பழுவூர் ராணி அந்தப்புரத்துக்கு வரக் கூடக் கிழவர் விடவில்லை! அப்படிக் கண்ணும் கருத்துமாய்ப் பாதுகாக்கிறார். இந்தத் தடவை சில நாள் இங்கே இருக்கப் போகிறார்களாம். பழுவூர் ராணிக்குத் தனி அந்தப்புரம் வேண்டுமென்று ஒரே தடபுடல். இந்தத் தடவையாவது எங்களையெல்லாம் பார்க்கப் போகிறாளோ, பார்ப்பதற்குக் கிழவர் விடப் போகிறாரோ, தெரியவில்லை.''



''அப்படியானால் நான் இப்பொழுது என்ன செய்யட்டும்?''

''அதுதான் நானும் யோசித்துக் கொண்டிருக்கிறேன்... ஆ! ஒரு யோசனை தோன்றுகிறது. என் தமையன் கந்தமாறனுடைய தனி ஆயுத அறை ஒன்று இந்த மாளிகையில் இருக்கிறது. அதில் உம்மைக் கொண்டு விடுகிறேன். நாளை சாயங்காலம் கந்தமாறன் வந்துவிடுவான். அதுவரையில் அங்கேயே இரும். நீர் சொல்வதின் உண்மை, பொய்மைக் கந்தமாறனிடம் நேரில் நிரூபித்துவி

லாம்....''

''இளவரசி! அது முறையன்று! மிகவும் ஆபத்தான காரியம்!''

''என்ன ஆபத்து?''

''அங்கே நான் எப்படி வந்து சேர்ந்தேன் என்று கந்தமாறன் கேட்டால் என்ன பதில் சொல்லுவது?''

''உள்ளது உள்ளபடி சொல்லுகிறது.''

''உள்ளது உள்ளபடி நான் இப்போது சொன்னதை நீங்களே நம்பவில்லையே? அடுத்த அறையில் என்னைத் தேடி வந்த ஆட்கள் இருக்கும்போதே?''

''ஐயா! அதை இப்போதே சோதித்து விடுகிறேன்.''

''என்ன சோதிக்கப் போகிறீர்கள்?''

''அடுத்த அறைக்குள் சென்று அந்த மனிதர்களைப் பார்த்து விசாரிக்கப் போகிறேன். அவர்கள் உம்மைக் கொல்ல வந்தவர்களா? அல்லது நீர் அழைத்து வந்தவர்களா என்று தெரிந்து கொண்டு வருகிறேன்.''

''ஐயோ! அவர்கள் பொல்லாத துஷ்டர்கள். தாங்கள் அவர்களிடம் தனியாக அகப்பட்டுக் கொண்டால்....''

''என் அரண்மனையில் யார் என்னை என்ன செய்ய முடியும்? இதோ பாருங்கள்!'' என்று கூறி மணிமேகலை யாருக்கும் தெரியாமல் தன் இடுப்பில் செருகியிருந்த சிறிய மடக்குக் கத்தியை எடுத்துக் காட்டினாள்.

''யாரும் என் கிட்ட வர முடியாது! அப்படி ஏதாவது ஆபத்து வருவதாயிருந்தால் நீர்தான் சூராதி சூரர் இங்கே இருக்கிறீரே!''

''அம்மணி! என்னிடம் தற்சமயம் ஆயுதம் ஒன்றுமில்லை.''

''வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்று நீர் கேட்டதில்லையா? உமது பெயரே வல்லவரையர் ஆயிற்றே? ஆயுதம் கையில் இருந்தால் பெண் பிள்ளைகள் கூடச் சண்டை போடுவார்கள். ஆண் பிள்ளைகள் எதற்கு? உமக்கு வீண் கவலை வேண்டாம். அங்கே அந்த அறையில் தூக தட்டிக் கொண்டிருந்தவன் எங்கள் அரண்மனை வேலைக்காரன்தான். மற்றவர்களை அவன்தான் இட்டு வந்திருக்க வேண்டும். அவர்களும் எனக்குத் தெரிந்தவர்கள் என்றே தோன்றுகிறது. அவர்கள் எதற்காக இங்கே வந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொண்டு வருகிறேன். கதவுக்கு அருகில் நிற்க வேண்டாம். அதோ அந்த மரக் களஞ்சியத்துக்குப் பக்கத்தில் போய்ச் சிறிது மறைந்து நில்லுங்கள்!"

இவ்விதம் சொல்லிக் கொண்டே மணிமேகலை வேட்டை அறைக்குப் போகும் இரகசிய வாசற் பக்கம் சென்று அதன் கதவைத் திறக்க முயன்றாள்.

வந்தியத் தேவன் அவசரமாக நடந்து மரக்களஞ்சியத்தின் அருகில் சென்று சற்று மறைந்து நின்றான்.

மரக்களஞ்சியத்தின் கதவுகள் திறந்திருந்தன. அதற்குள்ளே தற்செயலாகப் பார்த்தான். அது தானியம் கொட்டும் களஞ்சியம் அல்லவென்று தெரிந்தது. அதற்குள்ளே படிப்படியாக அமைந்திருந்தது. ஒவ்வொரு படியிலும் யாழ், வீணை, மத்தளம், தாளம் முதலிய இசைக் கருவிகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. மேலே சிறிது அண்ணாந்து பார்த்தான். படிகள் மேற்கூரை வரையில் போவதாகத் தெரிந்தது.

இதற்குள் மணிமேகலை வேட்டை மண்டபத்தின் கதவைத் திறந்து கொண்டு உள்ளே பிரவேசித்தாள்.

அவளுடைய தைரியத்தை வந்தியத் தேவன் வியந்தான். அதே சமயத்தில் மணிமேகலைக்கு ஆபத்து ஒன்றும் நேருவதற்கில்லை என்று மனத்தைத் திடப்படுத்திக் கொண்டான்.

இதற்குள் அந்த அறையின் இன்னொரு பக்கத்திலிருந்து ஒரு கதவு திறந்தது. ''அம்மா! அம்மா!'' என்று கூவிக் கொண்டே சந்திரமதி உள்ளே வந்தாள்.

வந்தியத் தேவன் திடுக்கிட்டான். அவள் தன்னைப் பார்த்து விடாமலிருப்பதற்காக இசைக் கருவிக் களஞ்சியத்துக்குள் நுழைந்தான்.

''அம்மா! அம்மா! தஞ்சாவூர்க்

காரர்கள் கோட்டை வாசலில் வந்து விட்டார்களாம். மகாராணி உடனே தங்களை அழைத்து வரச் சொன்னார்கள்!'' என்று கத்திக் கொண்டே சுற்று முற்றும் பார்த்தாள். அவள் எதிரில் திறந்திருந்த வேட்டை மண்டபக் கதவை நோக்கிப் போனாள்.

கதவின் அருகில் நின்று பார்த்தால் வந்தியத்தேவன் களஞ்சியத்துக்குள் இருப்பது தெரிந்து போய் விடும். ஆகையால் அவன் விரைவாகச் சில படிகள் மேலே ஏறினான்.

ஒரு வீணையின் மீது அவன் முழங்கால் இடித்து அது சப்தித்தது.

வந்தியத்தேவன் பீதி அடைந்து மேலும் சில படிகள் ஏறினான். அவன் தலை களஞ்சியத்தின் மேற்பலகையில் முட்டியது. என்ன விந்தை? அந்த மேற்பலகை வந்தியத்தேவனுடைய மண்டை முட்டிய போது சிறிது மேலே சென்றது.

ஏதோ சந்தேகம் தோன்றி வந்தியத்தேவன் அப் பலகையைக் கைகளினால் நெம்பித் தூக்கினான். அது நன்றாய் மேலே போனதுடன், திறந்த இடத்தின் மூலமாக வெளிச்சம் வந்தது. தூரத்தில் சலசலவென்று சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. ஒரு பக்கத்தில் வானத்தில் மின்னும் நட்சத்திரங்களும் தெரிந்தன. வந்தியத்தேவனுடைய உள்ளம் உற்சாகத்தினால் துள்ளியது.

பலகையை நன்றாக நகர்த்தி விட்டு மேலே ஏறினான். மாளிகையின் மேல் மச்சில் ஒரு பகுதிக்குத்தான் வந்திருப்பதைக் கண்டான். அதிலும் அந்தப் பகுதி முன்னொரு நாள் அவன் சுகமாகக் காற்று வாங்கிக் கொண்டு படுத்திருந்த பகுதிதான். பெரிய தூண்களின் மறைவில் நின்று சிற்றரசர்களின் கொடிய சதியாலோசனையைப் பற்றித் தெரிந்து கொண்ட அதே இடந்தான்.

பலகையைத் தள்ளி முன் போல் மூடினான். மூடிய பிறகு, கூரையிலிருந்து அப்படி ஒரு வழி இருக்கிறதென்று கண்டுபிடிப்பது சுலபமல்லவென்பதை உணர்ந்தான். அதைப் பற்றி இப்போது யோசிக்கவும் அதிசயப்படவும் அவகாசம் இல்லை. அங்கிருந்து தப்பிச் செல்லும் வழியைப் பார்க்க வேணும்.

இத்தனை நேரமும் தனக்கு உதவி செய்த அதிர்ஷ்ட தேவதை இனியும் உதவி செய்யாமலா இருக்கப் போகிறது?

வந்தியத்தேவன் நாலாபுறமும் சுற்றிப் பார்த்தான். எங்கு நோக்கினாலும் கொடிகளும் தோரணங்களும் பறந்து அந்த அரண்மனைப் பிரதேசம் முழுவதும் கண்கொள்ளாக் காட்சியாயிருந்தது. அடாடா! இராஜோபசாரம் என்பது இதுதான் போலும்!

வந்தியத் தேவன் அடிமேல் அடி வைத்து மெள்ள மெள்ள நடந்தான். சுற்று முற்றும் பார்த்துக் கொண்டு நடந்தான். மேல் மச்சில் எங்கும் மனித சஞ்சாரமே இல்லை. அந்த வரையில் நம் அதிர்ஷ்டந்தான். பிறகு கொஞ்சம் விரைவாகவே நடந்தான்.

முன்னொரு தடவை அவன் படுத்திருந்த நிலா மாடத்துக்கு வந்து சேர்ந்தான். அங்கிருந்து பார்த்த போது அரண்மனையின் வெளிமதிலும், மதிலுக்கும் மாளிகைக்கும் நடுவிலிருந்த முற்றமும், குரவைக் கூத்து நடந்த இடமும் காணப்பட்டன. ஆனால் இந்த இடங்களிலும் மனிதர்கள் யாரும் காணப்படவில்லை. அதற்குக் காரணம் கண்டு பிடிப்பது அவ்வளவு கடினமான காரியமாயில்லை. அரண்மனையின் முன் வாசலில் ஒரே அல்லோல கல்லோலமாயிருந்தது. நூற்றுக்கணக்கான தீவர்த்திகள் வெளிச்சம் தந்தன. மேள தாளங்கள் பேரிகை முழக்கங்களுடன் மனிதர்களின் வாழ்த்தொலிகளும் கலந்து பேரொலியாகக் கிளம்பியது. பழுவேட்டரையரின் பரிவாரங்கள் அரண்மனை வாசலை நெருங்கி வந்து விட்டபடியால், அவர்களை வரவேற்பதற்காக எல்லாரும் அங்கே போயிருக்கிறார்கள். அதனாலேதான் இங்கேயெல்லாம் ஜன சஞ்சாரம் இல்லை. ஆகா! உண்மையில் அதிர்ஷ்ட தேவதை வந்தியத்தேவன் பக்கத்தில் இருந்தாள் என்பதில் சந்தேகமில்லை. தப்பிச் செல்

வதற்கு எவ்வளவு அருமையான சந்தர்ப்பம்? அரை நாழிகைக்கு முன்னாலும் இத்தகைய சமயம் கிடைத்திராது; அரை நாழிகை பின்னால் வந்தாலும் இம்மாதிரி வசதி கிட்டியிராது.

சதியாலோசனை நடந்த இடத்துக்குச் சமீபமாக வந்து, வந்தியத்தேவன் இன்னொரு தடவை சுற்று முற்றும் பார்த்தான்; ஒருவருமில்லை. கீழே குனிந்து பார்த்தான்; அங்கேயும் யாரும் இல்லை. எதிரில் மதில் சுவரைப் பார்த்தான். அங்கேயும் யாரும்... ஆ! இது என்ன மதில் மேல், கிளைகளுக்கு நடுவில் ஒரு முகம்! ஆழ்வார்க்கடியானுடைய முகம் போல் தெரிகிறதே!... சீச்சீ! வீண் பிரமை! முன்னொரு தடவை ஆழ்வார்க்கடியானுடைய முகம் போல் தெரிந்த இடம் அது! ஆகையால் அவன் மனம் அவனை அப்படி ஏமாற்றி விட்டது! அதுவும் ஒரு நல்லதற்குத்தான். மதில் மேல் ஏறிக் குதித்துத் தாண்டுவதற்கு அதுதான் சரியான இடம். அதை அவனுடைய உள் மனம் சுட்டிக் காட்டி ஞாபகப் படுத்தியிருக்கிறது. வரவேற்பு முடிந்து வாசலில் நிற்கும் கூட்டம் உள்ளே வருவதற்குள் அவன் தப்பித்துச் செல்ல வேண்டும். முற்றத்தில் எப்படி இறங்குவது?... ஆ! இதோ ஒரு வழி! இங்கே முற்றத்தில் ஒரு கொட்டகை போட்டிருக்கிறது. குரவைக் கூத்துக்காகப் போட்டிருக்கும் கொட்டகை போலும். கொட்டகைக்காகப் புதைத்திருந்த மூங்கில் மரம் ஒன்று நெடிதுயர்ந்து மேல் மச்சு வரையில் வந்திருந்தது. வந்தியத்தேவன் அதைத் தாவிப் பிடித்துக் கொண்டு சரசர வென்று கீழே இறங்கினான். மீண்டும் சுற்று முற்றும் பார்த்தான். ஒருவரும் இல்லை. மச்சின் மேலே, தான் சற்று முன் நின்ற இடத்தில் கிண் கிணிச் சத்தம் கேட்டது. ஆகா! மணிமேகலை தன்னைத் தேடி வந்தாள் போலும்! பொல்லாத பெண்! இச் சமயம் அவளிடம் அகப்பட்டுக் கொண்டால் நம் பாடு தீர்ந்தது.

முற்றத்தில் திறந்த வெளியை ஒரே ஓட்டமாக ஓடி வந்தியத்தேவன் கடந்தான். மதில் சுவர் ஓரமாக நின்று திரும்பிப் பார்த்தான். மச்சின் மீது ஒரு பெண் உருவம் தெரிந்தது. மணிமேகலையோ, சந்திரமதியோ தெரியவில்லை. யாராயிருந்தாலும் தான் முற்றத்தை ஓடிக் கடந்ததைப் பார்த்திருக்க வேண்டும். நல்ல வேளையாகக் கூச்சல் போடவில்லை. அவள் யாராயிருந்தாலும் நன்றாயிருக்கட்டும்! மகராஜியாயிருக்கட்டும்!

இவ்விதம் மனதிற்குள் வாழ்த்திக் கொண்டே மதில் சுவர் ஓரமாக வந்தியத்தேவன் விரைந்து நடந்தான். மதில் மேல் ஆழ்வார்க்கடியானுடைய முகம் தெரிந்த இடம் வந்து விட்டது. அங்கே சுவரில் ஏறுவது எப்படி? இவ்வளவு உயரமாயிருக்கிறதே! சுவரில் பிடித்துக் கொள்வதற்கு மேடு பள்ளம் ஒன்றுமேயில்லையே? கடவுளே!... இதோ ஓர் உபாயம்! குரவைக் கூத்துக் கொட்டகைக்காகக் கொணர்ந்த மூங்கிற் கழிகள் சில சற்றுத் தூரத்தில் கிடந்தன. அவை மிஞ்சிப் போனவை போலும்! ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து அந்தக் கழிகளில் ஒன்றை எடுத்து வந்தான். மதிலின் பேரில் சாய்த்து வைத்தான். கழியின் உயரத்துக்கும் மதிலின் உயரத்துக்கும் சரியாக இருந்தது. ஆனால் கழி சுவரில் நிலைத்து நிற்க வேண்டுமே? ஏறும் போது நழுவி விட்டால்? நழுவி விட்டால்? கீழே விழ வேண்டியதுதான்! அதற்காகக் கையைக் கட்டிக் கொண்டு சும்மா இருந்து என்ன பயன்?

கழியை இரண்டொரு தடவை அழுக்கிப் பார்த்து விட்டு, அதன் வழியாக ஏறத் தொடங்கினான். பாதிச் சுவர் ஏறிய போது கழி நழுவத் தொடங்கியது. 'தொலைந்தோம்! கீழே விழுந்தால் எலும்பு நொறுங்கி விடும்!' என்று எண்ணுவதற்குள், கழி மறுபடியும் உறுதியாக நின்றது. மேலேயிருந்து ஒரு கரம் அதைப் பிடித்துக் கொண்டது போல் தோன்றியது! 'நமக்குப் பைத்தியம் பிடிப்பதுதான் பாக்கி!' என்று எண்ணிக் கொண்டு வந்தியத்தேவன் மேலே ஏறினான். மதில் சுவரின் மேல் முனையை அவன் பிடித்துக் கொண்டதும் கழி நழுவிக்

ஒளிமிளிரும் அழகு முகங்களில் நிழல் படர்ந்து தெரிகிறதா?





காலையிலும் மாலையிலும் ஒளி சரியாகப் பரவி இருப்பதால் வீட்டுக்கு வெளியே எடுக்கும் புகைப்படங்கள் நன்றாக அமைகின்றன.

நல்ல புகைப்படங்கள் எடுக்க இந்து கூறும் சில குறிப்புகள்

வீட்டுக்கு வெளியே உங்கள் குழந்தைகளை எடுக்கும் புகைப்படம் நன்கு அமைய வேண்டுமா? புகைப்படம் சரியான ஒளியில் எடுக்கப்பட வேண்டுமென நினைவில் வைத்திருங்கள்.

காலை 11 மணி முதல் பகல் 2 மணி வரை புகைப்படம் எடுப்பதைத் தவிர்த்திடுங்கள், ஏனெனில் இந்நேரத்தில் புகைப்படமெடுக்கப்படும் பொருளுக்கு நேரே மேல்புறத்திலிருந்து ஒளி விழுகிறது. இதனால் ஒளி சரிவர பரவுவதில்லை. எனவே புகைப்படத்தில் நிழல்படிந்து காணப்படுகிறது.

வீட்டுக்கு வெளியே புகைப்படமெடுக்க சரியான நேரம் காலை. ஏழு மணி முதல் பத்தரை மணி வரையிலும் பகல் இரண்டு முதல் மாலை ஐந்து வரையிலுமே ஆகும். புகைப்படமெடுக்கப் படும் பொருளின் மீது ஒளி சரிவரப் படுவதால் உங்கள் குடும்ப ஆல்பத்துக்கு எண்ணத்தில் நிலைத்திடும் புகைப்படங்கள் கிட்டும். இக்குறிப்புகளை நினைவில் கொள்ளுங்கள். 'இந்து'வைப் போல் நல்ல கலர் ஃபிலிமையே தேர்ந்தெடுங்கள். வண்ணங்கள் எண்ணத்தில் என்றென்றும் நிலைத்திருக்கும்.



INDU

ஹிந்துஸ்தான் போட்டோ ஃபிலிம்ஸ்
மான்யுஃபாக்சரிங் கம்பெனி லிமிடெட்
(ஒரு இந்திய அரசு நிறுவனம்)
இந்து நகர், உதகமண்டலம் 643 005.
வர்த்தகத் தலைமையகம்: சுப்ரமணியம் பில்டிங்ஸ்
எண்.1, கிளப் ஹவுஸ் சாலை, சென்னை 600 002.



அருள்வாக்கு

'பரிப்ரச்நம்' என்பதாகக் கேள்வி கேட்டுக் கேட்டுக் கற்றுக் கொள்வதில் ஒரு விசேஷம் இருக்கிறது. உபநிஷத்தில் இப்படித்தான் கேள்வி கேட்டுக் கேட்டு ஸமாசாரங்களைக் கறந்து கொள்வதாகப் பல இடங்களில் வருகிறது. கீதையில் அர்ஜுனன் குறுக்கே குறுக்கே எத்தனை 'க்வெஸ்ச்சின்' பண்ணுகிறான்? சிஷ்யன் கவனமாக குரு உபதேசத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறான் என்பதற்கு இந்தக் குறுக்குக் கேள்வி பெரிய ஸாக்ஷி.

'லெக்சர்' என்று முழுக்க 'ப்ரிப்பேர்' பண்ணிக் கொண்டு போய் அதை ஒப்பித்துவிட்டு வந்துவிடலாம் என்று ஒரு ப்ரொபஸர் இருக்கிற வரையில் அவர் ஸப்ஜெக்டை ஸாங்கோபாங்கமாகப் பார்க்க வேண்டிய கட்டாயமில்லை. தம்முடைய அபூர்ண ஞானத்தைக்கொண்டே எல்லாம் தெரிந்த மாதிரி லெக்சர் கட்டி ஏமாற்றிவிட முடியும். 'பரிப்ரச்நம்' என்று நடுநடுவே தோண்டித் தோண்டிக் கேள்வி கேட்குமாறு மாணவனை விடும்போதுதான் லெக்சரரும் ஸப்ஜெக்டைப் பூர்ணமாகப் பார்த்துப் புரிந்து கொள்ள வேண்டியதாகும். அவர் 'மிஸ்' பண்ணி விட்ட விஷயம் ஏதாவது இருந்தால் அது சிஷ்யனின் பரிப்ரச்நத்தில் வெளிப்பட்டுவிடும். அவர் அதற்கு மேலே அதற்கான புஸ்தகங்களைப் பார்க்க இடமேற்படும்.

குரு — சிஷ்யாள் இரண்டு பேருமே விஷயங்களை நன்றாகத் தெரிந்து கொள்ள 'பரிப்ரச்நம்' பெரிய தூண்டுகோல். வாத்யார் ஸ்டூடண்டைக் கேட்கிறாற்போலவே இவனும் அவரைக் கேட்கணும். இதிலேதான் புதுசு புதுசாக இன்ட்ரெஸ்டிங்காக விஷயங்கள் வரும்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

கீழே விழுந்தது! அது விழுந்த சத்தம் இடி முழக்கம் போல் அவன் காதில் விழுந்தது. நல்லவேளை! கோட்டை வாசலில் ஆரவாரம் இப்போது இன்னும் அதிகமாயிருக்கிறது. ஆகையால் யார் காதிலும் விழுந்திராது! ஆனால், எதிரே அந்தப்புர மேல் மாடத்தில் நின்ற பெண்! அவள் காதில் விழுந்திருக்கும்!

மதில் மேல் தாவி ஏறி நின்றபடி மறுபடி ஒரு தடவை வந்தியத்தேவன் அந்தப் பக்கம் திரும்பிப் பார்த்தான். இன்னமும் அப் பெண் அங்கேயே நின்று கொண்டிருந்தாள்!

வந்தியத்தேவனுடைய கிறுக்குக் குணம் அவனை விட்டுப் போகவில்லை! 'போய் வருகிறேன்!' என்று சொல்கிற பாவனையாகக் கையை ஆட்டி விட்டு, மதிலின் அப்புறத்தில் இறங்கத் தொடங்கினான். இறங்குவதில் அவ்வளவு கஷ்டம் இல்லை. ஏனெனில், மதில் சுவரின் வெளிப்புறம் உட்புறத்தைப் போல் மட்டமாக இல்லை; சில மேடு பள்ளங்கள் இருந்தன. பக்கத்திலிருந்த மரங்களின் கிளைகள் சில சுவரின் மீது மோதி உராய்ந்து கொண்டிருந்தன. அவற்றின் உதவி கொண்டு சரசரவென கீழே இறங்கினான். மணிமேகலையைத் தான் ஏமாற்றி விட்டு வந்தது பற்றி நினைத்த போது அவனுக்குச் சிரிப்பு வந்தது. அந்தச் சிரிப்பின் எதிரொலியைப் போல் இன்னொரு சிரிப்பு எங்கிருந்தோ வந்தது. வந்தியத்தேவனுடைய இரத்தம் அவனுடைய உடம்பில் உறைந்து போயிற்று. கைகள் நடுங்கின. கீழே குதிப்பதற்காகப் பார்த்தான். நாய் ஒன்று அங்கே அவன் மீது பாயக் காத்துக் கொண்டிருப்பதைக் கண்டான். மேலே ஏறுவதைப் பற்றி இனி யோசிப்பதற்கே இல்லை! கீழே குதித்துத்தான் ஆக வேண்டும். குதித்தால், இந்த நாயின் வாயில் ஒரு பிடி சதையையாவது கொடுத்துத் தீர வேண்டும்! சற்று முன் கேட்டது சிரிப்புச் சத்தமா? அல்லது நாய் குரைத்த சத்தமா? பக்கத்தில் யாராவது மறைந்து நின்று நாயை ஏவி விட்டிருக்கிறார்களா?... மேலே ஏறுவதில் அபாயம் அதிகமா? கீழே குதிப்பதில் அபாயம் அதிகமா? வந்தியத் தேவனுடைய உள்ளம் ஊசலாடியது! அவனுடைய கால்களும், எழும்பி எழும்பிக் குதித்த நாயின் வாயில் அகப்படாமல் இருப்பதற்காக ஊசலாடின!

(தொடரும்)


துப்பறியும்
சூர்யா — கிரண்
நவீன் பிரதாப் முல்லிக்
பாராசூட் உதவியுடன் கிரண் ஒரு ஏகாந்தத் தீவில் இறங்கினான்.
மேலே ஒரு விமானம் பறப்பதைக் கண்டான்.
இந்தியக் கடற்படையைச் சேர்ந்த விமானம். ரோந்துப் பணியில் பறக்கிறது போலும்.
இந்த விமானம் கனின் ரேடியோ அலை வரிசை எனக்குத் தெரியும்.
ஹல்லோ! ஹல்லோ! கல்தான் ஒரு நீர்மூழ்கிக் கப்பலில் இந்தியா வருகிறான். ஒரு பெரிய சதித் திட்டம் உருவாகியிருக்கிறது...
விமானம் கண்ணுக்கு மறையும் வரை இதே செய்தியைத் திரும்பத் திரும்ப ஒலிபரப்பினான்.
மாலை மயங்கி இருள் கவியும் நேரம். அவன் தீவில் தனியே இருந்தான்.
சில நிமிஷங்களுக்குப் பிறகு ஒரு ஹெலிகாப்டர் வருவதைக் கண்டான்.
அந்த விமானி என் செய்தியை அதிகாரிகளுக்குத் தெரிவித்து, என் உதவிக்கு ஹெலிகாப்டரை அனுப்பியிருப்பானோ?
21
(தொடரும்)

நிழல் உறவுகள்

தாமோதரன் வெறித்துப் பார்த்தான். கண்ணில் சலனமில்லை. தான் செய்தது சரி என்கிற தீர்மானம். முரளிக்கு இது எரிச்சலாக இருந்தது. அலை அலையாய் அமிழ்ந்து கிடந்த காதல் கதை திரும்பவும் மனசின் மேல்தளம் வந்து இம்சிக்கிற வேதனை.

எதற்காக எழுத வேண்டும். அதுவும் இரண்டு வருஷங்கள் கழித்து? எல்லாம் முடிந்து போயாகி விட்டது. 'நன்றாயிரு' என்று பரஸ்பரம் கைக்குலுக்கிச் சிநேகம் குறையாமல் பிரிந்தாகி விட்டது.

சிநேகமா... காதலா? காதல்தான். சர்வ நிச்சயமாய்க் காதல்தான். வெளிப்படுத்த முடியவில்லை. ஐந்நூறு ரூபாய் சம்பாதிப்பவனுக்குக் காதல் ஒரு கேடா என்கிற நினைப்பு. சுற்றிச் சுற்றி வந்தவளை 'நான் உனக்கு ஏற்றவனில்லை; பிரிதல் நலம்' என்று விலக்கிய பிறகு போலியாய் ஏற்பட்ட சந்தோஷம்.

இன்று திரும்பவும் புஸ்ஸென்று அடங்கிக் கிடந்ததைத் தாமோதரன் மேலே இழுத்து விட்டிருக்கிறான். இந்துமதி வாசித்திருப்பாளா இதை? வாசித்திருப்பாள். அவள் தாமோதரனின் எழுத்தை நேசிப்பவள். நேற்றைக்குப் புத்தகம் வெளியானதும் வாங்கி நிச்சயம் வாசித்திருப்பாள்.

'முரளிதரன் — கல்யாணி யார் என்று அவளுக்குப் புரிந்திருக்கும். என்ன நினைப்பாள்? கல்யாணமாகிக் குழந்தை பெற்றவளை இன்னும் காதலிக்கிறேன் என்று நினைப்பாள். அவள் மனசிலும் பழகத் தோன்றியிருக்கும். முரளி... முரளி என்று அடித்துக் கொள்ளும்.

இது எதற்கு? ஏன் இந்த ப்ளாஷ்—பேக்?

"ஏன் எழுதினே தாமு? எல்லாரையும் கஷ்டப்படுத்தவா?"

"இல்லை...."

தமயந்தி

"பின்ன எதுக்கு? நான் அவளைக் காதல் பண்ணினேன்னு உன்கிட்டே சொல்லியிருக்கேனா? என்னமோ கண்ட மாதிரி கதை முடிவில் நான் அவளுக்காக உருகுகிற மாதிரி முடிச்சிருக்கே."

தாமோதரன் வெறித்த கண்ணோடு எழுந்தான். முரளியை நகர்த்தி, அவன் அலமாரியைத் திறந்தான். பேப்பர் கத்தை களுக்கு அடியில் கசங்கின காகிதத்தை எடுத்தான்.

"இது எங்கண்ணுல பட்டுடுச்சி முரளி. உன்னையே ஏமாத்திட்டிருக்கிறே. யூ ஹேவ் லவ்ட் இந்து. ஐந்நூறு ரூபாய்க்காரனுக்குக் காதல் ஒரு கேடான்னு பயந்து விலக்கிட்டே. இந்து எங்கிட்ட சொல்லியிருக்கா."

"என்ன... என்ன சொன்னா?"

"உன்னைப் பத்தி இல்லை. அவளைப் பத்தி. மனசு முழுக்க உன்னைக் காதலிக்கிறதைப் பத்தி."

"அவ காதலிச்சிருக்கலாம் தாமு. எனக்கு அவ ஒரு நல்ல ஸ்நேகிதி."

"பிறகு ஏன் இப்படி எழுதினே? ஸ்நேகிதிக்குக் கல்யாணமானா சந்தோஷம்தான் வரும் முரளி. துக்கமில்லை."

நான்காக மடங்கின, கசங்கின காகிதத்தை விரித்துத் தாமோதரன் ஆவேசமாய் நீட்டினான். நிஜம்தான். இந்துவின் கல்யாண அழைப்பிதழைப் பார்த்ததும் ஏற்பட்ட வேதனையின் வலி தாங்க முடியாமல் அப்படி எழுதி வைத்தது நிஜம்தான்.

"ஆமா தாமு நான் அவளைக் காதலிச்சேன். இப்ப அதுக்கென்ன? எதுக்காக முடிஞ்சு போன ஒரு கதையைத் திரும்ப இழுத்தே? அடங்கிக் கிடந்த மனசை ஏன் தூண்டி விடுறே?"

"கத்தாதே முரளி. 'பணம் காதலை நிர்ணயிக்காது: காதலுக்கு மனசுதான் முக்கிய உறுப்பு. பெரிய ஞானி மாதிரி விலகிட்டுப் பிறகு புலம்பறது நல்லதில்லை'ன்னு எனக்குத் தோணுச்சு. அதை எல்லாருமே தெரிஞ்சுக்கணுங்கிறதுக்காகத்தான் எழுதினேன்."

"உனக்குப் புரியாது தாமு. ஒவ்வொரு

தாமும் ஹோட்டலுக்குப் போனாலோ சினிமா போனாலோ எங்கிட்டப் பணம் இருக்காது. இந்துதான் எல்லாத்துக்கும் 'பே' பண்ணுவா.

"அதனால்தான் விலகி வந்தியா?"

"அதனாலன்னு இல்லை; அதுவும். பணம் இல்லாதவன் காதலிக்கக் கூடாது தாமு. கதை எழுதுற உனக்கு இது புரியலையா?"

"இந்து உன் பணத்தைப் பார்க்கலை தாமு. மனசைப் பார்த்தா. நீ பிரிஞ்சிடலாம்னு சொன்ன அன்னைக்கி எங்கிட்ட வந்து ஒன்னு அழுதா."

"நீ சொல்லலை?"

"வேணும்னுதான் சொல்லலை. சொன்னால் மட்டும் என்ன செய்வே? உனக்குப் புரியாதுடான்னு இப்ப மாதிரியே சொல்வே."

முரளி பேசாமல் வெளியே ஜன்னல் கம்பியில் தெறித்த மழையைப் பார்த்தான். மழை இந்துவுக்குப் பிடிக்கும். மழை பெய்த போதுதான் ஹோட்டலுக்கு அழைத்துப் போனாள். கூட்டமில்லாத மேஜையில் கை பதித்து, மழையை மீறின சின்னக் குரலில் "ஐ லவ் யூ" என்று சொல்லி உள்ளங்கையில் முத்தமிட்டாள். சட்டென்று அந்த முகத்தை உதறத் தோன்றிற்று.

"இந்து... என்ன இது?"

"முரளி..."

"இது வேணாம் இந்து. நல்லதில்லை. ஸ்நேகமாக் கை கோத்திருக்கிறது சுகம். கல்யாணம்னா ஒத்து வராது."

"யாருக்கு?"

"நமக்குத்தான். வேணாம் இந்து. விபரீத மாறதுக்குள்ள பிரிஞ்சிடுவோம். நல்ல ஸ்நேகிதியா, நல்ல சிநேகிதனாப் பிரிஞ்சிடுவோம் இந்து."

முரளி மேஜைக்குக் குறுக்காய்க் கை நீட்டினான். இந்து பிரமிப்பாய் அதிர்ச்சி குறையாமல் கண்களில் ஈரம் மின்னப் பார்த்தாள்.

"நைஸ் மீட்டிங் யூ இந்து. வரட்டா?"

வெளியே வந்த போது மழை ஊசி மாதிரி குத்திற்று. திரும்பிப் போய் உள்ளே உட்கார்ந்திருப்பவளிடம் "சும்மா சொன்னேன் இந்து. ஐ லவ் யூ டீ" என்று





"மன்னர் முடியாட்சியை முடிவுக்குக் கொண்டு வந்து தேர்தல் நடத்தலாமான்னு யோசிக்கிறார்!"

"ஏன் திடீர்னு இப்படி ஒரு யோசனை?"

"ஜனநாயக ஆட்சியில் திறையச் சம்பாதிக்கலாம்னு அமைச்சர் சொல்லியிருப்பார்!"

— கடுவை கோபால்சாமி.

சொல்லி விடலாமா? அது கனவு. பைசா இல்லாதவன் காதலிக்க முடியாது என்பதே யதார்த்தம்.

"என்னடா மழையை வெறிச்சுப் பார்க்கிறே?"

"நீ எழுதியிருக்கக் கூடாது தாமு."

"ஸாரிடா...

"எனக்கு எத்தனை கஷ்டம் பார்த்தியா? இந்து என்ன நினைப்பா?"

"ஸாரி முரளி."

தாமோதரன் தோள் மேல் கைகளை அழுத்தினான். மனசின் கனம் லேசாய்க் குறைந்த மாதிரி தோன்றியது.

மழையைக் கிழித்துக் கொண்டு கீழ் வீட்டு நாயர் முற்றத்தில் இருந்து கத்துவது கேட்டது. "முரளி சாரே... நிங்களுக்கு ஃபோன்."

முரளி எழுந்தான். தலையைக் கோதிக் கொண்டு படியிறங்கிப் போய் ரிஸீவரைக் கையிலெடுத்தான்.

"ஹலோ... முரளி ஹியர்."

"இந்து பேசறேன் முரளி..."

"......"

"தாமோதரன் கதை வாசிச்சீங்களா?"

சுருக்கென்று மனசில் கேள்வி குத்திற்று. இத்தனை நாட்கள் அமிழ்ந்து கிடந்தது மேலெழுந்து விட்டது.

"என்ன பதில் இல்லை முரளி? அந்தக் கல்யாணி நான்தானே?"

"......"

"தெரியும் முரளி. நான்தான். நேத்து வாசிச்சவுடனேயே தெரிஞ்சி போச்சு. உங்களைப் பார்க்கணும். இப்ப வர்றீங்களா?"

"வேணாம் இந்து...

"கட்டாயம் பார்க்கணும் முரளி. இட் இஸ் எ மஸ்ட். ஏன் ஒளியறீங்க? இப்ப என்னால நினைச்சாலும் உங்க கூட ஓடி வர முடியாது. எனக்குன்னு புருஷன், புள்ளைன்னு வந்தாச்சு. வாங்க. தைரியமாத் தயவு செஞ்சி வாங்க. இன்னும் ஒரு மணி நேரத்தில் எதிர்பார்ப்பேன்.

எதிர் முனையில் ஃபோன் வைக்கப்பட்டது. முரளி திக்பிரமையோடு மேலே வந்தான்.

"யாருடா முரளி?"

"......"

"யாருடா?"

"இந்து."

தாமோதரன் முகம் சுருங்கிப் பக்கத்தில் வந்தான். "என்னவாம்?"

"வரச் சொல்லியிருக்கா."

"போ."

முரளி தயக்கமாய்த் தலையணையில் முகம் புதைத்துப் படுத்தான்.

"ஏன் கூப்பிடுறா தாமு?"

"போய்ப் பாரு."

"அஞ்சு ரூபா தாடா. பிஸ்கட் வாங்கணும்.

ஷர்ட் மாட்டிக் கொண்டு கீழ் வீட்டில் குடை வாங்கித் தெருவில் இறங்கினான். தாமோதரன் கொடுத்த ஐந்து ரூபாய் பிஸ்கட் ஆனது.

வாசல் நிறைத்துக் காலையில் இந்து கோலம் போட்டிருக்க வேண்டும். மழையில் முற்றம் நனைந்து கோலத்தின் தடம் வெளுப்பாய்த் தெரிந்தது. முரளி கதவைத் தட்டிய மறு நிமிஷம் கதவு திறந்தது.

"வாங்க."

இந்து... எதற்காகக் கூப்பிடுகிறாய்? கதை வாசித்து, நானும் உன்னைக் காதலித்தது புரிந்து போயா? அதான் காதலித்தாயே — வா, இப்போது புறப்படுவோம் என்றா? புருஷன், பிள்ளையை விட்டு வருதல் அசாதாரணம் என்றாயே — என்ன அர்த்தம்? அவர்களும் இருக்கட்டும். நீயும் இரு என்றா?

போய் விடலாமா? இதோ இந்தக் கடைக்குப் போய் வருகிறேன் என்று போய் விடலாமா?

"உன் கணவர் எங்கே இந்து?"

"குழந்தையைக் கூட்டிட்டுக் கடைக்குப் போனார். வந்திடுவார். உட்காருங்க."

"இந்த மழையிலேயா?"

இந்து பதில் பேசாமல் மோடாவை இழுத்துப் போட்டாள். நீட்டின பிஸ்கட் பாக்கெட்டை வாங்கி 'தாங்க்யூ' சொல்லி மேஜையின் மேல் வைத்தாள்.

"கதை வாசிச்சீங்களா?"

"ம்...."

"நல்லாயிருந்தது இல்லே முரளி? பக்கா தாமோதரன் கதை.

"......"

இந்து கண்ணைத் தாழ்த்தி நகம் சுரண்டினாள்.

"நீங்க... என்னை லவ் பண்ணியிருக்கீங்க முரளி."

"......"

"பின்ன ஏன் மறைச்சீங்க? தாமோதரன் எழுதின மாதிரி ஐந்நூறு ரூபாச் சம்பளம் தான் காரணமா?

முரளி ஒன்றும் சொல்லாமல் கூரையைப்

பார்த்தான். எழுந்து போய் விடலாமா? இது எங்கே கொண்டு போய் விடும்?

"பதில் சொல்லுங்க முரளி. அதான் காரணமா?"

"ம்."

"பணம்தான் காதல்ன்னு எங்கே கத்துக்கிட்டீங்க முரளி?"

"......"

பணம் தேவையில்லைன்னு சொல்லலை. அதை விட மனசு தேவை முரளி. 'ஐ லவ் யூ'ன்னேனே — அது உங்க பணத்துக்காக இல்லை. உங்களுக்காக."

இந்துவின் குரலில் ஆவேசம் ஏறியிருந்தது.

"இத்தனை வருஷம் கழிச்சுத் தாமு இந்தக் கதை எழுதி இருக்கக் கூடாது இந்து."

"எழுதினது நல்லது முரளி. தினம் தினம் 'முரளி ஏன் என்னை விலக்கினார். அவர் என்னை லவ் பண்ணலையா? ஏன் எதுக்காக'ன்னு அலைக்கழிஞ்சது நேத்தோட சரி. இன்னைக்கிப் புரிஞ்சிட்டுது. நீங்களும் என்னை லவ் பண்ணியிருக்கீங்கன்னு தெரிஞ்சாச்சு. இனி மனசு அலைக்கழிய வேணாம். ரெண்டு வருஷமா நான் படுகிற பாடு இனிமேல் இடையாது. யோசிச்சு யோசிச்சு நொந்த மனசு இனி இல்லை முரளி."

"கஷ்டமாயில்லையா இந்து... இது முன்னமே தெரிஞ்சிருந்தா என்னைக் கல்யாணம் பண்ணி இருக்கலாமேன்னு தோணலையா?"

"இல்லை முரளி. பொய் சொல்லாம சொல்லணும்னா இல்லை. பணத்துக்குப் பயந்திட்டு ஓடின உங்களை நல்லவேளை கல்யாணம் பண்ணிக்கலைன்னு தோணுது. நீங்க உங்க காதலை ஒத்துக்கிட்டிருந்திருக்கலாம். 'இதோ பாரு இந்து, ஐ லவ் யூ. ஆனா இப்ப ஐந்நூறு ரூபாதான் வாங்கறேன். ஆயிரம் ரூபா வாங்கின பிறகுதான் கல்யாணம். காத்திருப்பியா'ன்னு ஒரு வார்த்தை கேட்டிருந்தா ஜென்மத்துக்கும் காத்திட்டிருந்திருப்பேன் முரளி. இப்ப வேதனை இல்லை. நல்லவேளை ஒரு கோழையைக் கட்டிக்கலைன்னு தோணுது."

"இ...ந்...து..."

"தப்பா எடுத்துக்காதீங்க முரளி... ப்ளீஸ்... என் புருஷனுக்கும் இது தெரியும். எல்லாம் தெரியும். கதையை முதல்ல வாசிச்சது அவர்தான். என்கிட்ட காட்டி 'உன் கதை'ன்னு சொன்னார். ஃபோன் பண்ணச் சொன்னார். முடிவு தெரிஞ்ச பிறகு பேசிடறது நல்லதுன்னார். நீங்க சொன்ன மாதிரியே நல்ல சிநேகிதியா, நல்ல சிநேகிதனா நாம பிரிஞ்சது நல்லதுதான். இதைச் சொல்லணும்னு தோணிச்சு முரளி..."

முரளி பதில் பேசாமல் மழை வெறித்த வானத்தைப் பார்த்தான். இந்து காப்பி கலக்கி வந்தாள். குடித்து விட்டு எழுந்த போது, "அடிக்கடி வாங்க முரளி..." என்று எதுவுமே நடக்காதது போல் விடை கொடுத்தாள் இந்து.

21

நீரில் மிதக்கும் நிலா

''சபாஷ்'' என்றது அஸ்வின் குமார்.

திலகா வாசலைப் பார்த்தாள். ராணி திரும்பிப் பார்த்தாள். அஸ்வின் குமாருடன், ஜுபிடர் ரத்தினமும் நின்றிருந்தார்.

திலகா கட்டிலில் இருந்து கீழே இறங்கினாள்.

''பாருங்க அஸ்வின் இந்த வீட்ல என்னை எல்லோரும் சித்திரவதை செய்யறாங்க'' என்று அவனை நெருங்கி அவன் கையைப் பற்றிக் கொண்டாள். அஸ்வின் குமார் அந்த சந்தர்ப்பத்தை உபயோகப்படுத்திக் கொண்டு திலகாவை அணைத்துக் கொண்டான். ஜுபிடர் ரத்தினம் வேறுபுறம் பார்வையைத் திருப்பிக் கொண்டார்.

''நீ ரொம்ப சாதுப் பூனை மாதிரி திலகா. பூனை சீண்டச் சீண்ட சும்மாதான் இருக்கும். அதுவே அதோட உயிருக்கு ஆபத்துங்கற நிலை வரட்டும், சிறுத்தை மாதிரி பாய்ஞ்சிடும். அந்த மாதிரி ஸ்டெப்பைத்தான் இப்ப நீ எடுத்திருக்க. சபாஷ்'' என்றான் அஸ்வின் குமார் அவள் முதுகில் தட்டிக் கொடுத்துக் கொண்டு.

ராணி அந்த இடத்திலிருந்து உடனே அகன்று போனாள்.

''திலகா.... சாப்பிட்டியா?''

''இல்லை'' என்றாள் திலகா பொங்கி வந்த விம்மல்களுக்கிடையில்.

''வா... வா... மொதல்ல சாப்பாடு... ஜுபிடர் வாய்யா கீழ... உங்க வீட்ல எனக்கு ஒருவேளை சோறு போட மாட்டீங்க...?''

''ஐயோ... என்னங்க இது... இப்படிப் போய்க் கேட்கறீங்க... எல்லாமே உங்களது தானே... வாங்க, கீழ வாங்க... அம்மா ராணி... தட்டுப் போடும்மா. அஸ்வின் இன்னிக்கு நம்ம கூட சாப்பிடப் போறாரு...''

டைனிங் டேபிளின் இருபுறங்களிலும் நாற்காலிகள் போடப்பட்டிருக்க, திலகா ஜுபிடர் ரத்தினத்திற்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டாள். அஸ்வின் குமார் அவர்களுக்கு நேர் எதிரே உட்கார்ந்து கொண்டான். அவர்களின் தலைக்கு மேலே கையை நீட்டித் தொடுகிற உயரத்தில் தொங்கவிடப்பட்ட விளக்கில் இருந்து வெளிச்சம் நழுவி டைனிங் டேபிளை மட்டும் நனைத்திருந்தது.

டைனிங் டேபிளை ஒட்டி இருந்த சமையலறையிலிருந்து விளக்கின் வெளிச்சம், ஜன்னல் வழியே தப்பித்து வரும் சாய்ந்த சூரியக் கதிர்களைப் போல் இருக்க, ராணி கதவோரத்தில் நின்றிருந்தாள். அவ்வப்போது வந்து பரிமாறி விட்டு மறுபடியும் போய் அங்கேயே நின்று கொண்டாள்.

''திலகா, இவ்வளவு அவசரப்படக் கூடாது. யார் அந்தப் பையன்?''

''சந்திரன்'' என்றாள் திலகா மெலிந்த குரலில்.

''கண்டவன் பின்னால் எல்லாம் கூப்பிட்டான்னு போய்ட்டு வந்து நிக்கறியே. வயசாகலை ஒனக்கு? அறிவில்லை... எம் பொண்ணுங்க ஒவ்வொண்ணும் ரத்தினக் கல்லுங்கன்னு நெனைச்சிட்டிருந்தேன்... நீ அந்த நெனைப்புல மண்ணைப் போட்டுட்டியே....''

''ஷ்'' என்றான் அஸ்வின் குமார்.

''இல்ல அஸ்வின், நான் எதுக்குச் சொல்ல வரேன்னா...''

''ஷ்... இப்ப என்ன ஆய்டிச்சின்னு திலகாவை எல்லாருமாச் சேர்ந்து திட்டறீங்க. ஏன்யா ஜுபிடர், இண்டஸ்ட்ரியைப் பத்தி உனக்குத் தெரியுமா, தெரியாதா?''

''தெரியுங்க'' என்றார் ஜுபிடர் ரத்தினம் கொஞ்சம் கூடச் சுரத்தேயில்லாத குரலில்.

''தெரிஞ்சிதானேய்யா ஷில்பாவை அதில் இழுத்துவுட்டிருக்க. இப்ப திலகாவுக்கு நான் மூணு கம்பெனியில் சொல்லியிருக்கேன். எல்லாருமே தலையை ஆட்டியிருக்காங்க. நாளைக்கு ஸ்கிரீன் டெஸ்ட். நாளன்னைக்கே திலகாவுக்கு நீயே மேக்கப் போட்டுவுடப் போறே... வேணாம்னு சொல்லிடுவியா?''

''ஐயோ அப்படிச் சொல்லலியே... திலகா நடிக்கிறதுக்கும் கண்டவன் பின்னால் போறதுக்கும் வித்தியாசம் இல்லீங்களா... அதைத்தான் கண்டிக்கறேன்.''

''சரி... சரி. இங்க பாரு திலகா.. நீ வளர்ந்த பொண்ணு. ரெண்டுல ஒண்ணு நீதான் தீர்மானம் பண்ணணும். நீ நடிக்கப் போறியா, இல்ல அந்த சந்திரன் கிட்ட சண்டைக்குப் போய் அவனைக் கல்யாணம் பண்ணிக்கப் போறியா?''

''நான் நடிக்கறேன் அஸ்வின்.''

''குட். அதான் நல்ல முடிவு. நீ பெரிய ஆளா வரப் போறே. அப்ப உன்னை யாரார்ெல்லாம் அவமானப்படுத்திட்டாங்கன்னு நெனைக்கறியோ அத்தனை பேரையும் பழி வாங்கலாம். நீ இப்ப சொன்னியே சந்திரன், அவனை ஒரு சங்கிலியில் கட்டிப் போட்டுட்டு உம் பின்னாடியே இழுத்துக்கிட்டுப் போகலாம்! என்ன சொல்றே?''

''சரி.''

''நாளைக்கு உனக்கு ஸ்கிரீன் டெஸ்ட்

சுபா

டுன்னு சொல்லிட்டுப் போகலாம்னுதான் வந்தேன். இங்க என்னடான்னா இந்த மாதிரி ஒரு நெலைமை. சரி நான் ஒரு டாக்டர் விலாசம் சொல்றேன். நீ நாளைக்குக் காலை, யில அங்கே போய்டு. ஒண்ணும் சாப்புடாம போ. எல்லாத்தையும் கழுவிடலாம். ரெண்டு நாள் ஓய்வு எடுத்துக்க. மறுபடி எல்லாத்தை யும் புதுசா ஆரம்பிக்கலாம்... என்ன?''

''ம்'' என்றாள் திலகா யாரையும் நிமிர்ந்து பார்க்காமல்.

அஸ்வின் குமார் தட்டிலேயே கை கழு விக் கொண்டான். எழுந்தான். டெலி போனை நோக்கிச் சென்றான்.

''டாக்டருக்கு போன் பண்ணப் போறேன்'' என்று சொல்லி விட்டு டயலில் விரல் பதித்தான்.

''ஷில்பா இன்னும் வரலியேப்பா?'' என்று ராணி ஜூபிடர் ரத்தினத்தை நெருங் கிக் குரலில் கவலையுடன் கேட்டாள்.

''பாட்டு ஸீன் ஒண்ணு பண்ணிக்கிட்டி ருக்காம்மா. அது முடிஞ்ச பின்னால் கார்ல அனுப்பிடறேன்னு ஸ்ரீநாத் சொல்லியிருக் காரு...'' என்றார் ஜூபிடர் ரத்தினம் ராணி யின் முகத்தை நிமிர்ந்து கூடப் பார்க்காமல்.

ஸ்ரீநாத் ஷில்பாவைப் பின் சீட்டில் உட்கார வைத்து விட்டுக் கதவை அறைந்து சாத்தினான்.

''டிரைவர்... பத்திரமா கொண்டு விட் டுடுய்யா....'' என்றான்.

''சரிங்க.''

ஷில்பா பிருத்விராஜைப் பார்த்துக் கை யசைத்தாள். அவள் கண்கள் சோகப் பாட லுக்காகச் சிவந்திருந்தன. முகம் வாடியிருந் தது. என்னவோ உறவு மனிதர்களை எல் லாம் விட்டு விட்டுத் தொலை தூரத்திற்குப் போகிற மாதிரியான முகபாவத்துடன் இருந்தாள்.

''என்ன ரைட்டரே... அம்பாஸிடரோட டெய்ல் லாம்ப்ல மதுமதி தெரியறாளா என்ன? அதையே பார்த்துக்கிட்டிருந்தா என்ன அர்த்தம்?''



ஸ்ரீநாத், பிருத்விராஜின் தோளில் தட்டி, எங்கோ பறந்து கொண்டிருந்த பிருத்விராஜைப் பூமிக்கு இழுத்து வந்தான்.

''ம்... ம்... என்ன சொன்னே ஸ்ரீநாத்?''

''உன்ன வாய்யா... இப்ப மணி பதினொண்ணு. லாங் ஸீக்வென்ஸ் முடிச்சாச்சி. நல்லா வந்திருக்கான்னு பார்க்கணும். எடிட்டரோட உக்காரணும். எவ்வளவு வேலை இருக்கு? கதையைக் கன்டினியூ பண்றேன்னு சொன்னியே... பண்ணு. ரிலீஸ் டேட் கொடுக்கணும். சென்சாருக்கு அனுப்பணும். ஷில்பா கால்ஷீட்தானே நமக்கு முக்கியமா வேணும்?''

''ஆமா.''

''அஸ்வினுடையது வேணாமா...? ஓர் அரை நாள் கால்ஷீட் இருக்கே. படத்தோட ஹீரோவே அவர்தானே. சும்மா சும்மா ஃப்ளாஷ்பேக்ல அவர் மூஞ்சைக் காட்டிட்டிருந்தா ஜனங்க ஒத்துப்பாங்களா...?''

''ஹீரோயின் ஸப்ஜக்டுதானே ஸ்ரீநாத். அஸ்வினுக்கு வேலை இருக்கும்னு தோணலை.''

''சரி.. கதையை கன்டினியூ பண்ணு... மித்ரா மதுகிட்ட வந்து கல்யாணம் பண்ணிக்கறதுன்னு முடிவெடுத்தா நம்ப அப்ளிகேஷனையும் கொஞ்சம் கன்ஸிடர் பண்ணுன்னு சொல்லிட்டுப் போயிட்டான். அப்புறம்... யாருப்பா அங்கே... இங்கே வா. ஒரு பாக்கெட் ஃபில்டர் வில்ஸ். அப்புறம் ரெண்டு ஸ்பெஷல் டீ வாங்கிட்டு வா என்று கத்தினான் ஸ்ரீநாத்.

''மீரா'' என்று குரல் கொடுத்துக் கொண்டே முன்னறையில் நுழைந்தாள் மதுமதி.

சந்துருவின் உதடுகளை நோக்கித் தன் உதடுகளை இறக்கிக் கொண்டிருந்த மீரா சடாரென்று விலகினாள். சந்திரமௌலி திருட்டு விழி விழித்துக் கொண்டு அந்த அறையிலிருந்து வெளியேறினான்.

''என்ன மதுக்கா?'' என்று சீறினாள் மீரா.

''என்ன மீரா?'' என்று புரியாமல் கேட்டாள் மதுமதி.

''இப்பத்தான் எங்களுக்குக் கல்யாணம் ஆகி, ஹனிமூன் முடிஞ்சிருக்கு.''

''அதுக்கென்ன?''

''நீ பாட்டுக்கு இந்த ரூம்ல திடுதிப்னு வந்துடறே... நாங்க ரொம்ப ஷேமா ஃபீல் பண்றோம்.''

''நான் வந்தது தப்புத்தான் மீரா. ஆனா பகல்ல கொஞ்சம் அக்கம் பக்கத்து நெனைப்பு இருக்க வேண்டாம்? நான் யூஸ் பண்ணிட்டிருந்த ரூம் இல்லியா இது. அதனாலே என்னையறியாமலே நுழைஞ்சிடறேன்.''

''கொஞ்சம் டீஸன்டா இருந்துக்க மதுக்கா... என்ன விஷயம்? கூப்பிட்டியே!''

பழைய மீராவா இது? கல்யாணம் ஒரு பெண்ணை இவ்வளவு தூரம் மாற்றி விடுமா என்ன?

''இன்னிக்கு உங்க ரெண்டு பேருக்கும் டின்னர்—இல்லை ஒரு பார்ட்டி கொடுக்கறேன்னு மிஸ்டர் மித்ரா கூப்பிட்டிருக்கார். ஞாபகம் இருக்கா மீரா?''

''நீயும் வருவே இல்லே?''

''அவர் நம்ம எல்லாரையும்தான் இன்வைட் பண்ணியிருக்கார். வழக்கம் போல அம்மா வரலைன்னிட்டாங்க. நான் வரணுமா வேண்டாமாங்கறதை நீதான் டிஸைட் பண்ணணும்.''

''மித்ரா உன் முதலாளி. நீ வரக் கூடாதுன்னு சொல்றதுக்கு நான் யாரு?''

பளீர் பளீரென அங்கங்கே விளக்குகள் ஒளிர்ந்தன. மூங்கில் நாற்காலிகளில் நால்வரும் உட்கார்ந்திருந்தனர்.

மித்ரா, ''இன்னொரு பாசந்தி எல்லாருக்கும்'' என்றான்.

''ரொம்ப ஸ்வீட் சாப்பிட்டாத் திகட்டிப் போயிடும்'' என்று மறுத்தாள் மதுமதி.

மித்ரா நாற்காலியைப் பின்னால் தள்ளிச் சாய்ந்து உட்கார்ந்தான். ''இந்த சமயத்தில நான் உங்களுக்கு இன்னொரு ஆச்சரியம் கொடுக்கலாம்னு பாக்கறேன்'' என்றான் ஒவ்வொரு முகமாய்ப் பார்த்துக் கொண்டு.

''சொல்லுங்க'' என்றாள் மீரா, புறங்கையால் உதட்டுக்கு மேல் துடைத்துக் கொண்டு.

''மிஸ்டர் சந்துருவுக்கும், மிஸ் மதுமதிக்கும் அப்ஜெக்ஷன் இல்லேன்னா, மிஸஸ் மீராவுக்கு நம்ப கம்பெனியிலேயே ஒரு வேலை போட்டுத் தரலாம்னு முடிவு பண்ணி இருக்கோம்.''

''வாவ்'' என்று எழுந்து குதிக்காத குறையாய் மீரா உணர்ச்சிவசப்பட்டாள்.

''என்ன சந்துரு சொல்றே?'' என்றாள் மதுமதி அவன் பக்கம் பார்த்து.



அவன் : உங்க தலைவர் பிறந்த நாளுக்கு ''கேக்'' வெட்டினார். நீங்க என்ன செய்தீங்க?

இவன் : ''மால்'' வெட்டினோம்!

— சுலோசனா பார்த்தசாரதி.

உங்கள் குழந்தைக்கு
அளியுங்கள் ஸெரிலாக் அனுகூலம்



திட உணவின் தொடக்கத்திலிருந்தே

உங்கள் குழந்தைக்கு நான்காம் மாதத்திலிருந்தே பாலோடு திட உணவும் தேவை. அப்போது ஸெரிலாக் அனுகூலம் அளியுங்கள்.

போஷாக்கு அனுகூலம்: ஒவ்வொரு முறை ஸெரிலாக் ஊட்டும் போதும், புரதச்சத்து, கார்போஹைட்ரேட், கொழுப்பு, வைட்டமின், மற்றும் தாதுப் பொருட்கள் ஆகிய எல்லா போஷாக்குச் சத்துக்களும் சரியான விகிதத்தில் உங்கள் குழந்தைக்குக் கிடைக்கிறது.

சுவை அனுகூலம்: ஸெரிலாக் சுவையில் குழந்தைகளுக்குக் கொள்ளை ஆசை.

தயாரிப்பதில் அனுகூலம்: ஸெரிலாக் ஏற்கனவே பதமாக்கப்பட்டது: பாலும் சர்க்கரையும் கலந்தது. காய்ச்சி ஆறிய நீரில் கலந்தாலே போதும்

தேர்ந்தெடுக்க அனுகூலம்: இப்போது ஸெரிலாக், மூன்று வெவ்வேறு வகைகளில்!

சுகாதாரமான முறையில் தயாரிக்கவும், சரியான விகிதத்தில் போஷாக்கு கிடைக்கவும் டின்னில் தரப்பட்டுள்ள குறிப்புகளை தயவு செய்து பின்பற்றுங்கள்.



6 மாதங்களிலிருந்து

4 மாதங்களிலிருந்து

6 மாதங்களிலிருந்து

இலவசம்
ஸெரிலாக் பேபி கேர் புத்தகம்
எழுதுங்கள்: ஸெரிலாக்,
தபால் பெட்டி எண். 3
புது தில்லி-110008

Nestlé

ஸெரிலாக் பராமரிப்பு: முழுமையான போஷாக்கு, சிறப்பான சுவை



"பேரணியில கலந்துக்கிட்டவங்களுக்குப் பணம் கொடுத்தது தலைவருக்கு எப்படியோ தெரிஞ்சுப் போச்சி...!"

"அடடா! ரொம்பக் கோவிச்சுக்கிட்டாரா?"

"கோவிச்சாத்தான் பரவாயில்லையே! அவரோட சேர்த்து அவர் குடும்பத்தில மொத்தம் அஞ்சு பேர் கலந்துக்கிட்டாங்களாம். அவங்களுக்கும் பணம் கேட்கிறாரு..."

— உ. ரா. ராஜேந்திரன்.

சந்திரமௌலி கொஞ்சம் தயங்கிப் புன்னகை செய்தான்.

"அவளுக்கு இஷ்டமிருந்தா எனக்கு அப்ஜெக்ஷன் இல்லே."

மீரா ஸில்வர் ஜெம்ஸின் மாம்பலம் கிளையில் வேலைக்குச் சேர்ந்து ஒரு மாதமா ஆகி விட்டது என்ற லேசான வியப்புடன் பஸ்ஸில் இருந்து இறங்கினாள் மதுமதி.

அடையாறு சாலையில் நிழலான மரங்களுக்குக் கீழ் நிறைய ஜோடிகள் நடந்தார்கள். பண வாசனை வீச நடந்த ஜோடி. மண்வாசனை மட்டும் வீச நடந்த ஜோடி. புதிதாய்க் கல்யாணமான ஜோடி.

'என் சிவா, என்னை மட்டும் தனியாக விட்டுப் போனீர்கள்?'

மதுமதிக்கு உடனே திருவான்மியூர் தோட்டத்திற்குப் போக வேண்டும் போல் மனம் பரபரத்தது. அங்கிருக்கும் ரோஜாக்களைப் பார்த்தால் சிவாவைப் பார்த்த மாதிரி.

வீடு வந்ததும் முதல் வேலையாய் "சந்துரு" என்று குரல் கொடுத்தாள் மதுமதி.

"இதோ நான் இங்கே இருக்கேன்" என்று பின்னால் இருந்து சந்துருவின் குரல் கேட்டது.

மதுமதி வீட்டுக்குள் பார்ப்பதை விட்டுப் பின்னால் திரும்பி கேட் பக்கம் பார்த்தாள்.

சந்திரமௌலி ஒரு நான்கைந்து பெட்டிகளை ஒற்றைக் கையில் வைத்துக் கொண்டு கேட்டைத் தாள் நீக்க முயற்சி செய்து கொண்டிருந்தான். மீரா சற்றுப் பின் தள்ளி, விளக்குக் கம்பத்தை முகர்ந்து கொண்டிருந்த நாயை வேடிக்கை பார்த்துக் கொண்டே சாவகாச நடையில் வந்தாள்.

மதுமதி சடாரென்று படியிலிருந்து இறங்கி கேட்டைத் திறந்து விட்டாள்.

"தாங்க்ஸ் மது" என்றான் சந்திரமௌலி.

"எங்க போய் வரீங்க ரெண்டு பேரும்?"

"ஷாப்பிங். மீரா வேலைக்குப் போறா இல்லியா. நாலஞ்சு புடைவை வாங்கணும்னா... தட்ஸ் ஆல். நீ என்னை எதுக்கோ கூப்பிட்டியே மது."

"திருவான்மியூர் வரைக்கும் போய்ட்டு வரலாமா ப்ளீஸ்?"

"என்ன மது இப்படிக் கேக்கறே? ஜஸ்ட் ஒன் மினிட். நான் மூஞ்சி கழுவிட்டு வந்துடறேன்."

"டைலர் கடைக்குப் போகணும்னேனே சந்துரு" என்றாள் மீரா, மதுமதியை எரிச்சலுடன் பார்த்துக் கொண்டே.

"நாளைக்குப் போகலாமே" என்றான் சந்திரமௌலி அவசரமாய்.

திருவான்மியூர் பஸ் நிலையத்தில் இறங்கும் போது மணி ஆறைத் தாண்டி இருந்தது. வானம் இருள் பூசியிருந்தது. மனம் நிறையப் பரபரப்புடன் மதுமதி நடக்கத் தொடங்கினாள்.

"என்ன மது இப்படி ஓடறே?"

"நாலு நாள் ஆச்சி சந்துரு நான் இந்தப் பக்கம் வந்து!"

இரண்டு எருமைகள் வழியை முழுக்க அடைத்துக் கொண்டு உடம்போடு உடம்பு இடித்துக் கொண்டு, கீழ்த் தாடையை விடாமல் நகர்த்தி நகர்த்தி அசை போட்டுக் கொண்டு எதிரே வர, சட்டையின்றி வெறும் பாவாடையுடன் ஒரு சிறுமி 'ஹை' 'ஹை, ஹை' என்று ஒப்புக்கு ஒரு குச்சியைச் சுழற்றிக் கொண்டு பின்னால் வந்தாள்.

கண்களில் தோட்டம் தெரிந்ததும் மதுமதி சடாரென்று நின்றாள். கண்கள் நம்ப முடியாமல் சுருங்கின.

"சந்துரு, இங்கே பாரேன். சந்துரு, இங்கே பாரேன்" என்று ஹிஸ்டீரியாவால் தாக்கப்பட்ட மாதிரி கிறீச்சிட்டாள்.

சந்திரமௌலிக்கும் கூடை நெருப்பை அள்ளி யாரோ மார்பில் கொட்டிய மாதிரி இருந்தது.

தோட்டம் சீரழிந்திருந்தது. சுற்றியிருந்த முள்வேலி கான்க்ரீட் கம்பத்துடன் சாய்ந்திருக்க, இனந்தெரியாமல் ஏராளமான காலடிகள், ஆடு, மாடு, நாய், மனிதர்கள் என்று.

எப்படி, எப்படி இந்த மாதிரி நடந்தது?

பூத்துக் குலுங்கிய சிவாவின் ரோஜாக்கள் எல்லாம் எங்கே? புல்லும், இலையும் கால்நடைக்கு உணவாகிப் போகவா இங்கு ஆள் அமர்த்திப் பராமரித்தது? பூவையெல்லாம் பறித்துப் புதைத்து விட்டுச் சுடுகாடு மாதிரி மாற்றிப் போடவா இத்தனை கனவுகளை இந்த மண்ணில் வளர்த்து வந்தது?

ரோஸ் நிறத்தில், சற்றே நீல நிறத்தில், மிகச் சிவப்பு நிறத்தில் என்று வானவில் வர்ணத்து ரோஜாக்கள் அத்தனையும் சேற்றோடு அரைபட்டுப் போயிருந்தன.

(தொடரும்)

தினமலர்

வாரமலர்

ஜன-1, '89 புத்தாண்டு சிறப்பிதழில்,



புனிதன்

ராஜேந்திரகுமார்



எழுதும்

இரு புதிய தொடர்கதைகள்

ஆரம்பம்!

உங்கள் பிரதிக்கு இப்போதே
கடைக்காரரிடம் சொல்லி வையுங்கள்!

ஒவ்வொரு ஞாயிறும், தினமலர் நாளிதழுடன் இணைந்து வரும் புத்தகம் வாரமலர்.



ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள மாணவர்கள்.

எழுபது மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னால்....

"நாம் இப்போது நிற்கும் இடம் எழுபது மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னால் கடலாக இருந்தது. இங்கே கடல் அலைகள் வந்து மோதியிருக்கும். அதற்கான ஆதாரங்களை இப்போது உங்களுக்குக் காண்பித்து விளக்கப் போகிறேன்'' என்று ஆரம்பிக்கிறார் பேராசிரியர் சத்தியமூர்த்தி. மாணவர்களுக்கு அவர் எடுத்துக் 'கூறுவது இந்த அளவுக்கு மட்டும்தான் நமக்குப் புரிகிறது. அதன் பிறகு விஞ்ஞான கலைச் சொற்களில் இறங்கி விடுகிறார். மாணவர்கள் குறிப்பெடுத்துக் கொள்கிறார்கள்.

திருச்சிராப்பள்ளி சென்னை நெடுஞ்சாலையில் ஆலத்தூர் கேட் என்கிற இடத்தில் நாங்கள் இருக்கிறோம். திருச்சியின் புகழ்பெற்ற தேசியக் கல்லூரியின் 'புவியமைப்பியல்' (GEOLOGY) வகுப்பு மாணவர்கள் அவர்கள். மாதிரி சேகரிப்புக்கான சுற்றுலா அது.

'தென்னிந்தியாவின் ஃபாஸில் (Fossil) மியூசியம்' என்று வழங்கப்படுகிறது அரியலூர் வட்டாரம். பல கோடி ஆண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்து மடிந்து, இப்போது அந்த இனமே இல்லாமல் கூட அழிந்து போன கடல்வாழ் உயிரினங்களின் ஃபாஸில்கள் பிரமிக்கத்தக்க முறையில் பாதுகாக்கப்பட்டு இங்கு கிடைக்கின்றன. ஃபாஸில் என்றால் என்ன? கடல் நீர், பெரிய பூகம்பம் போன்ற ஏதோ ஒரு காரணத்தால் கீழே இறங்கி விட்ட போது இந்த ஜீவராசிகள் அப்படியப்படியே மண்ணில் சிக்கிக் கொண்டன. நாளடைவில் மண் இறுகிப் பாறையாகும் போது உயிர்களின் திசுக்கள் அழிய ஓட்டுப் பகுதிகள் மட்டும் வடிவம் மாறாமல் பதிவாகி விடுகின்றன. பாரதத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து புவியமைப்பியல் பயிலும் மாணவர்கள் இந்த அற்புத ஃபாஸில்களைச் சேகரிப்பதறகாக இங்கு வருகிறார்கள். அவர்களுக்கு வழிகாட்டி உதவும் பணியில் தேசியக் கல்லூரியின் ஆசிரியர்களும் மாணவர்களும் ஈடுபடுகிறார்கள்.

இப்போதைய பயணம் காலை ஆறு மணிக்குத் திருச்சியில் தொடங்கியது. டூரிஸ்ட் பஸ்ஸில் நாற்பத்திரண்டு மாணவர்கள்.

''ஸார்! இன்னிக்கு ஒருத்தன் கூடக் கட் அடிக்கல்லே... அவ்வளவு பேரும் ஆஜர்.''

''குட்... ஜாக்கிரதையாப் போய்ட்டு வாங்க. திரும்பி வந்து கட்டுரை எழுதணும். விஷ் யூ ஆல் த பெஸ்ட்'' என்று பேராசிரியர் வந்து பஸ்ஸிலே ஏறி வாழ்த்தி வழி

அனுப்புகிறார்.

ஆலத்தூர் கேட்டில் காலை எட்டு மணிக்கு முறையான வகுப்பு. மரத்தடி நிழலில், சுகமான இளம் வெயிலில் தொடங்குகிறது. இப்படியே சூழ்நிலையை ஒட்டிய கல்வியாகக் கிடைத்தால் எந்த மாணவருக்கு அல்லது ஆசிரியருக்குத்தான் கசக்கப் போகிறது? வகுப்பறையில் அடைந்து கிடந்து, என்னதான் கவர்ச்சிகரமாகப் பாடம் நடந்தாலும் இந்த மாதிரி 'அவுட் டோர்' வகுப்பின் சுகமே சுகம். அன்று மாலை ஆறரை மணி வரை கால்கடுக்கச் சுற்றிய பின்னரும் எந்த மாணவரும் அலுத்துக் கொள்ளவில்லை. மாறாக, திட்டமிட்டிருந்த இடங்களுள் ஒன்றான காட்டுப் பிறங்கியத்துக்கு, நேரமின்மையால் போக முடியாமல் போய் விட்டதே என்ற ஏக்கமே அவர்களிடம் காணப்பட்டது.


ஆலத்தூர் வாசலில், கிணறு வெட்டிக் குவித்திருந்த பாறைக் கற்களை எடுத்துச் சுத்தியலால் உடைத்துப் பார்த்து, அந்த நிலத்தடிப் பாறையின் அமைப்பைக் கவனித்துக் கொண்ட மாணவர்கள் தாணி என்கிற இடத்தில் உள்ள களிமண் பாறைச் சுரங்கத்துக்கு வருகிறார்கள். டால்மியா சிமெண்ட் நிறுவனம் குத்தகைக்கு எடுத்துள்ள பூமி அது. அங்கே, சுரங்க அலுவலகத்திலேயே அபூர்வமான தாவர ஃபாஸில்கள் படிந்த களிமண் பாறைத் துண்டுகளை எடுத்துக் காட்டுகிறார்கள்.

பின்னர், சுரங்கத்துக்கு அருகே போய், உடைத்துக் குவித்து வைத்திருக்கும் பாறைகளைப் புரட்டிப் பார்த்து ஃபாஸில்களைத் தேடுகிறார்கள். ஒரு சிலருக்கு ஃபாஸில்கள் கிடைக்கின்றன. ஒருவருக்குக் கோடிக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த தாவரங்களின் இலை வடிவங்கள் களிமண் பாறைகளுக்கு இடையே அப்படியே ஃபாஸில்களாகப் பதிவாகியுள்ளது கிடைக்கிறது. தாவர இலைகளின் கார்பன் பகுதி மட்டும் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் ஆன போதிலும் மக்கிக் கரையாமல் அச்சுப் போல் படிந்து விட்டிருக்கிறது.

அடுத்த கட்டத்தில் ஊட்டத்தூர் கிராமத்தை அடைந்து 'காரை பேட் லாண்ட்ஸ்' (BAD LANDS) பகுதிக்கு மாணவர்கள் வரும் போது உற்சாகம் பெருக்கெடுக்கிறது.

'இந்தியாவிலேயே இது போன்ற 'பேட் லாண்ட்ஸ்' அமைப்பை வேறு எங்கும் பார்க்க முடியாது' என்கிறார் பேராசிரியர். மண் குன்றுகள் அப்படியே 'தொப்பி' போட்ட சிப்பாய் மாதிரி குப்பல் குப்பலாக நின்று கொண்டிருக்கின்றன. காலம் காலமாகக் கொட்டுகிற மழையில், கோடிக் கணக்கான ஆண்டுகளாக இந்த நிலம் முழுவதும் கரைந்து ஓடிக் கொண்டே இருக்கிறது.

சமப்படுத்தவோ, எதையாவது பயிரிடவோ முடியாத 'மோசமான நிலம்' (Bad Lands)



காரை பேட் லேண்ட் மற்றும் மருதையாற்றுப் படுகையில் கிடைத்த ஃபாஸில்கள்

இது. இந்தப் பகுதிகளில் தடம் தப்பிப் போனால் அப்புறம் ஆளைக் கண்டுபிடிக்கவே முடியாது! தலைவால் புரியாமல் சுற்ற வேண்டியதுதான். அதனால் மாணவர்கள் பிரிந்து விடாமல் ஒரே கூட்டமாக இருக்குமாறு எச்சரிக்கப்படுகிறார்கள்.

இங்கே ஏராளமான கடல்வாழ் உயிரினங்களின் ஃபாஸில்கள் கிடைக்கின்றன. மழை நீரில் உப்புக் கரைந்து அடித்துப் போகப் பட்டது போக எஞ்சியுள்ள ஜிப்ஸம், தகடு தகடாய்க் கண்ணுக் கெட்டிய தூரம் வரை இறைந்து கிடக்கிறது. இவற்றுக்குப் பலவித புவியியல் பெயர்களைச் சூட்டியிருக்கிறார்கள். மத்தாப்பூவில் நிறம் காட்டுகிற செலஸ்டைட் என்கிற தாதுப் பொருளும், கால்ஸியம் பாஸ்பேட் கட்டிகளும் இங்கே நிறையக் கிடக்கின்றன. கடல்வாழ் உயிர்களின் ஓடுகள் கரைந்து நெகிழ்ந்து காலப்போக்கில் அப்படியே உருமாறி உருண்டைகளாகி விட்டன. இவை அசப்பில் உருளைக் கிழங்கு மாதிரி இருப்பதால் இவற்றுக்கு 'ஊட்டத்தூர் பொட்டேட்டோ' என்றே பெயர் வைத்திருக்கிறார்கள்!

'ஃபாஸில்' களிலும் போலிகள் உண்டு. சாதாரணமான மண் கல் உருண்டைகள் கூட விதம் விதமான உருவம் காட்டி இதுவா அதுவா என்று யோசிக்க வைக்கும். நகத்தால் கீறி, சுத்தியால் சுரண்டி, சுத்தியால் உடைத்துப் பார்த்து அது ஃபாஸிலா இல்லையா என்று விஷயமறிந்தவர்கள்தான் தீர்மானிக்க முடியும்.

முழு மரங்கள் கூட அப்படியே பாறைகளில் அகப்பட்டு ஃபாஸில்கள் ஆகி விடுவதுண்டு. 'கல் மரம்' என்று வழங்கப்படும் இவற்றின் துண்டுகள் அரியலூர்ப் பகுதியில் நிறையக் கிடைக்கின்றன. ஃபாஸில்களைத் தமிழில் 'எச்சம்' என்று குறிப்பிடுகிறார்கள்.

கூரை பேட்லாண்ட்ஸ் தவிர, குளக்காநத்தம், கூத்தூர், ஒத்தக் கோவில் என்று சில குறிப்பிட்ட இடங்களின் குறிப்பிட்ட பகுதிகளில் இந்த மாதிரி ஃபாஸில்கள் கிடைக்கின்றன. மழை பெய்தவுடன் போனால் ஃபாஸில்கள் வெளியே தெரியும். அப்போது போய்ப் பொறுக்குவது சுலபமானது.

மருதையாற்றுப் படுகைக்குக் கல்லூரி மாணவர்கள் போவதற்கு முன்னால் உள்ளூர்ப் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் அவர்களை நோக்கி ஓடி வருகிறார்கள். சத்துணவு சாப்பிடுகிற தட்டுகளில் முழு ஃபாஸில்களையெல்லாம் முன்னாலேயே பொறுக்கி வைத்துக் கொண்டு 'விற்பனை' செய்கிறார்கள். மெகலாடன், ட்ரிகோனோரியா என்று வாயில் நுழையாத பெயர்கள் எல்லாம் கூட அந்தச் சிறுவர்களுக்குத் தெரியும்! அதிகபட்சம் இருபத்தைந்து காசு விலைதான்!

''ஏய்... என்ன துட்டுக் கொடுத்து வாங்கிட்டியா...?'' என்று நிஜமாகவே தேடி எடுத்த அபூர்வ ஃபாஸிலைப் பார்த்து ஒரு மாணவர் கேட்கும் போது, கேள்விக் கணைக்கு உள்ளானவர் பதறிப் போய் ''சத்தியமா இல்லேடா... நானேதாண்டா எடுத்தேன்..'' என்று பதில் தருவது அனுபவிக்க வேண்டிய ஒரு காட்சி.

பொடி நடையாகக் கிலோ மீட்டர்க் கணக்கில் காட்டுப் பாதையில் நடந்து போகிற மாணவர்களைப் பார்த்துச் சாட்டைக் குச்சியை நீட்டி.. ''இந்தப் பக்கம் போங்க தம்பி, நெறையப் பொறுக்கலாம்'' என்று காட்டுகிற மாட்டு வண்டிக்காரர்கள் கூட இந்தப் பகுதியின் பெருமையை அறிந்தே இருக்கிறார்கள்.

புவியமைப்பியல் என்கிற ஸயன்ஸ் பிரபலமாவதற்கு முன்னால் இந்த ஃபாஸில்கள் பில்லி சூன்யம் வைப்பவர்களின் கருவியாகப் பயன்பட்டிருக்கிறது. TOYS OF GODS... கடவுளின் விளையாட்டுப் பொம்மைகள் என்று இவை வழங்கப்பட்டன.


கிலோ மீட்டர் கணக்காய் நடந்து அலைந்து திரிந்து விட்டு அடுத்த கட்டத்துக்குப் போக டூரிஸ்ட் பஸ்ஸில் ஏறுகிற போது, ஒலிக்கும் விதம் விதமான 'டப்பா' சினிமாப் பாட்டுக்கள் எழுபது மில்லியன் ஆண்டுக் கனவுகளைச் சிதற அடிப்பது போல் ஒலிக்கின்றன. ஆனால் அடுத்த இடத்தில் — சினிமாப் பாட்டை அப்படியே விட்டு விட்டுக் கையில் சுத்தியலுடன் கற்களைத் தேடி ஓடுகிற அவர்களுடைய துறுதுறுப்பில் நமக்குப் பொறாமை ஏற்படுகிறது.

— சுப்ர. பாலன்

அடுத்த இதழில்......

சாமியே சரணம்
சரணம் ஐயப்பா!

— கவர் ஸ்டோரி



● கண்ணைக் கவரும் வண்ணப்படத்தோடு நடுப்பக்கத்தில் வெளியாகும் 1989 — ஆம் வருட காலண்டரைத் தனியாக எடுத்து வைத்துக் கொள்ள மறந்து விடாதீர்கள்.



"மா மவ மீனாட்சி"





8 இன்று இறப்பு விழா

போலீஸ் கமிஷனர் ஹில், பதற்றமும் கவலையுமாய் ஒரு சின்ன போலீஸ் பரிவாரத்தோடு, ஹோட்டல் ஓபேராய் டவர்ஸ் போய்ச் சேர்ந்த போது பூபேஷ் தவிப்பாய்க் காத்திருந்தார். வியர்த்த முகமாய் எதிர்கொண்டார். ''வாங்க... க மி ஷ ன ர் ஸார்...''

ஹில் லிஃப்ட்டை நோக்கி நடந்து கொண்டே கேட்டார்: ''கயல்விழி காணாமல் போனது உங்களுக்கு எப்போது தெரியும் மிஸ்டர் பூபேஷ்....?''

''பத்து நிமிஷங்களுக்கு முன்புதான்.''

''எப்படித் தெரியும்...?''

''கயல்விழியின் கோச் பரதன்தான் என்னுடைய அறைக்கு வந்து சொன்னார்.''

''இந்த விஷயம் மற்ற வீரர்களுக்குத் தெரியுமா?''

பூபேஷ் பெருமூச்சு விட்டார். ''தெரியாது. ரகசியமாகத் தேடிக் கொண்டிருக்கிறோம்.''

க்ரெளண்ட் ஃப்ளோரில் விரியக் கிடந்த லிஃப்ட்டுக்குள் நுழைந்து ஐந்தாவது மாடிக்கு உயர்ந்து வராந்தாவில் வெளிப்பட்டு நடந்தார்கள். ஷூக்கள் மொசைக்கில் தாளமிட்டன.

''ரூம் நெம்பர்....?''

''ஃபைவ் நாட் நைன் ஸார்.''

வராந்தாவின் மையத்தில் — 509—ஆம் எண் அறை வாசலில் கயல்விழியின் கோச் பரதன் இருண்டு போன முகத்தோடு நின்றிருந்தார். முன் வழுக்கையில் வியர்வை மின்னியது. வேக வேகமாய் நடந்து வந்த எல்லோரும் அறைக்குள் நுழைய, கதவு சாத்தப்பட்டது. ஹில் பரதனிடம் கேட்டார்: ''கயல்விழியைக் கடைசியாக எப்போது பார்த்தீர்கள்?''

''ஐந்தரை மணிக்கு.''

''எங்கே பார்த்தீர்கள்?''

''ஐந்தரை மணிக்கு நான் குளிக்கக் கிளம்பிய போது, கயல்விழி ட்ரஸ்ஸிங் டேபிளுக்கு முன்னால் உட்கார்ந்திருந்தாள். 'நீங்கள் குளித்து விட்டு வாருங்கள்; நான் கீழே ரெஸ்டாரெண்டில் காத்திருக்கிறேன்' என்று சொன்னாள். அவள் வெளியே போனதும் அறைக் கதவைத் தாளிட்டு விட்டுக் குளித்தேன். குளித்து உடை மாற்றிக் கொண்டு ஆறு மணிக்கு ரெஸ்டாரெண்டுக்குப் போனேன். அங்கே கயல்விழி இல்லை. யாருடைய அறையிலாவது உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்பாளோ என்கிற எண்ணத்தில் மற்ற வீரர்கள் தங்கியிருந்த ஒவ்வொரு அறைக்கும் போய் விசாரித்தேன். வரவில்லை என்று சொன்னார்கள். மனசுக்குள் லேசாய்க் கலவரம். உடனே மிஸ்டர் பூபேஷிடம் போய்த் தகவல் சொன்னேன்."

கவனமாய்க் கேட்ட ஹில், தம் ஆரோக்கியமான மோவாயை இடது கை விரல்களால் வழுவிக் கொண்டே பரதனை ஏறிட்டார்.

''ஹோட்டலின் மற்ற பகுதிகளில் தேடிப் பார்த்தீர்களா?''

''பார்த்தேன்... காபரே ஹால், கம்யூனிடி ஹால், ஸ்விம்மிங் பூல், கார்டன்... இப்படி எல்லாப் பக்கமும் போய்ப் பார்த்தேன்.''

''ஹோட்டல் ரிசப்ஷன் கௌண்டரில் விசாரித்தீர்களா?''

''விசாரித்தேன்.''

''என்ன சொன்னார்கள்?''

''ஒலிம்பிக் க்ரூப்பைச் சேர்ந்த யாருமே வெளியில் போகவில்லை என்று சொன்னார்கள்.''

''அப்படியானால் கயல்விழி ஹோட்டலுக்குள்தான் இருக்க வேண்டும்.''

தீர்க்கமான குரலில் சொன்ன ஹில், பக்கத்து டீபாயின் மேலிருந்த இண்டர்காமின் ரிஸீவரை எடுத்தார். கரகரத்தார்.

''ஹலோ..... ரிசப்ஷன்?''

''எஸ்.... ஸார்.''

''நான் கமிஷனர் பேசுகிறேன். கடந்த ஒரு மணி நேரத்தில் உங்கள் ஹோட்டலில் இருந்து யாராவது அறையைக் காலி செய்து விட்டுப் போனார்களா?''

''இல்லை... ஸார்.''

''யாருக்காவது புதிதாக ரூம் கொடுத்தீர்களா?''

''இல்லை.... ஸார்.''

''சரி... இதைக் கேட்டுக் கொள்ளுங்கள். நான் சொல்லுகிற வரை இந்த ஹோட்டலிலிருந்தும் யாரும் அறையைக் காலி செய்து கொண்டு போக நீங்கள் அனுமதிக்கக் கூடாது.''

''எஸ்... ஸார்.''

''புதிதாக வரும் நபர்களை வரவேற்பறையிலேயே உட்கார்த்தி வையுங்கள்.''

''எஸ்... ஸார்.''

ராஜேஷ்குமார்

கமிஷனர் ரிஸீவரை வைத்து விட்டுத் தம் அருகே நின்றிருந்த அதிகாரிகளை ஏறிட்டார்.

"ஹோட்டலில் இருக்கும் எந்த ஓர் அறையையும் விடாதீர்கள். கயல்விழி காணோம் என்கிற விஷயம் நமக்குள் மட்டும் இருக்கட்டும். யாரோ ஒரு நபர் தங்கத்தைக் கடத்திக் கொண்டு வந்து இந்த ஹோட்டலில் தங்கியிருப்பதாகவும் – அந்த ஆசாமியை அமுக்குவதற்காகச் சோதனை மேற்கொள்ளப்படுகிறது என்று சொல்லுங்கள்."

அவர்கள் தலைகளையாட்டிக் கொண்டு நடந்தார்கள். கயல்விழியின் கோச் பரதனும் அவர்களைத் தொடர்ந்து போனார்.

பூபேஷ் நெற்றியைப் பற்றிக் கொண்டு ஹில்லுக்கு எதிரேயிருந்த நாற்காலியில் சரிந்து உட்கார்ந்தார். உடைந்த குரலில் சொன்னார்:

"ஸார் கயல்விழிக்கு என்னவோ மோசமாய் நேர்ந்திருக்கிறது."

"நான் அப்படி நினைக்கவில்லை பூபேஷ். கோச் பரதன் இந்த ஹோட்டல் முழுவதையும் சரியாய்த் தேடிப் பார்க்கவில்லை. அவள் ஏதாவது ஓர் அறையில் தெரிந்த நபர் யாரோடாவது பேசிக் கொண்டிருப்பாள். இந்தியக் கழுகுகளைப் பற்றிய எண்ணம் நம் மனசுக்குள் இருப்பதால் யாராவது சிறிது நேரம் காணாமல் போனாலும் கலவரப்படுகிறோம்...." – ஹில் பேசிக் கொண்டிருக்கும் போதே இண்டர்காமுக்குப் பக்கத்தில் இருந்த டெலிபோன் 'விருட் விருட்' என்று துடித்தது.

ஹில் ரிஸீவரை எடுத்துக் குரல் கொடுத்தார்.

"ஹலோ."

ரிஷப்ஷனிலிருந்து பேசினார்கள்..

"ஸார்... வெளியிலிருந்து உங்களுக்கு போன்."

"கொடுங்கள்."

இணைப்பு கிடைத்ததும் மறுபடியும்



''ஹலோ!'' என்றார் ஹில்.

''கமிஷனர் ஸார்... வணக்கம்.''

''யார்....?''

''ஓர் இந்தியக் கழுகு....! நான் இப்படிச் சொன்னதும் உடனே பதற்றமாகி, நான் எங்கேயிருந்து பேசுகிறேன் என்பதை எக்சேஞ்ச் மூலமாய்க் கண்டுபிடிக்க முயலாதீர்கள். நான் ஒரே வாக்கியம்தான் பேசப் போகிறேன். இந்த ஹோட்டலின் செவன்த் ப்ளோரில் — 701—ஆம் எண்ணுள்ள அறைக்கு நேரே — ஹோட்டல் நிர்வாகம் ஒரு ஃப்ளவர்வாஸ் வைத்திருக்கிறார்கள். அந்த ஃப்ளவர்வாஸைக் கிளறிப் பாருங்கள்.''

''டொக்!''

ரிஸீவர் மறுமுனையில் வைக்கப்பட, பட்டனைப் 'படபட'வென்று தட்டி 'ஹலோ ஹலோ' என்று கத்தினார்... கமிஷனர் ஹில். மறுமுனை 'கொர்' என்று குறட்டை விட்டுத் தூங்கவே, ரிஸீவரை வைத்து விட்டு எழுந்தார்.

''பூபேஷ் என் கூட வாங்க.''

''போன்ல யாரு ஸார்?''

''ஓர் இந்தியக் கழுகு...''

''என்ன சொன்னான்?''

அவன் டெலிபோனில் சொன்னதைச் சொல்லிக் கொண்டே ஏழாவது மாடியை நோக்கி ஓட்டமும் நடையுமாய்ப் போனார் ஹில். படிகளில் மூச்சு வாங்கிக் கொண்டே உயர்ந்து ஏழாவது மாடி வராந்தாவைத் தொட்டு, 701—ம் எண்ணுள்ள அறைக்கு முன்பாய் ஒரு ஸ்டூலின் மேல் உட்கார்ந்திருந்த ப்ராஸ் ஃப்ளவர்வாஸை நெருங்கினார்கள். அதன் தலையில் சொருகி வைத்திருந்த பிளாஸ்டிக் பூங்கொத்துகளை எடுத்து விட்டு உள்ளே பார்த்தார்கள். உள்ளே ஒரு பழுப்பு நிறக் கவர்.

ஆர்வமாய் ஹில் எடுத்தார்.

கவரின் நெற்றியில் இந்தியில் டைப் செய்யப்பட்ட வாசகம் ஒன்று — 'கமிஷனரின் அவசரப் பார்வைக்கு' — என்று சொல்லியது. ஹில் கவரின் வாயைக் கிழித்து உள்ளே இருந்த கடிதத்தை உருவிப் பார்த்தார்.

இந்தியில் டைப் வரிகள் ஓடியிருந்தன. மெல்லிய குரலில் வாய் விட்டுப் படித்தார்.

''எங்கள் 'கெடு' இன்று இரவு ஒன்பது மணிக்கு முடிகிறது. அதற்கு முன்பாக நாங்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை உங்களுக்குக் காட்ட ஒரு சிறிய ஷாக் ட்ரீட்மெண்ட்தான் இந்தக் காணாமல் போன கயல்விழி. அவள் இதே ஹோட்டலில் பத்திரமாய் இருக்கிறாள். நாங்கள் விரும்பியிருந்தால் அவளைக் கொன்று மொட்டை மாடியில் இருக்கும் வாட்டர் டேங்க்கில் மிதக்க விட்டிருக்க முடியும். ஆனால் நாங்கள் அப்படி செய்யாமல் அந்தக் கயல்விழிக்கு உயிர்ப் பிச்சை கொடுத்திருக்கிறோம். மொட்டை மாடியில் உள்ள தட்டு முட்டுச் சாமான்கள் போட்டு வைத்திருக்கும் ஓர் அறையில் வாயில் பிளாஸ்திரியை ஒட்டி அந்தக் கயல்விழியை நாற்காலியில் கட்டிப் போட்டிருக்கிறோம். போய் அவளை விடுவித்து உச்சிமோந்து கொள்ளுங்கள். அதே நேரத்தில் கீழ்க்கண்ட வாசகங்களையும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். நாங்கள் கொடுத்த கெடு இன்று இரவு ஒன்பது மணியோடு முடிகிறது. அதற்குள் எங்கள் கோரிக்கைக்கு நீங்கள் பச்சைக் கொடி காட்ட வேண்டும். நாளைய தினசரிகளில் பாராளுமன்றம் கலைக்கப்பட்ட செய்தி பிரதானமாக வர வேண்டும். அப்படியில்லாமல் எங்கள் கோரிக்கையை நீங்கள் உதாசீனப்படுத்தினால் ஒலிம்பிக் வீரர்கள் சம்பந்தப்பட்ட இறப்பு விழாக்களை நாங்கள் விமரிசையாகக் கொண்டாடுவோம்'' — இப்படிக்கு இந்தியக் கழுகுகள்.

கடிதத்தைப் படித்து முடித்த ஹில்லின் நெற்றிப் பரப்பு பூராவும் 'பொல்'லென்ற வியர்வை. உறுமினார்.

''ராஸ்கல்ஸ்!''

பூபேஷ் பரபரத்தார்.

வாங்க.... ஸார்... முதலில் மொட்டை மாடிக்குப் போய்க் கயல்விழியைப் பார்ப்போம்....''

இருவரும் ஓடினார்கள். மாடிப்படிகளில் தடதடத்து, இருட்டான மொட்டை மாடிக்கு வந்தார்கள். மாடிப் பரப்பு பூராவும் பழைய மூர்மார்க்கெட்டின் கசகசப்பு. ஏராளமான காலி பீர் பாட்டில்கள். கிழிந்த சோபா — கம்பெட்டுகள். உடைந்த நாற்காலிகள், நசுங்கின பாத்திரங்கள். அந்த மெலிதான இருட்டில் உன்னிப்பாய்ப் பார்த்துக் கொண்டே நடந்து, அந்த சிதிலமான அறைக்கு முன்னால் வந்து நின்றார்கள்.

ஹில் கதவைத் தள்ளினார். அது மெல்லப் பின்வாங்க, உள்ளே இருட்டு ஒட்டியிருந்தது. ஜாக்கிரதையாய்க் காலை எடுத்து வைத்து அறைக்குள் நுழைந்தார். பூபேஷ் தொடர்ந்தார். சொன்னார்.

''சுவரில் ஸ்விட்ச் இருக்கும். பாருங்கள் ஸார்.''

ஹில் பக்கவாட்டுச் சுவரைத் தடவி ஸ்விட்சைத் தேடிக் கண்டுபிடித்துப் போட்டார். ட்யூப்லைட் ஒன்று யோசித்து யோசித்து எரிந்து அறையை வெளிச்சத்தில் நிரப்ப, அறைக்கு நடுவே —

தட்டு முட்டுச் சாமான்களுக்கு இடையில், கைகளும் கால்களும் கட்டப்பட்ட நிலையில் உருண்டு கிடந்தாள் கயல்விழி. வாயில் போஸ்டர் மாதிரி பிளாஸ்திரியை ஒட்டியிருந்தார்கள். ஹில் வேக வேகமாய்ப் போய் அவளருகே குனிந்து கட்டுகளை அவிழ்த்து விட, பூபேஷ் தன் பங்குக்கு அவள் வாயில் ஒட்டியிருந்த பிளாஸ்திரியை எடுத்தார்.

விடுபட்ட கயல்விழி பெரிது பெரிதாய் மூச்சு வாங்கினாள். ஹில்லையும், பூபேஷையும் மலங்க மலங்கப் பார்த்தாள். ஹில் அவளுடைய கன்னத்தைத் தட்டினார். ''ரிலாக்ஸ்... மிஸ் கயல்விழி! உங்களை இப்படிக் கட்டிப் போட்டது யாரு?...?''


இப்போது ஹார்லிக்ஸ்
கூடுதல் கால்ஷியத்துடன்
Great Nourisher
"வளரும் குழந்தைகளுக்கு கூடுதல் கால்ஷியம் தேவைப்படுகிறது."
ஹார்லிக்ஸ் இப்போது கூடுதல் கால்ஷியத்துடன் செறிவூட்டப்பட்டிருக்கிறது—வளரும் குழந்தைகளின் வலுவான பற்களுக்கும், ஆரோக்யமான எலும்புகளுக்கும், குடும்பத்தினர் அனைவரின் ஆரோக்யத்திற்கும் மிகவும் முக்கியமானது.
ஹார்லிக்ஸ் முழுவதும் இயற்கை ஊட்டச்சத்துக்கள் நிறைந்தது—புரோட்டீன், விட்டமின்கள், மினரல்கள் மற்றும் கார்போ ஹைட்ரேட்டுகள்—இவை சக்தியும், ஊட்டமும் அளிக்கின்றன. இப்போது கூடுதல் கால்ஷியத்தினால், கூடுதல் ஆரோக்யம்.
சிறந்த ஊட்டச்சத்துமிக்க பானம்
Horlicks
WITH EXTRA CALCIUM
The Great Nourisher
HTA-6037 TAM

அவள் இன்னமும் மிரள மிரள விழித்தாள். திகிலான பார்வையில் சுற்று முற்றும் பார்த்து விட்டுத் திக்கலான குரலில் உதடுகளை அசைத்தாள். "ஸ... ஸ... ஸார்... நா... நான் ரெஸ்டாரெண்ட் போக... ரூமை விட்டு வெளியே... வந்... வந்த போது... ஒரு பே..பேரர் எதிர்ப்பட்டு... 'பூபேஷ் உங்களை மட்டும் மொட்டை மாடிக்கு வரச் சொன்னார்... ஏதோ ஒரு முக்கியமான விஷயம் பேச வேண்டுமாம்...' என்று சொன்னான். நா... நானும் உ... உ... உடனடியாய் மொ... மொட்டை மாடிக்குப் போனேன். அங்கே யாருமில்லை... கீழே திரும்ப நினைத்த போது... பின்பக்கமிருந்து யாரோ என் மேல் பாய்ந்து மருந்து நெடி அடிக்கிற கர்ச்சீப்பை என் முகத்தில் பொத்தினார்கள். நான் மயக்கமாயிட்டேன். கொஞ்ச நேரத்துக்கு முன்னால் ஞாபகம் வந்து கண் விழித்துப் பார்த்த போது — இந்த ரூம்ல என்னைக் கட்டிப் போட்டு..."

கயல்விழி பேச முடியாமல் மறுபடியும் மூச்சு வாங்கினாள். ஹில்லும், பூபேஷும் அவளை மெதுவாய் எழுப்பி அறைக்கு வெளியே அழைத்து வந்தார்கள்.

பூபேஷ் கேட்டார்: "கயல்விழி மொட்டை மாடிக்கு நான் உன்னை வரச் சொன்னதாக எந்த பேரர் வந்து சொன்னான்னு அடையாளம் காட்ட முடியுமா...?"

"அவனோட முகம் எனக்கு ஞாபகமில்லை ஸார். விஷயத்தைச் சொன்னதுமே அவன் திரும்பிப் போயிட்டான்."

"மொட்டை மாடியில் உன்னைக் கட்டிப் போட்டவர்களையும் நீ பார்க்கவில்லை...?"

"இல்லே... ஸார்."

ஹில் குறுக்கிட்டுச் சொன்னார்: "கயல்விழி! உங்களுக்கு நேர்ந்த இந்தச் சம்பவத்தை வெளியே யாரிடமும் சொல்ல வேண்டாம். சொன்னால் விளையாட்டுக் குழுவைச் சேர்ந்த மற்றவர்கள் வீணாகக் கலவரமடைந்து விடுவார்கள். குற்றவாளிகளை ரகசியமாய் 'ஸ்மெல்' செய்வதற்கு நீங்கள் உதவ வேண்டும்...."

கயல்விழியின் அறைக்கு வந்தார்கள். உள்ளே நுழைந்த போது —

டெலிபோன் அநாதையாய்க் கதறிக் கொண்டிருந்தது. ஹில் வேகமாய்ப் போய் ரிஸீவரை எடுத்தார்.


"ஹலோ..."

மறுமுனையில் ஒரு குரல் சிரிப்போடு சொன்னது. "இனிமேலாவது அந்த முட்டாள் அமைச்சர் காமோத்திடம் பேசி ஒரு புத்திசாலித்தனமான முடிவுக்கு வாருங்கள் கமிஷனர் ஸார். இல்லாவிட்டால் நாளையிலிருந்து ஒலிம்பிக் வீரர் வீராங்கனைகளின் 'இறப்பு விழா' ஆரம்பமாகும்..."

"டொக்!"

ரிஸீவர் வைக்கப்பட்டது.

(தொடரும்)



பாடசாலை வித்யார்த்திகளின் ஒரு பகுதி.

முதலமைச்சர் அலுவலகத்திலிருந்து 1953—ஆம் ஆண்டில் ஒரு நாள் போலீஸ் சூப்பரின்டென்டெண்ட் (சி.ஐ.டி. பிரிவு) டுக்கு ஒரு கடிதம் வந்தது.

"சில காலம் முன்பு நான் டில்லியில் இருந்த போது இந்த நபர் பற்றி ஓர் அறிக்கை கோரியிருந்தேன். அது விவரம் என்ன ஆயிற்று என்று எனக்கு இதுவரை தெரிய வரவில்லை. உங்கள் ஆவணங்களில் இவரைப் பற்றி ஏதாவது விவரம் இருக்கலாம். தயவு செய்து ஆய்வு நடத்தி எனக்கு அறிக்கை சமர்ப்பிக்கவும்.

— ஸி. ராஜகோபாலாச்சாரி."

ஆங்கிலத்தில் டைப் செய்யப்பட்டிருந்த இந்தக் கடிதத்தில் ஒரு விசேஷம் என்னவெனில் "தயவு செய்து" என்ற வார்த்தையை ராஜாஜி தமது கைப்பட எழுதிச் சேர்த்திருந்ததுதான். கையெழுத்துப் போடு முன்னர் டைப்பிஸ்ட் செய்திருந்த ஒரு



கோஸ்வாமிஜியை மடக்கிய ராஜாஜி

பிழையைத் திருத்தியது மட்டுமல்ல அதன் மூலம் தமது பெருந்தன்மையையும் வெளிப்படுத்தியிருந்தார். அந்தப் பெருந்தன்மை இந்த நிகழ்ச்சி தொடர்பான வேறு பல சம்பவங்களின் போதும் எப்படிப் பிரகாசித்தது என்று பார்க்கலாமா?

"இந்த நபர்" என்று ராஜாஜி குறிப்பிட்டிருந்தது ஒரு சுவாமிஜி பற்றி. கடிதத்துடன் இணைக்கப்பட்டிருந்த விவரத்தில் அவரைப் பற்றிய சில தகவல்கள் இருந்தன. ஸி.ஐ.டி. பிரிவினர், ராஜாஜியின் கடிதம் கிடைத்ததும் சுறுசுறுப்பாக இயங்கி சுவாமிஜியைக் கண்டுபிடித்தனர். அவரைப் பற்றி மேலும் பல விஷயங்களைத் துப்புத் துலக்கினர். அவர் தம்மை "பூஜ்ய டாக்டர் யோகாசார்ய கோஸ்வாமிஜி" என்று வர்ணித்துக் கொண்டார். அவர் பெற்றுள்ள பட்டங்கள் **M.Y.Ph., D.Y.Sc., F.R.** என்று நீண்டன. பலவித நோய்களைப் போக்கும் சக்தி தமக்கு இருப்பதாகக் கூறிக் கொண்டார்!

சுவாமிஜி ஓர் ஊருக்குப் போய் ஒரு ஹோட்டலைத் தேர்ந்தெடுத்துத் தங்குவார். அவருக்குக் காரியதரிசியாக ஒரு பெண்மணி பணியாற்றினாள். சுவாமிஜி வந்து விட்டார் என்று செய்தி பரவியதும் பல நோயாளிகள் அவருக்குப் போன் செய்வார்கள். காரியதரிசி ஒவ்வொருவருக்கும் தேதி, நேரம் குறிப்பிட்டுச் சொல்வாள். தனித் தனியே ஒவ்வொருவரையும் சந்தித்தாலும் சுவாமிஜி எல்லாருக்கும் ஒரே மருந்துதான் கொடுத்தார். அது ஒரு பாட்டிலில் அடைக்கப்பட்டிருந்த 'காந்த சக்தி மிக்க நீர்'! 'தினம் நாலு வேளை, ஒவ்வொரு ஸ்பூன் சாப்பிட வேண்டும்' என்பார். சூரியனை அதிகாலையில் சற்று நேரம் பார்க்கச் சொல்வார். நீள மூச்சை உள்ளுக்கிழுத்து நிறுத்தி, வெளியேற்றும் பிராணாயாமத்தைக் கற்றுத் தந்தார். இவ்வளவுதான். இதற்குத் தலா ஐந்து ரூபாய் தந்து விட்டுப் போவார்கள். சுவாமிஜி ஐம்பதாயிரம் வரை ரொக்கமாகச் சேர்த்திருந்தார். அந்த நாளில் ஐம்பதாயிரம் மிகப் பெரிய தொகை!

இந்த விவரமெல்லாம் போலீஸுக்குத் தெரிய வந்ததும் அவர் மீது வழக்குப் போடத் தீர்மானித்தனர். ஆனால் வழக்கை விசாரித்த மாஜிஸ்திரேட், 'இது கிரிமினல் வழக்கு ஆகுமா?' என்று சந்தேகம் எழுப்பினார். 'ஸிவில் வழக்காக வேண்டுமானால் போடலாம்' என்று அபிப்பிராயப்பட்டார். இதனால் போலீஸாருக்குச் சற்றுத் தயக்கம் ஏற்பட்டது. மேலும் வழக்கை

யொட்டி சுவாமிஜியை விசாரித்த போது அவர் ராஜாஜியையே தமது 'கன்ஸல்டண்ட்' என்றும் மேற்கு வங்க ஆளுனராக இருந்த போது தம்மை அவர் வரவழைத்துப் பேசியிருப்பதாகவும் கூறினார். இது போலீஸாருக்கு அதிர்ச்சி அளித்தது. ஸி.ஐ.டி. சூப்பரிண்டெண்டெண்ட் ராஜாஜியைச் சந்திக்க நேரம் கேட்டார். உடனே தேதியும் நேரமும் குறிப்பிடப்பட்டது. ராஜாஜி புன்னகையுடன், consultant என்ற சொற் பிரயோகமே தவறு என்பதைச் சுட்டிக் காட்டினார். 'நான் வைத்தியத்துக்கு அவரை அணுகினால் அவர்தான் consultant; நான் consultor ஆவேன்' என்று விளக்கினார். பிறகு,'இத்தகைய மோசடி ஆசாமியை நான் வைத்தியம் செய்து கொள்ள அணுகுவேன் என்று கூறுவது எனது அறிவாற்றலை அவமதிப்பதாகும்' என்றார். சாட்சியாக அழைக்கப்படவும் உடனே சம்மதித்தார்.

ராஜாஜியே சாட்சி கூறச் சம்மதித்து விட்டார் என்றதும் மாஜிஸ்திரேட்டுக்கு இருந்த சந்தேகம் பறந்தோடி விட்டது! ராஜாஜி நீதிமன்றத்துக்கு வரத் தேவையில்லை, அவர் சார்பில் வழக்கறிஞர் வந்தாலே போதும் என்றார். ஆனால் ராஜாஜியோ தாமே நேரில் வருவதாகக் கூறி விட்டார்.

குறிப்பிட்ட தினத்தில் தமது பல்வேறு அலுவல்களுக்கிடையேயும் வினாடி பிசகாமல் நீதிமன்றத்துக்கு வந்து சேர்ந்த ராஜாஜி, நேரே நடந்து போய்ச் சாட்சிக் கூண்டில் ஏறி விட்டார்! எல்லோரும் பதறிப் போய் விட்டனர்! மாஜிஸ்திரேட் மேடைக்கு எதிரே ஒரு நாற்காலி போட்டு, அதில் அமருமாறு கேட்டுக் கொண்டார். ஆனால் ராஜாஜி, முதலமைச்சரானாலும் நீதியின் முன் 'அனைவரும் சமம்' என்ற கருத்தில் தமக்கென்று தனிச் சலுகை ஏதும் தேவையில்லை என்று கூறி விட்டார். மாஜிஸ்திரேட் தர்மசங்கடம் அடைந்தார். கடைசியில் அவரது வேண்டுகோளுக்கு இணங்க நாற்காலியில் அமர்ந்தார் ராஜாஜி.

குறுக்கு விசாரணையில் கோஸ்வாமிஜியின் வக்கீல் கேட்டார்: "நீங்கள் மேற்கு வங்க கவர்னராக இருந்த போது எமது கட்சிக்காரரை 15.8.47—இல் சந்தித்தீர்கள்; அவரது யோக சக்திகளை நேரில் பார்த்துப் பாராட்டினீர்கள், அல்லவா?"

உடனே ராஜாஜி தமது உதவியாளரிடமிருந்த பிரீஃப்கேஸைத் திறக்கச் செய்து அதிலிருந்து ஒரு தடிமனான புத்தகத்தை எடுத்தார். "யுவர் ஆனர்! இது மேற்கு வங்க ஆளுனர் மாளிகையின் விசிட்டர்கள் புத்தகம். அங்கு என்னைக் காண அனுமதி கோரி வருவோர் அனைவரது பெயர்களும் விலாசத்துடன், அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட தேதி நேரத்துடன், இதில் குறிப்பிடப்பட்டிருக்கும். 15.8.47 சுதந்திர தினத்தன்று இவரைப் பார்க்கவே எனக்கு நேரம் இருந்திருக்க முடியாது. பார்க்கவும் இல்லை என்பதை இந்தப் புத்தகம் நிரூபிக்கும்" என்றார்.


அந்தக் கணத்தில் கோஸ்வாமிஜியின் விதி நிர்ணயிக்கப்பட்டு விட்டது. கோஸ்வாமிஜியின் வக்கீல் வாயடைத்துப் போனார்!

ராஜாஜி சிறந்த வழக்கறிஞர் ஆனபடியால், எப்படி சாட்சி சொல்ல வேண்டும் என்பது அவருக்குத் தெரிந்திருந்தது. 'இவரைப் பார்த்ததாக ஞாபகம் இல்லை' என்பது போல் பட்டும் படாமலும் பேசாமல், 'சுவாமிஜியுடன் தமக்குத் தொடர்பே கிடையாது' என்று கூறியதுடன் அதற்குச் சாட்சியத்தையும் முன் யோசனையுடன் கல்கத்தாவிலிருந்து வரவழைத்து விட்டார்!

ராஜாஜியின் அறிவாற்றலுக்கும், நீதி—நேர்மை உணர்வுக்கும், எளிமைக்கும், பெருந்தன்மைக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகிறது இந்த நிகழ்ச்சி.

(வழக்கை ஆராய்ந்தவர் இன்ஸ்பெக்டர் என். ராமச்சந்திரன்; அவருக்கு உதவி செய்தவர் அன்று சப்-இன்ஸ்பெக்டராக விளங்கிய கட்டுரை ஆசிரியர்.)

— வி. எல். பார்த்தசாரதி



அவன்: "என்னது? ஆபீஸ்ல நீ தூங்குவதைப் பார்த்தும், 'மானேஜர்' ஒண்ணுமே திட்டலையா?"

இவன்: கேட்டாரே, 'உங்களுக்குப் 'பிரமோஷன்' கிடைப்பது மாதிரி கனவு கண்டேன்'னு, சொல்லித் தப்பிச்சுக் கிட்டேன்...

— ஆர். வசந்தகுமார்.

சிவாஜி எப்போது காமெடி நடிகரானார்?



• 'ஏழை'!

* ஸ்ரீராம், சீர்காழி.

? புதன் இரவு டீ.வி.யில் 'நம்ம' ஸ்ரீகாந்த் வழங்கிய கிரிக்கெட் நிகழ்ச்சி எப்படி?

! ஓப்பனிங் பேட்ஸ்மன் 'டொக்கு' வைப்பது போலிருந்தது.

* க. தியாகராஜன், நெய்வேலி.

? நெடுஞ்செழியன் தமது அணிக்குத் தென்னை மரச் சின்னம் கேட்டிருக்கிறாரே?

! ஏதோ, சின்னமாவது சின்னத்தனமாக இராமல், உயரமாக இருக்கிறதே!

* சி. மணி, புத்தனாம்பட்டி.

? தேர்தல் வரப் போகும் இந் நேரத்தில் வீட்டுச் சுவரைப் பாதுகாத்துக் கொள்ள வழி சொல்லுங்களேன்?

! அந்த வழி தெரிந்திருந்தால் என் வீட்டுச் சுற்றுச் சுவர் **AIDMK — JJL** க்காக இதற்குள் 'ரிசர்வ்' ஆகியிருக்காதே! ஒரே ஒரு ஆறுதல். வோட்டுச் சாவடி வீட்டுக்கு அருகேயே இருப்பதால் தேர்தல் தினத்துக்கு முந்தைய நாள் அரசுச் செலவில் சுண்ணாம்பு அடித்து விடுவார்கள் என்று எதிர்பார்க்கலாம்.


* இந்திரா கோபாலன், திருச்சி.

? சில நாட்களுக்கு முன் டீ.வி.யில் விஜயலக்ஷ்மி பண்டிட்டின் நேர்முக பேட்டி. எமர்ஜென்ஸி காலத்தை 'இருண்ட காலம்' என விமர்சிக்க ஆரம்பித்தார். உடனே டீ.வி. நிருபர், வேறு கேள்வி கேட்டுத் திசை திருப்பி விட்டார். நியாயமா?

! மகாராஷ்டிராவில் ராஜீவை 'மிமிக்ரி' செய்து நடித்த கலைஞரை விரட்டிப் பிடித்து இழுத்து வந்து மன்னிப்புக் கேட்கச் செய்திருக்கிறார்கள். அவ்வாறிருக்க, டீவியில் இந்திராவை விமர்சனம் செய்ய அனுமதித்தால் அந்த நிருபரின் கதி, நிலைய டைரக்டரின் கதி எல்லாம் என்ன ஆவது! எனவே நிருபரின் நிலையில் இருந்து பார்த்தால் அவர் செய்தது நியாயம்தான்!

* அர. மணிவண்ணன், சென்னை.

? "நான் ஏழை" என்று சிவாஜி கூறுகிறாரே, அவர் எப்போது காமெடி நடிகரானார்?



• பாதாம்பருப்பு!



• மரச் சின்னம்!



* ஓய்ந்த தாரிகை



• என்ன சாதிக்கும் இயக்கம்?

! அரசியலில் புகுந்த போது.

* கே. மகேஷ், தியாகதுருகம்.

? ரஷ்யாவில் நில அதிர்ச்சியால் ஐம்பதாயிரம் பேர் உயிர் இழந்திருக்கிறார்களே?

! இதயத்தைப் பிழிந்தெடுத்த சோக நிகழ்ச்சி. மிகுந்த நல்லெண்ணத்துடன் அமெரிக்கா சென்று ஐ.நா.வில் ஆயுதக் குறைப்பு பற்றி அறிவித்தார் கொர்பசேவ். எதிராளியை எதிர்பாராமல், தம் வரையில் இவ்வாறு அறிவித்தது மாபெரும் தீரச் செயல். அப்படிப்பட்டவர் அவசரம் அவசரமாக இந்தச் சோகத்தைச் சந்திக்கத் திரும்ப நேர்ந்தது கொடுமையிலும் கொடுமை. ருஷ்யர்களின் தேசப்பற்றும்,

கடுமையாக உழைக்கத் தயங்காத மனப்போக்கும் அழிந்தவற்றை விடச் சிறப்பாகப் புனர் நிர்மாணம் செய்து காட்டும். எனினும் மடிந்து போன பல்லாயிரக்கணக்கான உயிர்களை யாரால் மீட்க முடியும்?

* எம். இராமராஜ், சென்னை — 57. *

? சி.எஸ்.ஸின் தூய்மை இயக்கம், எம். எஸ். உதயமூர்த்தியின் மக்கள் சக்தி இயக்கம் இவை தமிழகத் தேர்தலில் என்ன சாதிக்கும்?

! உங்களை இப்படி ஒரு கேள்வி கேட்க வைத்திருப்பதே ஒரு சாதனைதான். உங்களைப் போல் சில பலர் சிந்திக்க ஆரம்பித்தால் அதுவும் சாதனைதான். கண்மூடித்தனமாகத் தலைவரைப் பின்பற்றி ஹீரோ வழிபாடு செய்யும் மக்களை சுயமாகச் சிந்திக்க வைப்பது சுலபமல்ல. சிரமசாத்தியமான இந்த நல்ல காரியத்தில் ஈடுபடும் எவரும் பாராட்டுக்குரியவர்களே.

* ஆர். நாகராஜன், செம்பொனார் கோயில்.

? டீ.வி.யில் தங்களுக்குப் பிடித்த அம்சம்?

! மூன்றாவது சானல்!

* சாஸ்திரி வெங்கடேஷ், கோழிக்கோடு.

? 'தி.மு.க. ஒரு காய்ந்த மாடு. விட்டால் அது கஜானாவைக் காலி செய்து விடும்' என்று பண்ருட்டியார் கூறியுள்ளாரே?

! இவர்கள் காலி செய்தது போகக் கஜானாவில் மிச்சம் மீதி ஏதாவது இருக்கிறதா என்ன?

* கி. இலக்குவன், வேப்பங்குளம்.

? அரசுப் பேருந்துகளை விடத் தனியார் பேருந்துகளில் கட்டணங்கள் அதிகமாக வசூலிக்கப்படுகிறதே?

! அவற்றில் கூரை ஒழுகப் பயணிகள் குடை பிடிக்க வேண்டிய அவசியம் இராதே! போலீஸிடம் திடீரென்று கோபம் கொண்டு, பாலத்தின் குறுக்கே தாறுமாறாக நின்று, போக்குவரத்தை ஸ்தம்பிக்கச் செய்து, பயணிகளுக்கும் தொல்லை கொடுக்கத் தனியார் பஸ்களுக்குத் தெரியாதே!

* ஜி. நேசன், சிவகங்கை.

? இந்தியா — நியூஸிலாந்து ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் நம்மவரின் வெற்றி பற்றி?

! • சோன்பப்டி சாப்பிட்ட மாதிரி சுவைத்தது. அதிலும் ஸ்ரீகாந்த் எடுத்த விக்கெட்டுகள் இடையிடையே கிடைத்த பாதம் பருப்புக்கள்!

* எஸ். செல்வன், மதுரை.

? சமீபத்தில் தாங்கள் மனவேதனையுற்ற நிகழ்ச்சி?

! நல்ல ஓவியரும் நண்பருமான வர்ணத்தின் மறைவு. ஒரு கதைக்குப் படம் போடுவதென்றால் சிலர் முகம் முகமாகப் போட்டு விடுவார்கள்; சிலர் கவர்ச்சிக்கு முக்கியத்துவம் தருவார்கள்; சிலர் பாவத்தைக் கவனிப்பார்கள்; சிலர் மட்டுமே நிகழ்ச்சிகளைப் படம் போடும் திறமை உடையவர்கள். வர்ணம் கொஞ்சம் பழங்கால ஆசாமி என்றாலும் கதையில் வரும் ஒரு நிகழ்ச்சியை அப்படியே படம் பிடித்துக் காட்ட வல்லவர். வாஷ், லைன் இரண்டிலும் மன்னர். துரிதமாகப் படம் போடக் கூடியவர் என்பது மேலும் ஒரு பிளஸ் பாயிண்ட். தூரிகை ஓய்ந்து விட்டது.

* ஆர். ரத்தினசாமி, புன்செய்புளியம்பட்டி.

? பதினெட்டு வயதானவருக்கு வாக்குரிமை என்ற காரணத்தை முன் வைத்து தமிழகத்தில் தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டால்?

! அதான் ஏற்கெனவே கேஸ் போட்டு விட்டார்களே? எனவே அந்த வாய்ப்பு இருக்கத்தான் செய்கிறது. தவிர, தேர்தல் சீர்திருத்த மசோதாவில் குறைகள் நிறையவே உள்ளன. எனவே நாடாளுமன்றம் அதனைக் கமிட்டி பரிசீலனைக்கு அனுப்பி சட்டமாவதைத் தாமதப்படுத்துவது நல்லது.

* இசை இருப்பப்பட்டார்!



*** ரூ. 20 பரிசு பெறுபவர்:**
எம். இராமராஜ்,
104, காமராஜ் நகர்,
எர்ணாவூர்,
சென்னை — 57.



ராமஸ்வாமி என்றொரு இளைஞர். பி.டெக்., எம்.பி.ஏ. படித்திருந்த இளம் விஞ்ஞானி. அவர் ஒரு புதுமையான தயாரிப்புக்கு மத்திய அரசிடம் லைசென்ஸ் பெற்று வைத்துக் கொண்டு முதலீட்டுக்காக அலைந்து கொண்டிருந்தார். பலர் சந்தேகக் கண்ணோடு பார்த்தார்கள்; சிலர் தட்டிக் கழித்தார்கள், அல்லது காலதாமதம் பண்ணிக் கொண்டிருந்தார்கள். இந்த விஷயம் ஸ்ரீராம் நிறுவன நிர்வாகிகள் காதுக்கு எட்டியது. உடனே அவரை அழைத்துப் பேசினார்கள். அந்தப் புதுமைத் தயாரிப்புக்கு PET என்று பெயர். அது பெட்ரோலியம் சுத்திகரிப்பில் ஓர் உபபொருள். இந்த பெட் கண்ணாடி போன்றது; ஆனால் உடையாது. இலேசானது என்பன கூடுதல் வசதி. இதனால் தயாரிக்கப்படும் பாட்டில்களில் விஸ்கி முதல் சூரியகாந்தி எண்ணெய் வரை எதை வேணுமானாலும் அடைத்து விற்பனைக்கு விநியோகிக்கலாம். பொருளின் குணம் மணம் மாறாது; கெடாது. இதற்கு ஜப்பானியத் தொழில் நுணுக்க ஒத்துழைப்பையும் பெற்றிருந்தார் ராமசாமி.

''முதலீடு செய்கிறோம்'' என்றனர் ஸ்ரீராம் நிறுவனத்தினர். ''அது மட்டுமல்ல; எங்கள் நிர்வாகத் திறனையும் உனக்குத் தருகிறோம். உனது விஞ்ஞான ஆற்றல் செயல்படட்டும். தொழிலகத்தைத் தொடங்கு'' என்றனர். 'தமது தொழிலை ஸ்ரீராம் நிறுவனத்தினரே சுவீகரித்துக் கொண்டு விடுவார்களோ?' என்ற தயக்கம் ராமசாமிக்கு ஏற்பட்டது. இதைப் புரிந்து கொண்ட ஸ்ரீராம் நிறுவன நிர்வாகிகள் இன்னொரு யோசனை கூறினார்கள்: ''ஐந்து வருஷம் தொழிலை நடத்து. உனக்கே சுயமாகத் தொழிலை நிர்வகிக்க முடியும் என்ற நம்பிக்கை பிறந்தால் எங்கள் பங்கு முதலீட்டைக் கடனாகக் கருதித் தவணைகளில் திருப்பித் தர ஏற்பாடு செய். தொழிலை நீயே எடுத்துக் கொண்டு விடலாம். அல்லது நிர்வாகத் தொல்லை நமக்கு வேண்டாம் என்று நீ கருதினால் எங்களிடமே அந்தப் பொறுப்பு நீடிக்கட்டும்!''

ராமசாமிக்கு இந்த யோசனை பிடித்திருந்தது. ஸ்ரீபெட் நிறுவனம் உருவாகி விட்டது! இவ்வாறு இளைஞர்களுக்குத் தொழில் துறையில் உதவ நூதன யுக்திகளுடன் முன் வந்திருக்கிறது ஸ்ரீராம் நிறுவனம். சிட் ஃபண்டு நடத்துவது; டெபாஸிட்தாரர்களிடம் பணம் பெற்று வாகனங்கள் வாங்கக் கடன் வசதி அளிப்பது என்பன போன்ற நிதி நிறுவனப் பணிகளைச் செய்து வந்தவர்கள், தற்போது உற்பத்தித் துறையிலும் புகுந்திருக்கிறார்கள். தொழிலகங்கள் தோன்றச் செய்து வருகிறார்கள்.

தொழிலுக்கு வந்தனை– ஸ்ரீராமின் புதிய சிந்தனை!

அது மட்டுமா? கலை இலக்கிய விழாக்களையும் அமர்க்களமாக நடத்த ஆரம்பித்திருக்கிறது ஸ்ரீராம். அண்மையில் நடந்த பாரதி விழாவில் சொற்பொழிவுகள், கவிதாஞ்சலி, பட்டிமன்றம் தவிர, சிறந்த நாவல்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன; பாரதி புகழ் பரப்பியவர்கள் கௌரவிக்கப்பட்டனர். ராஜ்குமார் பாரதி, பாரதி பாடல்களைப் பாடி அவையினரைப் பரவசத்தில் ஆழ்த்தினார்.

ஏ.வி.எம். ராஜேஸ்வரி கல்யாண மண்டபம் பக்கமாக அன்று சென்றவர்கள் அரங்கத்தில் வழிந்த கூட்டத்தையும் சாலையோரம் நெருக்கி அடித்து நின்ற கார்கள், ஸ்கூட்டர்கள், சைக்கிள்களையும் பார்த்து விட்டு, 'அடேயப்பா! பாரதிக்கு இப்படி ஒரு யோகமா!' என்று வியப்புடன் எண்ணியபடியே விழா மண்டபத்துள் நுழைந்தனர்.

— நமது நிருபர்

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: இ. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 4 3154 3, 4 34 157; ஆசிரியர் குழு அலுவலகம்: 4 34 14 5.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 104 /—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 280/—; விமானத் தபால் ரூ. 680/—.
அறுமாதச் சந்தா — உள்நாடு: ரூ. 52/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 14 0/—; விமானத் தபால் ரூ. 34 0/—.


அழகோ அழகு ஃப்ரெஸ்கா
அற்புத நறுமணம் ஃப்ரெஸ்கா
Godrej
Fresca
Godrej
Fresca
THE GOOD VALUE T
Fresca
கோத்ரெஜ்

REGISTERED No. M 4392
Registered as a Newspaper in Sri Lanka

